
THEDAL 14

# தேடல்



எஞ்சி இருப்பவை

கரித்துண்டுகளாயினும் எழுதியே முடிப்போம்!

தமிழர் வகைதுறைவள நிலைய வெளியீடு

www.tamilarangam.net

## பாரிஸ் நகரில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை
## மாற்றுக்கருத்துக்களுக்கு படுகொலை தீர்வாகாது

தமிழ் மக்களின் தேசியவிடுதலைப்போராட்ட முன்னோடிகளில ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களின் உந்து சக்திகளில ஒருவரும், எழுத்தாளரும், (ASIA) வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் 'பாரீஸ்' நகரில் அவரது வீட்டில்வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மே மாதம் 1ம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கிகளுடன அவரது வீட்டுக்குள் நுழைந்த இரண்டு தமிழர்கள் அவரது மனைவி, குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகிவிட்டனர். 1970 பதுகளில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கிய தமிழ்இளைஞர்களை 'பயங்கரவாதிகள்' என்ற போர்வையில் சிறீலங்கா அரசு கைது செய்தவேளையில் சபாலிங்கம பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச்சிறையிலிருந்து தப்பியோடும் போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறீலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர், அதன்பின் பிரான்ஸ வந்து சேர்ந்தார்.

புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும் ஈழத்து கலை இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். "asiaஎனி எனும் இடம் பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராக இருந்து, சமகாலக் கவிஞர்களான வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைப் புத்தகங்களையும் 'தராக்கி'யின் "Eluding Peace" ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்திரிகை எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் "புத்தளம் வரலாறும் மரபுகளும், இயக்க உட்படுகொலைகளை சித்தரிக்கும் "புதியதோர் உலகம்எனி, இலங்கையில் தடை செய்யப்பட்ட 1958 கலவரத்தைப பற்றிய தாச்சி வித்தாச்சி அவர்களின் "Emergency 58" மற்றும "யாழ்ப்பாண வைபவ மாலை" போன்ற நூல்கள் மீண்டும் வடிவம் பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள பற்றிய யாழ் பல்கலைகழக ஆசிரியர்குழுவின் அறிக்கைகளை பிரஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின அரசியல், இலக்கிய செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக்கொண்டார்.

மாற்றுக்கருத்துக்களையும், சிந்தனைகளையும் துப்பாக்கிக குண்டுகள் மூலம் அழித்தொழித்து வருகின்ற தமிழ் இயக்கங்களின் பாரம்பரியத்தில் மற்றெல்லோரையும்விட முன்னணியில் இருந்துவரும தமிழீழ விடுதலைப்புலிகளே சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு பொறுப்பானவர்கள் என்று நாம் கருதுகின்றோம். பாரிஸ் நகரில் இருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான 'லோறன்ஸ் திலகர்' சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று மறுத்திருந்த போதிலும் அதனை ஏற்றுக்கொள்வதில எங்களுக்கு மிகுந்த சந்தேகம் உண்டு.

அனுராதபுரம் சிங்கள மக்கள் படுகொலை, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், ஆகியோரின் படுகொலை, கிழக்கு முஸ்லீம்களின படுகொலை பல சம்பவங்களுக்கு தாம் பொறுப்பாளிகளல்ல என்று அறிக்கை விட்டு பின்னர் மெல்ல மெல்ல உண்மையை வெளிப்படுத்துதல் என்பது விடுதலைப்புலிகளின் வரலாற்றில உள்ளார்ந்து காணக்கிடக்கிறது.

மாற்றுக்கருத்துள்ளவர்களை அழிப்பதென்பதை இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமே இதுவரை மேற்கொண்டிருந்தவர்கள் இன்று ஐரோப்பாவிலும் தமது படுகொலைகளை ஆரம்பித்திருப்பது சர்வதேச அரங்கில் விடுதலைப்போராட்டத்தின் நலன்களுக்கு மிகுந்த பாதகமாக அமையுமென்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் போராட்ட நலன்களுக்கு மேலாக சொந்த இயக்க நலன்களை முதன்மைப் படுத்துவது ஒட்டுமொத்தமாக தமிழ்பேசும மக்களின் எல்லாவகையான சுதந்திரத்தையும் புதைகுழியில் தள்ளுவதாகும் இது மிகவும் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்லாது வெறுக்கப்பட வேண்டியதுமாகும்.

விடுதலைப் போராட்டத்தையும், மானிட விழுமியங்களையும் நேசித்து இரண்டையும் இணைத்து இயங்கி வந்த ராஜினி திரணகம போன்ற புத்தி ஜீவிகளின் படுகொலையின் வரிசையிலேயே இன்று சபாலிங்கம் அவர்களின் படுகொலையும் நிகழ்ந்துள்ளது.

ராஜினி, சபாலிங்கம் போன்றோர்கள் தனிமனிதர்களாக இயங்கி வந்தபோதும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளுக்கும் சர்வதேச அளவில் கிடைத்து வந்த அங்கீகாரமே கொலையாளிகளை பீதியுறப்பண்ணியுள்ளது.

தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்படவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றை கூறும் "யாழ்ப்பாண வைபவமாலைஎனி என்னும் நூலின் புதிய பதிப்பொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ்பேசும்மக்கள் தொடர்பான தொல்லியல ஆவணங்களையும் வரலாற்று நுல்களையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். 70பதுகளிலிருந்து இன்றுவரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்களுடனும், வாக்குமூலங்களுடனும், புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியின் இறுதிக்கட்டத்தில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமை பலத்த சந்தேகத்தினை எழுப்புகின்றது. கடந்த காலப் போராட்டத்தில் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துவிடுமென கொலையாளிகள அச்சமுற்று இருந்தனர்.

இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக உலகமெங்கும் குரல் எழுப்பப்பட வேண்டும் என்பது மிகவும் குறைந்த பட்சத தேவையாகும். எதிர்காலத்தில் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்காக தீவிரமாக உழைப்பதே விடுதலையை நேசிக்கும ஒவ்வொருவரதும் கடமையாக இருக்கவேண்டும்.

மாற்றுக்கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் அழித்து விடலாம் என்று நம்புபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே ஆவர்.

சபாலிங்கம் அவர்களின் பணியை இன்னும் ஒருபடி மேலெடுத்து செல்ல உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

***மனிதம்(சுவிஸ்). சமர்(பிரான்ஸ்). சிந்தனை(ஜேர்மனி) தேனீ(ஜேர்மனி) தூண்டில்(ஜேர்மனி). சுவடுகள்(நோர்வே). தாயகம்(கனடா). தேடல்(கனடா) காலம்(காலம்). நான்காவது பரிமாணம்(கனடா) தாகம்(லண்டன்). சுமைகள்(நோர்வே). ஊதா(ஜேர்மனி). ஈழபூமி(லண்டன்). விழிப்பு(கனடா). செரியா குரல்(கனடா). Intercultural Media Point(Grenzenlos-Germany) South Asian Solidarity Committee(Germany) Campaign for Democracy in Sri Lanka(Canada) Sri Lankans for Human Rights(Canada) Gesellschaft fur demokratie und kuluer(Germany)***

***( 06.05.1995)***

www.tamilarangam.net

தேடல் 14 — 1994
ஆனி — ஆடி

தமிழர் வகைதுறைவள நிலைய
வெளியீடு

தொடர்புகளுக்கு

THEDAL
P.O.BOX NO 274
STATION 'F'
TORONTO,ONT
M4Y 2T7
CANADA

மே 1ம் திகதி பிற்பகல் 2.45 மணியளவில் அளவில் - திரு. சபாலிங்கம் படுகொலை
மே 24ம் திகதி அதிகாலை 1மணியளவில் தேடகம் நூலகம் தீ வைக்கப்பட்டது. எம்மக்கள் மீதான அடக்குமுறைக்கெதிராய் குரல் கொடுப்போம் ஒன்றிணைவோம்

K. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

PUBLISHED BY
TAMIL RESOURCE CTR
566,PARLIAMENT ST
TORONTO,ONT
M4X 1P8
CANADA

## உள்ளே.

**எமது பக்கம்** ஆசிரியர் குழு 2

**சூரிய கிரகணம்—பொய்யும், மெய்யும்** சுரேஸ் .......... 4
இந்தியர்கள் கொலம்பஸ் குழுவினருக்கு உணவு தந்துதவ மறுத்தனர். அதே சமயத்தில் கொலம்பஸ் சமீபத்தில் நடக்கவிருந்த சந்திரகிரகணத்தை சாதுரியமாக தன் உதவிக்கு பயன்படுத்திக்கொண்டார்.

**ஹரிபாவும் இரண்டு எருதுகளும்** குமார் மூர்த்தி .......... 6
பெருங்குரல் எடுத்து 'ஓ' வென்று கத்த வேண்டும்போலிருந்தது அவருக்கு. அப்படியே உட்கார்ந்து விட்டார். கண்கள் மூடிக்கொண்டு வந்தன.

**மே தினம்** குமரன் .......... 9
ஒரு நாளில் நேர அளவீடு இன்றி அடிமைகளாக தொழிலாளரை முழு நேரமும் உழைக்க வைத்ததை எதிர்த்துப் போராடி எட்டு மணித்தியால வேலை நேரத்தை உத்தியோகபூர்வமாக்கிய தொழிலாளரின் வெற்றியை குறிக்கும் நாள்தான் மே முதலாம் திகதி.

**தேசிய விடுதலைப்போராட்டத்திற்கான மூன்றாவது பாதை** சமர் 10

**சமர் வேலைத்திட்டம் தேசியவாத தூக்குக்கயிறு** நான்காம் அகிலம் 12
முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உருவாகும் ஒரு புதிய "புனிதமான" இயக்கத்தின் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றுவிடலாம் என நினைப்பது ஒரு பிற்போக்கு கனவு.

**ஏழைகள்** குமணன் .......... 25
தனது வயிற்றிற்காய் கொண்டுவந்திருந்த நேற்றைய பாண்துண்டுகளை சாப்பிட்ட மிகுதி வயிற்றுக்கு தண்ணீரை நிரப்பிக்கொண்டாள்.

**இரு தலைப் பொறிக்குள் கிழக்கு** ராஜன் கூல் .......... 19
பாராளுமன்ற தெரிவுக்குழு தனது முதலுரிமையாக கிழக்கை வடக்கிலிருந்து துண்டாடி மேலும் இப்பிரச்சனையை விளங்கிக் கொள்வதில் ஆர்வமில்லை எனக்காட்டியது.

**விடையளின் எழுதுகோல்** .......... 29
எமது வருங்கால சமூகத்திற்கு தேவையான தமிழ் சார் நூலகமோ தமிழ் சார் துறைகளோ வளர்க்கப் படவுமில்லை கட்டப்படவுமில்லை. எமது அடையாளத்தை நோக்கி செல்லும் குழந்தைக்கு கோயில்கள் என்றும் உதவப்போவதில்லை

**ஒலிசர் ஸ்ரோன்** ரதன் .......... 33
அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட சோசலிசத்துக்கு ஈடாகவும், தற்போதைய அமெரிக்காவுக்கு மாறானதுமான ஓர் கருத்தையே ஒலிவர் தேடுகின்றார். இது ஓர்வகையில் முற்போக்கு முதலாளித்துவ வடிவமே. விமர்சனத்துக்குரியதும் கூட

**இருண்ட வெளிச்சம்** .......... 45
"இஞ்ச பாருங்கோ நாங்கள் அவங்களின்ர கோயிலடிப்பக்கம் போறது அவ்வளவு நல்லாயில்ல. போனால் சாப்பிட வேணும். தண்ணிகுடிக்க வேணும்.

**மனிதவுரிமை அறிக்கை** .......... 47
கிழக்கில் எக்காரணமுமின்றி பாதுகாப்பு படையினராலும் அவர்களோடு இணைந்த தமிழ் ஆயுதக்குழுக்களினாலும் கைது செய்யும் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.
34

**கருவிலுக்குறிய** ரதன் ..........

**வாசகர் பக்கம்** .......... 27
ஒரு உண்மையான முற்போக்குவாதியின் முதல் கடமை இருவருக்கும் இடையில் உள்ள உறவை ஆராய்ந்து அதில் எப்படி சமத்துவம் ஏற்படுத்தலாம் என்று யோசித்து நடைமுறைக்குள்ளாக்குவதாகும்.

**ஈழத்து பூராடனார்** செவ்வி .......... 40
தமிழே தெரியாமல் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்நிலையினை தமிழாராய்ச்சி மாநாட்டு நிறுவனம் களையுமென்றுதான் எத்தனையோ நாட்டிலிருந்து உதவி கிடைத்தது. இருந்தும் ஒன்றுமே நடக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சுந்தரம் தொடங்கி..............

தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு முக்கியமான படிகளிலும் மாற்றுக் கருத்துக் கொண்டோரை அழித்தொழிப்பதன் மூலமே பிரதான தமிழ் ஆயுதக்குழுக்கள் தமது இருப்பினை நிலை நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் உண்மையில் மாற்றுக் கருத்துக்கள் உத்வேகம் பெற்றன. மறு பிரதிபலிப்பாக அழிப்பு நடவடிக்கையை செய்தவர்களின் போராட்டத்திலோ, தமது கொள்கையிலோ இருந்த நம்பிக்கை யீனத்தையே இக் கொலைகள் காட்டு கின்றன.

பலரது கொலைகளுக்கு யார் காரணம் என்று நேரடி சாட்சியங்கள் இருப்பதில்லை. இருந்தாலும் வெளிவருவதில்லை. ஆனால் கொலையுண்டவர்கள் கொலையுண்ட கால கட்டத்தில் யாருக்கு? எவ்வகையில்? இடைஞ்சலாக இருந்தார்கள் என்பதி லிருந்தே காரணகர்த்தாக்கள் யார் என்று கணிக்கப்படுகின்றன.

உலகின் பல போராட்டங்களிலும் தனிநபர் படுகொலைகள் நடந்தது உண்மைதான். ஆனால் விடயம் என்னவென்றால் அரசியல் ரீதியாகப் பார்ப்பின் அவை எதிர்க்கருத்துக் கொண்டோர் மீது நடத்தப்படும் செயல். ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நடக்கும் தனிநபர் படுகொலைகள் மாற்றுக்கருத்துக் கொண்டோர்மீதும், விமர்சனம் செய்வோர்கள் மீதும், ஏன் போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள் மீதும். எதிர்க்கருத்து எது? மாற்றுக்கருத்து எது? என்று பிரித்துப்பாக்க தெரியாதவர்களின் அறியாமைதான் இது.

சபாலிங்கம் என்ற ஈழவிடுதலைப் போராட்ட முன்னோடி எதற்காக போராட்டத்தையும், புலிகளையும் விமர்சித்தார்? அவருக்கு போராட்டத்தில் அக்கறையிருந்த காரணத்தினால். புலிகள் தமிழ் மக்கள் சார்பில் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதனால். அவர் சிங்கள இனவாத அரசின் பக்கத்திலிருந்தா . போராட்டத்தை விமர்சித்தார்? விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியான இவர் ஆரம்பத்தில் சிறீலங்கா இனவாத அரசாங்கத்தை எதிரியாகக் கணித்த காரணத்தினால்தான் போராட்டத்தில் ஈடுபட்டார். சபாலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்டதை அறிந்த மக்கள் அனுதாபம் தெரிவிக்க கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் பெருமளவில் கூடுவது கூட புலிகளினால் காவலிடப்பட்டு தடுக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் இருந்து வந்த மக்கள் தெரிவித்துள்ளனர். எதிரியின் நடவடிக்கைகள் எதிர்க்கப்பட வேண்டும். சபாலிங்கத்தின் நோக்கம் எமது பொது எதிரியை எதிர்ப்பதாகவே அமைந்தது. விமர்சனம் என்பது விடுதலைப் போராட்டத்தை நோக்கியும், மக்கள் சார்பில் நிற்பவர்களையும் நோக்கித்தான் அமையும். இது தவிர்க்கவியலாதது. புலிகளின் அரசியல் தமிழ் மக்களின் உண்மையான விடுதலையை பெற்றுத் தருமா? என்பது இரண்டாவது விடயம். ஆனால் தமிழ் மக்களிடமிருந்து வரும் விமர்சனங்களை யும், மாற்றுக் கருத்துகளையும் விடுதலைப் புலிகள் அனுமதிப்பதில்லை. எனவே அவர்களின் போராட்டம் மக்கள் ஜனநாயகத்தை மறுக்கிறது. இப்படுகொலை களுக்கு முக்கிய பொறுப்பை புலிகள் வகித்தபோதிலும் மற்றைய தமிழ் ஆயுதக்குழுக்கள் ஒருபடி மேலேபோய் எதிரியான இலங்கை அரசுடனே சங்க மித்து விட்டனர்.

**மக்களுக்கும், மாற்றுக்கருத்துகளுக்கும் சுதந்திரம் வேண்டுமென்று யாரிடம் போய் முறையிடுவது?**

## மறைமுக கொலையாளிகள்

போராட்டத்தில் ஈடுபட்ட ஆயுதக்குழுக்கள் படுகொலைகளில் ஈடுபட்டால் ஒரு காலத்திலாவது வெளிவராமல் போகாது. ஆனால் இவற்றின் பின்னணியில் செயற்படும் மறைமுககொலையாளிகள் ஆபத்தானவர்கள். இவர்கள் கொலையாளிகளாக எப்போதுமே வெளித் தெரியமாட்டார்கள். சமூகப் பொறுப்புடன் செயல்ப்பட வேண்டிய பத்திரிகையாளர்கள் பலர் வெறும் வியாபார நோக்கத்துடன் ஊதுகுழல்களாகவும், அராஜகங்களை ஊக்குவிக்கும் முகமாகவும் நடந்து கொள்வது என்பது "இப்படியான கொலைகளுக்கு மறைமுகக் காரணங்களா கின்றன" இந்த எழுத்தாளர்களது சமூகப் பொறுப்பிற்கு சில உதாரணங்கள். —

"தேசிய விடுதலைப் போராட்ட முன்னோடி" சபாலிங்கத்தின் கொலையை சில பத்திரிகைகள் அவரை "ரெலோ ஆதரவாளர் கொலை" என்று வர்ணித்தன. (இந்த வகையில் இவரையும் அரசு சார்பு துரோகக்குழுக்களுடன் இணைத்து இப்படுகொலைக்கு நியாயம் கற்பிக்கின்றனர்)

**—'தேடகம்' நூலகம் எரிக்கப்பட்டமையை, "விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்துவதற்காகவே" நூலகம் எரிக்கப ட்டதாகவும் விமர்சனங்கள் வெளியிடப் பட்டன.**

—அண்மையில் பார்த்த ஒரு தமிழ்ப் படம் ஒன்றில் வில்லத்தனமான ஒரு அரசியல்வாதி சரிந்து செல்லும் செல்வாக்கை நிலைநிறுத்த தனது மனைவியை தானே கொன்றுவிட்டு பழியை எதிரணியினர் மீது போட்டு மக்களின் அனுதாபத்துடன் தான் தனது செல்வாக்கை சரிசெய்து கொள்ள முனைகின்றார். இதுதான் நிலமை. தற்போது கனடாவில் தேடகம் நூல்நிலையமும், தமிழர் வகைதுறைவள நிலையமும் (இரண்டும் ஒன்றுதான்) தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.............. — ஜெயகுமார், ஈழநாடு(30. 04. 1994)

—தேடகம் நடாத்தும் சிறு குழுவினர் தமிழத் தேசிய நீரோட்டத்திற்கு எதிராக எதிர்நீச்சல் அடிப்பவர்கள் என்பது எல்லோருக்கும் . . . . . இந்த எரியூட்டு தமிழீழவிடுதலைக்கும்,விடுதலைப்புலிகளுக் கும் எதிரான சதியின் ஒரு கூறு என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.—ஈழமுரசு 06. 06. 1994

—தற்கொலை போராட்டத்தை விமர்சித்து நாடகம் போட்டதை திரித்து போராளிகளை கொச்சைப் படுத்தியதாக கூறி 'நாடகம் போட்டவர்களை மண்டையில் போடவேண்டும்' என்று வெளிப்படையாகவே எழுதினார் ப. சிறீஸ்கந்தன். (மண்டையில் போட்டவர்களே இதைக் கூறுவதில்லை)

இப்படியான எழுத்தாளர்கள் தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். இவர்களது சுயரூபம் கூடிய சீக்கிரம் அம்பலமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இதுவரை நாம். . .

தேடகம் நூலகம் எரிக்கப்பட்டதை அடுத்து எம்மைப்பற்றியும், நூலக எரிப்பு பற்றியும் பலத்த விமர்சனங்களை குறிப்பாக 'தேடல்' குழு பெற்றுக் கொண்டது.

மக்களிடமிருந்து வரும் விமர்சனங்களில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவற்றை கண்டுள்ளோம். குறிப்பாக 'தேடல்' குழுவினர் அரசியல், சமூக விடயங்களில் தமது உணர்வுகளின வெளிப்பாடாக தேடலை வெளிக கொணர்ந்தமையும், அதே வேளை தமிழ் மக்களின் உணர்வுகளை பற்றிய வெளிப்பாடுகளில் தவறு இழைத்தமையும் சுட்டிக்காட்டப்பட்டது. எமது இத்தவறு பற்றிய உண்மையை ஏற்றுக் கொள்கிறோம்.

மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அடக்கு முறைகளிலும் பார்க்க புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம கொடுக்கப்பட்டது எனவும் விமர்சனம முன்வைக்கப்பட்டது. இது பற்றி சிறு குறிப்பு சொல்வது நல்லது. தேடல் குழுவினராகிய நாம் எண்பதுகளின ஆரம்பத்தில் அரசியல் தொடர்புகள் ஏற்பட்ட காலங்களிலேயே இலங்கை அரசாங்கத்தை தமிழ்மக்களது முழு எதிரியாகவே முடிவெடுத்தோம். கடந்த காலங்களில் இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு் எதிராக இயங்கும் பல அமைப்புகளுடன இணைந்து எதிர்ப்பு தெரிவித்தே வந்துள்ளோம். ஆனால் விடுதலைப்புலிகள் பற்றிய நாம் கொண்ட கருத்து எதிர்க்கருத்து என்ற அடிப்படையில் அல்ல. மாற்றுக்கருத்து என்ற அடிப்படையிலேயே. இதனை வெளிப்படுத்திய முறைகளில ஏதாவது தவறு இருந்தால ஏற்றுக்கொள்கிறோம்.

விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் விடுதலை சார்பாக போராடுபவர்கள் அவர்களின் அரசியல் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பெற்றுத தருமா? என்ற கேள்வி எழுந்த காரணத்தினால்தான் மாற்றுக் 'கருத்துகளுக்கு ஜனநாயகம் வேண்டும என்ற போராட்டமும் ஆரம்பித்தது. இந்த நிலையில் புலிகள்மீதான விமர்சனமும தவிர்க்கவியலாதது. எதிர்க்கருத்துக்கும், மாற்றுக்கருத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒன்று எதிரியும் அவனது கருத்துக்களும் எதிர்க்கப்பட வேண்டி யவைகள். இரண்டு தமிழ்ப் பேசும் மக்கள் சார்பில் நிற்பவர்களின் பிழைகள விமர்சிக்கப்படல் வேண்டும். கண்டிக்கப படல் வேண்டும். இவற்றில் இலங்கை அரசு பற்றிய எமது நிலைப்பாடு முதலாவது. விடுதலைப்புலிகள் பற்றிய எமது நிலைப்பாடு இரண்டாவது. அரசு சார்பு தமிழ ஆயுதக்குழுக்களும் அரசுடன் சங்கமித்து விட்டதால் இலங்கை அரசாங்கம் பற்றிய நிலைதான் இவர்களைப்பற்றிய எமது நிலைப்பாடும். தற்போதைய அரசு சார்பு தமிழ் ஆயுதக்குழுக்கள் அரசாங்கத்துடன் இணைய வேண்டிய காரணத்திற்கு புலிகளின் பங்கு பிரதானமானது என்றாலும எந்தக் காரணமும் எதிரியுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகச் செயற்படுவது மன்னிக்க முடியாத ஒன்று.

அரசுக்கெதிரான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது என்றால் அது புலிகளின் அரசியலை அப்படியே ஏற்றுக்கொள்வது என்று அர்த்தம் ஆகாது. புலிகளின போராளிகளுடைய தியாகம் அளப்பரியது. இதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. அதற்காக கண்மூடித்தனமாக எல்லாவற றையும் ஏற்கமுடியாது. பிழை என்று யார் செய்தாலும் கண்டிக்கும் மனோபாவம மக்களுக்கு உருவாக வேண்டும். எந்தப் போராட்டத்தையும் நெறிப்படுத்தும் பிரதான அம்சம் இதுதான். மக்களின் மௌனமே போராட்டத்தின் மிகப்பெரிய பின்னடைவு.

புலிகளை 'நம்மவர்கள் என்பதற்காக எது செய்தாலும் ஆதரித்து பத்தோடு பதினொன்றாக நின்று கூக்குரலிடுவதில போராட்டத்திற்கு பயனேதுவும் இல்லை. அதிலும் கனடாவில் சங்கம் ஆரம்பித்தல், பத்திரிகை வியாபாரம் பண்ணுதல், கனடிய அரசநிதி பெறுதல் போன்ற இலாபகரமான தொழில்களுக்கு 'புலிசார்பு' என்பது நல்ல முதலீடாகும். உண்மையில் இந்த முதலீட்டாளர்கள்தான் புலிகளின போராட்டத்தை கொச்சைப் படுத்து கிறார்கள். நாம் நேரடியாக பிழைகளை கூறுகிறோம். கொச்சைப்படுத்தவில்லை!

ஊரில் தேசிய விடுதலைப போராட்டத்தில் பங்கெடுக்காதவர்களும், ஏன ஆயுதப்போராட்டம் தொடங்கிய காலங்களில 'சிறுபிள்ளை வேளாண்மை' என்று எதிர்த்தவர்களும் இங்கு வந்து நிலை கொண்ட பின்னர் புலிகளின் தீவிர ஆதரவாளர்களாகியது மட்டுமல்லாது எம்மை இலங்கை அரசு சார்பானவர்கள் என்றும், துரோகக்குழுக்கள் என்றும் பிரச்சாரங்கள் வேறு.

இவர்களுக்கு தெரியுமோ தெரியாது 'தேடல் 2' வது இதழில் பின அட்டையில் வரதராஜப்பெருமாள் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து நின்று மது அருந்தும் படத்தையும், ஈ. பி. ஆர். எல். எவ் இனர் இந்திய இராணுவத்துடன இணைந்து செய்த கொலைகள் தொடர்பான படத்தையும் பிரசுரித்ததால் 'புலி ஆதரவாளர்கள்' என்ற பட்டமும் ஒரு பகுதியினரால் முன்வைக்கப்பட்டது. தேடலில் வெளிவந்த இப்படங்கள உலகத்தமிழர் பத்திரிகையில் மறுபிரசுரம செய்யப்பட்டது.

உங்கள் கருத்துக்கள் சரியானவை என்னும் துணிவிருந்தால்! எமது கருத்துக்களை கருத்துக்களால் மோதி வெல்லுங்கள். அவதூற்றுப் பிரச்சாரங்களை விடுங்கள் உங்கள் அவதூற்றுப பிரச்சாரங்கள் உங்கள் கருத்துக்களில் உள்ள குழப்பமே.

—ஆசிரியர் குழு—

தவிர்க்கவியலாத காரணங்களால் 'தேடல்' வெளியீட்டில் ஏற்பட்ட தாமதத்திற்கு மனம் வருந்துகின்றோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரிய கிரகணம்— பொய்யும், மெய்யும்



— சுரேஸ் சுப்பிரமணியம் —

**பொய்—**

நான் அறிந்த முதல் சூரிய கிரகணம் எனக்கு ஐந்து வயதிருக்கும் போது இடம்பெற்றது. அப்போது அம்மம்மா எனக்குத் தந்த விளக்கம், "பாம்பு சூரியனை விழுங்குவதுதான் சூரிய கிரகணம்" "எப்படி பாம்பு அவ்வளவு உயரம் போனது?""அது பறநாகம் பறந்து போகும்" பல வருடங்களுக்கு பிறகு சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில வரும்போது பூமியின் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் சூரியன் தற்காலிகமாக மறையும் என்ற உண்மையை அறியும் வாய்ப்பு கிட்டியது. இந்த நிலையில வைகாசி 10ம் திகதி பிற்பகல் 1.22 அளவில ரொறன்ரோ மாநகரத்திலும சுற்றுவட்டாரத்திலும் கிரகணம உச்சகட்டத்தை அடைந்தபோது, ஏனொ தெரியவில்லை பாம்பு சூரியனை விழுங்குவதில்லை என்ற உண்மையை தெரிந்து கொண்டு கிரகணத்தை பார்க்கும போது பாதி உற்சாகம் இல்லாமல போனதென்னவோ உண்மை.

எமது கலாச்சாரத்தில பாம்பு போல, வேறு கலாச்சாரங்களில் வெவ்வேறு நம்பிக்கைகள். உதாரணமாக சீனாவில் 'ட்ராகன்' என்றழைக்கப்படும பறக்கும் முதலை அல்லது பாம்பை ஒத்த ஒரு ஜந்து சூரியனை விழுங்குவதாக ஒரு நம்பிக்கை. சூரிய கிரகணங்களை முன் கூட்டியே சொல்லக்கூடிய வான சாஸ்த்திரங்களுக்கு சீனாவில் சில ஆயிரம்ஆண்டுகளுக்கு முன் நல்ல கிராக்கி. ஆனால் இவர்கள் சரியாக கிரகணம இடம்பெறும் தேதியை சொல்லாத மட்டில் மரணதண்டனை இவர்களுக்காக காத்திருக்கும். மேலும் சீன மக்கள மற்றவர்களுக்கு ஒருபடி மேலே போய 'ட்ராகனை' வெருட்டுவார்கள். தாரை, தப்பட்டை, வெடிகள் என்று பலவிதமாக சப்தமெழுப்பி சூரியனை விழுங்கிய 'ட்ராகனை' வெருட்டி சூரியனை கக்கச் செய்வார்கள். இது இந்த நூற்றாண்டிலும் பல கிழக்காசிய நாடுகளில் தொடர்கின்றது. சில வருடங்களிற்கு முன்புகூட (வியட்னாமில் என்று நினைக்கின்றேன்) சூரிய கிரகணம் இடம் பெற்றபோது இராணுவ வீரர்கள் வானத்தை நோக்கி சரமாரியாக சுட்டதிலும், வெடிகளைப போட்டதிலும், சிலர் இறந்ததோடு பலர் காயமடைந்தனர். ஆனால் ஒவ்வொரு முறையும் 'ட்ராகன்' இவர்களிற்கு பயந்தோ, அல்லது சூரியனின் வெப்பத்தை தாங்க முடியாமலோ சூரியனை கக்குவதென்னவோ உண்மை.மக்களின் மூடநம்பிக்கைகளை ஒருசில அறிவாளிகள் தங்களின நன்மைக்காக பயன்படுத்தியும் உள்ளனர். 1503 இல் கொலம்பஸின் கப்பல் பழுதுபட்டு, அவரும், அவரின் குழுவினரும் ஜமேக்கா (Jamaica) தீவில் தங்கியிருந்த போது அங்கு தங்கியிருக்கும் 'அராவக்' இந்தியர்கள் கொலம்பஸ் குழுவினருக்கு உணவு தந்துதவ மறுத்தனர். அதே சமயத்தில் கொலம்பஸ் சமீபத்தில நடக்கவிருந்த சந்திரகிரகணத்தை சாதுரியமாக தன் உதவிக்கு பயன படுத்திக்கொண்டார். சந்திர கிரகணம் நடக்கவிருந்த இரவன்று கொலம்பஸ 'அரவாக்' இந்தியர்கள் தங்களிற்கு உதவி செய்யாததால்தான் கடவுள் கோபமுற்று சந்திரனை நீக்கிவிட முடிவுசெய்துள்ளார்' என்று இந்தியர்களுக்கு அறிவித்தார். அவர் சொன்னபடி சந்திரனும் மறைய, இந்தியர்கள பயமுற்று தாங்கள் சகலஉதவிகளையும செய்வதாக அறிவித்தனர். இச்சம்பவத்தை கொலம்பஸ் தனது டயரியில் குறித்துள்ளார்.

கிரகணங்களைப் பற்றிய பல்வேறு மக்களின நம்பிக்கைகள் மாறினாலும் அந்த நம்பிக்கைகளிற்கு அடிப்படையான பயம மட்டும் எல்லோருக்கும் பொதுவானது. சூரியன் அழிந்தால் உயிரினங்கள் எதுவும உயிர்வாழ இயலாது என்ற உண்மையே இந்தப்பயத்திற்கு காரணம். சூரியகிரகணம் சூரியனின் அழிவில்லை என்றால் சூரியனின அழிவு எப்போது இடம்பெறும்? இந்தக்கேள்விக்கு பதிலளிக்க முதல் சூரியன என்றால் என்ன? அதன் வரலாறு என்ன என்று சற்றுப்பார்ப்போம்.

**மெய்—**

வானத்தில் தெரியும் ஆயிரக் கணக்கான நட்சத்திரங்களில் வெற்றுக் கண்ணிற்கு தெரியாத கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம்தான சூரியன். மற்றைய நட்சத்திரங்களிலும் பிரகாசமாக, பெரிதாக தெரிவதற்கு அது பூமிக்கு கிட்ட இருப்பதே காரணம். ஒளி சூரியனிலிருந்து பூமிக்கு வர 8நிமிடங்களிற்கு மேல் எடுக்கிறது. ஆனால சூரியனுக்கு அடுத்து கிட்ட இருக்கும் நட்சத்திரம் (மூன்று நட்சத்திர வடிவமைப்புள்ளது) 'அல்பா சென்ராறி' (Alfha Centauri) இல் ஒளி பூமிக்கு வர நாலு வருடங்கள் எடுக்கும். ஒளி ஒரு செக்கனிற்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர் போகும் என்றால் தூரங்களின வித்தியாசங்களை நீங்களே உணர்ந்து கொள்ளலாம். சூரியனில் உள்ள ஹைட்ரஜன்கள் இரண்டு சேர்ந்து ஒரு ஹீலியத்தை உருவாக்குகையில வெளியிடப்படும், வெப்பமும், ஒளியும்தான் நாம் சூரியனிலிருந்து கிடைக்கப்பெறுவது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த சூரிய சக்திதான் பூமியில் இருக்கும் எல்லா உயிரினங்களையும் இயங்கச் செய்யும் அடிப்படைச்சக்தி. விஞ்ஞானிகளின கணிப்பின்படி சூரியன் 450 கோடி வருடங்களுக்கு முன்பு தோன்றியது (எப்படி என்று தெரிய விரும்புபவர்கள் Astronomy சம்பந்தப்பட்ட புத்தகங்களில் வாசித்து தெரிந்து கொள்ளலாம்) சூரியன் இன்னும 500 கோடி வருடங்களிற்கு கிட்டதட்ட இப்பொதைய நிலையிலேயே இருக்கும். பின்னர் சூரியனில் இருக்கும் ஹைட்ரஜன் அளவு குறையும் போது சூரியன படிப்படியாக விரிந்து சூரியனுக்கு அருகிலுள்ள மெர்க்குரி கிரகத்தை அதனுள் உள்ளடக்கக்கூடிய அளவுக்கு விரியும். இந்த நிலையில் சூரியனின் வெப்பத்தால் பூமியில் தண்ணீரோ உயிரினங்களோ இருக்கமுடியாத நிலை வரும். ஆனால் மனிதன் இந்தக்கட்டத்தில் இருந்தால கிட்டத்தட்ட முழுவானத்தையும் சூரியன மூடியிருப்பதை பார்ப்பான். Red Giant என்றழைக்கப்படும் இந்த நிலையை சூரியன அடைவதைதான் எங்களைப் பொறுத்தவரை உலகின். சூரியனின் முடிவாக இருக்கும். ஆனால் இன்னும் சில சிக்கலான மாற்றங்களுக்கு பிறகு சூரியனின மையப்பகுதி மட்டும் மிஞ்சியிருக்கும். இச்சூரியன் பூமியளவு சிறியதாக இருக்கும். எனவே அடுத்தமுறை சூரியகிரகணத்தை பார்க்கும்போது சூரியன் அழிய பல கோடி வருடங்கள் இருக்கின்றது என்று நினைத்துப்பாருங்கள். 'சப்' பென்று இருக்கும்.வைகாசி 10ம் திகதி தோன்றிய சூரியகிரகணத்தை anular eclips அல்லது 'கங்கண கிரகணம்' என்று சொல்லுவார்கள். இவ்வகைக் கிரகணத்தின்போது சந்திரன பூமியில் இருந்து வழக்கத்துக்கு மாறாக கூடிய தூரத்தில் இருப்பதால் சந்திரன் சூரியனின் மத்திய பகுதியை மட்டும மறைக்கும். ஆனால் Total eclipse என்றழைக்கப்படும் கிரகணத்தின் போது சந்திரன் முழுக்க முழுக்க சூரியனை மறைக்கும். இவ்வகைக் கிரகணத்தின் போது சில நிமிடங்களுக்கு நடசத்திரங்கள், கிரகங்கள் வானத்தில் தெரியும். வைகாசி 10ம் திகதியின் கங்கண கிரகணம்தான் அரிதான கிரகணவகை. ரொறொன்ரோவில் இந்த நூற்றாண்டில் முதலும் கடைசியுமாக தோன்றிய கங்கண கிரகணம்தான் வைகாசி 10ம் திகதி தோன்றியது. ஆகவே இதே வகை கிரகணத்தை மீண்டும் உங்கள் வாழ்க்கையில் பார்ப்பது அரிது.

## யுத்தமும் சமாதானமும்



—நிக்சன்—

**மீண்டும்**
**எங்களுரில்**
**இப்பொழுது பேச்சுவார்த்தையும்**
**கைதிகள் விடுதலையும்.**
**யுத்த நிறுத்தம்?**
**நேற்று வருமென்றார்கள்**
**வரவில்லை! ! ! —பின்**
**இன்று வருமென்றார்கள்**
**இன்னும் வரவில்லை**
**நிச்சயம் யுத்தம் நாளைவரும்.**

**மீண்டும்**
**போர். . . .**
**பொம்பர்களுக்கும்**
**ஹெலிகளுக்கும்**
**எமது வானம்**
**விளையாட்டு இடமாகும்**
**சாக்கிற்கும் பொலித்தீனிற்கும்**
**தட்டுப்பாடு வரும்**
**பாடசாலைகள்**
**அகதிமுகாம்கள் ஆகும்**
**மரணம் மலிந்து விடும்**
**மனித உடல்கள்**
**ஏலம் போகும்— மீண்டும்**
**இதுவே எங்கள்**
**வரலாறு ஆகும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை



# ஹனிபாவும் இரண்டு எருதுகளும்

— குமார் மூர்த்தி —

ஆனமட்டும் அடித்தொண்டையை முன்னுக்கு எடுத்து உச்சஸ்தாயில் அலறியுது வெள்ளையன். திடுக்கிட்டு வாரிச்சுருட்டிக்கொண்டு வந்து பார்த்தார் ஹனிபா. தொழுவத்தில் வெள்ளையன் விழுந்து கிடந்தது. மெல்லிய நிலா வெளிச்சத்தில் அதன் கண்கள் பிரண்டு பிரண்டு வந்தன. பின்னங்கால்களை வெட்டி வெட்டி இழுத்தது. ஒருகணம் திகைத்துப் போனார். பின்பு சுற்றி சுற்றி ஓடிவந்தார். அவருக்கு ஒன்றும் புலப்படவில்லை. வீட்டுக்குள் ஓடி மின்மினி பூச்சிபோல் இருந்த லாந்தரை தூண்டி விட்டார். அது "பளக்" என ஓசை எழுப்பி விட்டு கண்களை கூச அடித்தது. எடுத்து வந்து மறுபடியும் பார்த்தார். வெள்ளையன் அப்படியேதான் கிடந்தது. அக்கம் பக்கத்தில் எந்த ஒரு அரவமும் இல்லை. சுட்டியன் காதிரண்டையும் உயர்த்தி வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தது. வெள்ளையன் பக்கத்தில் உடகார்ந்து தாடையை தடவிவிட்டார். அதன் தலையை தூக்கி நிமிர்த்துவதற்கு முயன்றுபார்த்தார். முடியவில்லை. வீட்டைப்பார்த்து சத்தம் போட்டார். மனைவி வருவதற்கு ஏற்கனவே வாசலைத்தாண்டி விட்டிருந்தாள்.

மறுபடியும் இருவருமாக சேர்ந்து தூக்கிநிறுத்த முயன்றனர். ஒரு வழியாக நந்தி மாதிரி வெள்ளையன் உட்கார்ந்துவிட்டது. வாயில் கொஞ்சம் வெள்ளை நுரை தள்ளியிருந்தது. அதைக் கண்டதும் அவருக்கு உடம்பு லேசாக நடுங்கியது. கண்களில் நீர் முட்டியது. முடிந்தமட்டும் அன்றைய நிகழ்ச்சிகளை கோர்வையாக்கி பார்த்தார். எல்லாமே வழமையாகத்தானிருந்தது. அந்த ஒரு கிழமையாகவே மணியத்தின் நெற் காணியில்தான் வேலை. உழவு, மறுப்பு, கலக்கல் எல்லாமே இந்த வெள்ளையனும், சுட்டியனும்தான். இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக தொடர்ந்து வருவது. ஹனிபா வயலுக்குள் கால்வைத்து விட்டார் என்றால் போதும். மணியம் அந்த பக்கத்துக்கும் போகமாட்டார். வெற்றிலை, பாக்கு தொடங்கி விதை நெல்லுவரை சக வேலையாட்களிடம் கொடுத்தனுப்பிவிட்டு ஆசுவாசமாக உட்கார்ந்திருப்பார். அல்லது வேறுசோலி பார்க்கப் போய்விடுவார். ஹனிபா இம்மி பிசகாமல் காரியம் ஆற்றக்கூடியவர். சொந்த வேலையைப் போலவே நேரம் காலம் பார்க்கமாட்டார். மணியத்தின் வேலை முடியுமட்டும் வேறு எங்கும் போக விருப்பப்பட மாட்டார். எல்லாம் முடிந்து இன்னும் ஒருநாள் பாக்கியிருந்தது.

வெள்ளையன் இப்படி படுத்துக்கொண்டது என்ற வருத்தம் ஒருபுறம், மறுபுறத்தில் மணியத்தின் வேலை முடியவில்லையே என்ற கவலை இவருக்கு நெஞ்சையடைத்தது. மெல்லிய சுடு நீரில் கொஞ்ச உப்பை கரைத்து வரச்சொல்லிவிட்டு வெள்ளையன் பக்கத்திலே உட்கார்ந்து விட்டார். ஆசுவாச மிகுதியால் அதை ஒரு முறை கட்டியணைத்துக் கொண்டார். இயலாத நிலையிலும் தலையை மெதுவாக ஆட்டியது அது.

பிறந்ததில் இருந்தே வெள்ளையனுக்கு ஹனிபாவை தெரியும். எல்லாமே அதுக்கு அவர்தான் என்பதுகூட தெரியும். அதனால் எப்போதும் ஒரு கற்பனைக்கு அப்பாற்பட்ட நன்றியுணர்வு அதனிடம் குடிகொண்டிருக்கும். பிறந்தவுடனேயே தாய்பசு இறந்துவிட்டது. சீக்காளியாகிப் போன வெள்ளையன் கடைசிக்கையாக ஹனிபாவிடம் வந்து சேர்ந்த போது, நாளையோ மறுநாளோ இறந்து விடும்போலிருந்தது. பிள்ளைமாதிரிப் பார்த்தார். மனைவிகூட முணுமுணுத்துக் கொண்டாள். இருந்தும் அதற்கு வேண்டிய வைத்தியம் எல்லாம் செய்து உயிர் கொடுத்து விட்டார். வீட்டை சுற்றி சுற்றியே வரும். குழந்தைகளோடு விளையாடும். காளையான பின்புகூட அதன்குணங்களில் மாற்றம் ஏற்படவில்லை. யாராவது புல்லுப்பிடுங்கிக் கொண்டு வருவார்கள் என்று வாசலைப் பார்த்தபடியே நிற்கும். வெறுங்கையோடு வந்தால் போதும் ஓடிவந்து செல்லமாக முட்டும். வெளியில் போனாலும் அதிக தூரம் போகாது. 'வெள்ளையன்' என்றால்ப் போதும். ஓட்டமாக வந்துவிடும். வெள்ளையென்றால் பால் வெள்ளை. ஒரு மறு கிடையாது. சோப்பு போட்டு குளிப்பாட்டி விட்டு பார்த்தால் தும்பைபூ மாதிரி பளபளப்பாக இருக்கும்.

தற்செயலாகத்தான் சுட்டியன் அவர் கண்களில் பட்டது. வெள்ளையனுக்கு ஏற்ற ஜோடி என்பதை அவர் உடனே கண்டு கொண்டார். வாங்குவதற்குக்கூட அவருக்கு கஸ்டமாகத்தான் இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹனிபா ஒன்றும் வசதியானவர் இல்லை. அன்றாடம் காச்சிதான். ஆனால் கஸ்டஜீவனம் ஒன்றும் கிடையாது. அவருக்கு மாதம் முப்பது நாளும் வேலையிருந்து கொண்டேயிருக்கும். நல்ல வயல்வேலைகாறன் என்று பெயரெடுத்தவர். நெடு நெடு என்று வளர்ந்த தோற்றமும் திடகாத்திரமான உடல்வாகும் உண்டு. தலை நரைக்கத் தொடங்கிவிட்டிருந்தது. வாய்நிறைய வெற்றிலை போட்டுக்கொள்வார். காலைத்தொழுகையை ஒருநாளும் தவறவிடமாட்டார். அதைவிட பள்ளிவாசல் நிர்வாகத்திலும் பங்கெடுத்துக் கொள்பவர். அவர் மட்டுமல்ல தலைமுறை தலைமுறையாக நடந்து வரும் கருமம் அது. புலனுக்கு அப்பாற்பட்டு நியதியாகிப் போன விடையம். தனது கடமைதான் வாரிசுகளுக்கு பிரதிஷ்டம் பண்ணுவது என்ற ஆதாரக்கோட்பாட்டோடு தொடர்பு கிடையாது.

சோடாப்போத்தலுக்குள் விட்டிருந்த உப்பு நீரை மோவாயை உயர்த்தி மிகப்பக்குவமாக போத்தல் வாயை அதன் வாய்க்குள் அமுத்திப்பிடித்துக் கொண்டார். சட சட வென அவ்வளவு உப்பு நீரும் உள்ளே இறங்கிவிட்டது. அவருக்கு மனது கொஞ்சம் நிர்மலமாகி நம்பிக்கை பிறந்தது. மனைவியைப்பார்த்து தேனீர் போட்டுக்கொண்டு வரச்சொல்லிவிட்டு வெள்ளையனுக்கு பக்கத்துத் தூணோடு உட்காந்துவிட்டார்.

ஒரு உடன்பிறப்பின் மேல் வைத்திருக்கும் பாசம்போல்தான் அவருக்கு வெள்ளையன் மேல்பாசம். ஒவ்வொரு பேச்சிலும் அது தொனிக்கும். ஒருநாளும் ஓங்கி அடிக்கமாட்டார். கோபம் வந்தால் அதட்டினாலே போதும். மனம் அறிந்து வேலை செய்யும். கழுத்து மணியை ஒருதடவை ஆட்டிவிட்டு நடையை எட்டிப்போடும். சுட்டியனுக்கு மட்டும் சிலவேளைகளில் அடிவிழும். அதுக்கு கொஞ்சம் முரண்டு பிடிக்கும் சுபாவமும் உண்டு. வேலை முடிந்து இரண்டுக்கும் குளிப்பாட்டி கரையில் விட்டு விட்டுத்தான் அவர் குளிப்பார். சுட்டியன் விறு விறு என்று வீட்டுக்கு வந்துவிடும். வெள்ளையன் நின்று அவரைக்கூட்டிக் கொண்டுதான் வரும். வழியில் மரைக்காயர் கடையில் வெற்றிலை பாக்கு வாங்கி விட்டு கொஞ்சம் அதிகமாக நின்று கதைத்து விட்டால் போதும் பிட்டத்தில் லேசாக முட்டி ஞாபகப்படுத்தும். "அவனுக்கு பசி" என்றுவிட்டு புறப்பட்டுவிடுவார் ஹனிபா.

இப்படித்தான் ஐந்த வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. குளிர் காற்று வெடவெடத்தது. மின்னலும், முழக்கமுமாக வானம் கனத்திருந்தது. தொழுவத்தில் எருதுகளைக் கட்டிவிட்டு வைக்கோலும் பரப்பிவிட்டு வந்து படுத்துக் கொண்டார். நடுச்சாமத்தில் வெள்ளையனின் கத்தல் கேட்டு திடுக்கிட்டு எழுந்து வந்து பார்த்தார். காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்தது. சுற்றி நின்ற தென்னைகள் எல்லாம் பேயாட்டம் போட்டன. மழையும் பலமாக இருந்தது. மீண்டும் நாலைந்து தடவை வெள்ளையன் திமிறித்திமிறி அலறியது. ஆவேசப்பட்டு மூசியது. இந்த அமளியில் மனைவியும் பிள்ளைகளும் விழித்துக்கொண்டு வெளியில் வந்து விட்டனர். சற்று நேரத்திற்கெல்லாம் பக்கத்தில் நின்ற தென்னை சட சட வென முறிந்து வீட்டுக்கூரைமேல் விழுந்து விட்டது. எல்லோரும் வாயடைத்துப்போய் வெள்ளையனை கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

இருந்த இடத்தில் இருந்து நகர்ந்து வானத்தை அண்ணாந்து பார்த்தார். மறைத்துக்கொண்ட மேகங்களூடாக நிலவு மங்கலாக தெரிந்தது. இன்று எத்தனையாம் பிறையாக இருக்கும் என்று யோசித்துப்பார்த்தார். ஞாபகத்துக்கு வர மறுத்தது. விடிவதற்கு கொஞ்ச நேரம்தான் என்று ஊகித்துக்கொண்டார். புதிசாக கூடவே வெளிக்கிட்ட சேவலின் குரல் அபஸ்வரமாக வந்து ஒலித்தது. தூரத்தே ஒரு நாயின் ஊழையும் அவலமாக ஒலித்து தேய்ந்து போனது. என்ன விபரீதமோ என்று அவர் மனம் துணுக்குற்றது. பட்டணத்தில் வேலை செய்யும் அவரது மகனைப்பற்றி ஒரு கணம் நினைத்துக்கொண்டார். எந்த நேரமும் இராணுவம் கண்ட மேனிக்கு சுடுவார்களாம் என்று கடிதம் போட்டிருந்தான். அப்படி ஒன்றும் நடக்கக்கூடாது என்று மனம் ஸ்தூலமாக பிரார்த்தித்துக் கொண்டது. "இன்ஸா அல்லா" என்று சொல்லிக் கொண்டு பள்ளி வாசலைப் பார்த்தார். அது அவர் கண்களுக்கு புலப்படவில்லை.

மனைவி கொண்டு வந்த தேனீரை அவசரமாக குடித்துவிட்டு சோர்ந்து கிடந்த வெள்ளையனை மீண்டும் இருவருமாக தூக்கி நிறுத்தினர். அது மறுபடியும் நந்தி மாதிரி உட்காந்து விட்டது. கொர் கொர் என்று மூச்சு விடுவதற்கும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. மூக்கில் இருந்த நுரையை கையால் வழித்து விட்டார். கை பிசு பிசுத்தது. சால்வைத்தலைப்பால் துடைத்துக்கொண்டார்.

இந்த நேரத்தில் காஜா முகைதீனும் இல்லையே என்று நினைத்ததும் கவலை இருமடங்காகியது. மாட்டு வைத்தியத்தில் விசயஞானம் உள்ளவர். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து விடுவார். குண்டுக்கு பலியாகி கொண்டு வந்து போட்டபோது ஊரே கலங்கிப் போனது.

நிலம் வெளுக்கத் தொடங்கியதும் தன்பிடியை அப்படியே மனைவியிடம் மாற்றிவிட்டு ஓட்டமும் நடையுமாகப்போய் மரிக்காயரைக் கூப்பிட்டார். ஹனிபாவின் குரலைக்கேட்டதும் மரிக்காயருக்கு திகைப்பூண்டி மிதித்தது போல்பட்டது. ஒரு நாளும் இப்படி ஒரு அவலக்குரலை அவர் ஹனிபாவிடமிருந்து கேட்டது கிடையாது.
"என்ன காக்கா" என்று பதட்டத்துடன் வெளியில் வந்தார் மரிக்காயர்.
ஹனிபா விசயத்தை சொன்னதும் "நேத்து சாயந்தரம் வந்ததுதே. . நல்லாத்தானே போச்சு" என்று புருவத்தை நெரித்து சொல்லிவிட்டு பின்னால் திரும்பி 'உசேன்' என்று சத்தம் வைத்தார். தொழுகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த உசேன் அப்படியே வந்து விட்டார்.

மூவருமாகச் சேர்ந்து வெள்ளையனை நிற்கவைக்க முயன்றனர். அது நிற்கமுடியாமல் தள்ளாடிச்சாய்ந்தது. ஒரு வழியாக கால்களை நீட்டிவிட்டதும் உடம்பை ஒரு முறை சிலிர்த்துக்கொண்டு நின்றது. காலில் இருந்து ஒன்று விடாமல் தடவிப்பார்த்தனர். ஒரு காயமோ அடையாளமோ தென்படவில்லை. மறுபடியும் தாடையையும், முன்னங்கால் இருகண்ணையும் தடவிப்பார்த்தார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரிக்காயர் லேசாக உப்பியிருப்பது போல்பட்டது. வியாதியை கண்டு பிடித்து விட்ட மிதப்பில் தலையை மேலும், கீழும் ஆட்டிவிட்டு
"இது முன்னடைப்பானாகத்தானிருக்க வேண்டும்" என்றார். மற்ற இருவரும் தடவிப்பார்த்து விட்டு அப்படித்தானிருக்க வேண்டும் என்று ஒருப்பட்டனர்.
"ரெண்டு வாட்டி நையம் அடிச்சா எல்லாம் காத்தாபறந்திடும். அல்லா மேல பாரத்தப்போடுங்க. ஒண்ணும் வராது" என்ற மரிக்காயரின் வார்த்தை ஹனிபாவின் கண்களை விரியச்செய்தது.
ஆழ்ந்து பெருமூச்சோடு ஒரு முறை அண்ணாந்து பார்த்துக்கொண்டார். மறுபடியும் வெள்ளையனை படுக்கவைத்து விட்டு நையம் அடிப்பதைப்பற்றி கதைத்துக்கொண்டனர். பக்கத்தில் நின்ற சுட்டியன் வெள்ளையனின் ஏரியை நாவால் நக்கிவிட்டுக்கொண்டது.

ஊர் பரபரத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் அங்கும் இங்குமாக ஓடுவதும் அங்கலாய்ப்பதும் பதைபதைப்புதுமாக இருந்தனர். மதிய வெய்யில் வேறு கண்களை கூச அடித்துக்கொண்டிருந்தது.

வேர்த்துக் களைத்து சால்வைத் துண்டால் முகத்தை துடைத்தபடி வந்து கொண்டிருந்தார் ஹனிபா. மூன்று நான்கு மைல்களுக்கு மேல் அலைந்து திரிந்து சேர்த்த பனம்பாளையும், வேப்பம் கொட்டையும் கையில் தொங்கிக் கொண்டிருந்தது. மனம் மட்டும் வெள்ளையன் குணமாகிவிட வேண்டும், அதற்கு வைத்திய வேலைகளை முடித்து வேறு யாருடைய சோடிகளைக் கொண்டாவது மணியத்தின் வேலையை முடித்து விடவேண்டும் என்ற மனம் திரும்ப திரும்ப அசைபோட்டுக் கொண்டிருந்தது.

வளவுக்குள் நுளைந்ததும் முற்றத்தில் மனைவியும் பிள்ளைகளும் நின்று கொண்டிருந்தனர். முகம் இறுகிக் கறுத்து என்றுமில்லாதவாறு சோகம் அப்பிக்கிடந்தது. அவர்களைப்பார்த்ததும் ஹனிபாவுக்கு தலையெல்லாம் கிறுகிறுத்தது. வெள்ளையனுக்குதான் ஏதோ என்று எண்ணிக்கொண்டு ஓடிச்சென்று வெள்ளையனை பார்த்தார். பக்கவாட்டாக சரிந்து கிடந்தது அது. பக்கத்தில் உட்கார்ந்து மூச்சு வருகிறதா என்று பிறங்கையை வைத்து பார்த்தார். லேசா விட்டு விட்டு மூச்சு வந்து கொண்டிருந்தது. அப்போது அவர் இளைய மகள் பின்னால் நின்றுகொண்டு
"வாப்பா எங்களை எல்லாம் போகட்டாம்" என்றாள் வெடித்த குரலில்.
"அம்மா சொல்ல பேச்ச கேளு பிள்ள" என்று கூறிவிட்டு கையில் இருந்த மூட்டையை விறு விறு என அவிழ்த்து பரப்பதொடங்கினார்.

ஆனால் அவர் மனைவியும் ஓடிவந்து "இயக்கக்காறங்க எங்களையெல்லாம் இந்த ஊரைவிட்டே ஒழிஞ்சு போகட்டாமே! . . யல்ல இதென்ன கொடுமை! . ." என்று ஒப்பாரி வைத்ததும்தான் அவருக்கு உறைத்தது. வெள்ளையன் அலறியதும் ஒரு கணம் நினைவுக்கு வந்தது. ஏதோ விபரீதம்தான் என்று மனம் தீர்ப்புக்கூறியது.

அவரையும் அறியாமல் றோட்டுவரைக்கும் நடந்து வந்தார். பார்த்த முகங்கள் எல்லாம் இறுகி விபரிக்க முடியாத சோகத்தில் இருந்தது. அதிகம் பேர் பள்ளிவாசலை நோக்கி போவதும் குழந்தைகள் தெருப்புழுதியில் அங்கும் இங்கும் ஓடுவதும் தெரிந்தது. துப்பாக்கிகளை வெளியில் நீட்டியபடி இரண்டு வாகனங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அவரைக்கடந்து வேகமாகப்போயின. மணியத்தின் இளைய மகன் பின்னால் இருப்பதைக் கண்டவுடன் பழக்க தோசத்தில் 'தம்பி' என்று கூப்பிட வாயெடுத்தவரால் ஏனோ கூப்பிட முடியாமல் போயிற்று. தொண்டைக்குள் ஏதோ வந்து அடைத்துக் கொண்டது மாதிரியிருந்தது.

புழுதி அடங்கிப்போனதும்தான் பக்கத்தில் வந்த மரிக்காயரைக்கூட அவருக்கு தெரிந்தது.
"என்னவாம் காக்கா?"
"ஊரைவிட்டே ஒழியட்டாம்"
"எங்க போறதாக்கும்?"
"அல்லாவுக்குதான் வெளிச்சம்" என்று பள்ளிவாசலை பார்த்து கூறிவிட்டு வேகமாக போய்விட்டார்.

புரிந்ததும் புரியாததுமாக நடக்கக்கூடாதது நடந்து கொண்டிருக்கின்றது என்ற பிரக்ஞை வந்ததும் அவரையும் அறியாமல் கால்கள் வீட்டை நோக்கி நடந்தன. கிட்டப்போய் வெள்ளையனை பார்த்தார். கண்கள் மூடியிருந்தது. காது வேகமாக ஆடிக்கொண்டிருந்தது. சுட்டியன் பக்கத்தில் நின்று நக்கிக் கொண்டிருந்தது.

பெருங்குரல் எடுத்து 'ஓ' வென்று கத்த வேண்டும்போலிருந்தது அவருக்கு. அப்படியே உட்கார்ந்து விட்டார். கண்கள் மூடிக்கொண்டு வந்தன. வயிற்றுக்குள் இருந்த கனத்த பொருள் மேலெழும்பி நெஞ்சை அடைப்பது போலிருந்தது. சிந்தனை மரத்துப்போனது. பரிச்சயமான குரல்கள் எல்லாம் அழுது கூக்குரலிடுவது மட்டும் காதுக்கு கேட்டது. காதையும் பொத்திக்கொண்டார்.

"எல்லோரும் போறாங்க. . . வாப்பா வாங்க வாப்பா! " என்ற இளைய மகள் அவர் கைகளை பிடித்து இழுத்தாள். எந்த சுய உணர்வுமில்லாது எழுந்து நடந்தார். சிறிய துணிமூட்டையோடு மனைவியும் மூத்த மகளும் முன்னுக்கு நடந்து கொண்டிருந்தனர். பிட்டத்தில் ஏதோ முட்டியதும் திரும்பிப்பார்த்தார். சுட்டியன் நின்று கொண்டிருந்தது. அடக்கி வைத்திருந்ததெல்லாம் வெடித்துப்பீறிட அதன் கழுத்தை கட்டிக்கொண்டு விசித்து விசித்து அழுதார். வீதியில் சாரி சாரியாக போகிறவர்கள்கூட பார்த்துக்கொண்டு போயினர். அவரை வலுக்கட்டாயமாக விடுவித்துக்கொண்டு நடந்தாள் அவரது இளைய மகள். கேற்று வரைக்கும் கூடவே வந்தது சுட்டியன். அவர்கள் றோட்டில் இறங்கியதும் கேற்றடியில் நின்றுகொண்டு வெள்ளையனை திரும்பிப்பார்த்தது. பின் இவர்களையும் பார்த்தது.

ஹனிபாவின் கண்ணுக்கெட்டிய தூரம்வரைக்கும் சுட்டியன் கேற்றடியில் நின்று மாறி மாறி பார்த்துக்கொண்டு நின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரொறன்ரோவில் மே தினமும், தமிழ் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும்

மே மாதம் முதலாம் திகதியன்று தமிழர் வகைதுறைவள நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மே தினக்கூட்டம் தேடக நூல்நிலைய மண்டபத்தில் திரு. சண்முகலிங்கம் அவர்களின் தலமையில் இடம்பெற்றது. பேச்சாளர்களாக கலாநிதி பார்வதி அவர்களும் ரெறன்ரோவில் ஒரு மாதத்திற்கு மேலாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க உறுப்பினர் ரவி தமது தொழிற்சாலையில் சம்பள உயர்வு கோரியும், தொழிலாளர்களின் அடிப்படை வசதி உரிமைகள் கோரியும் ஏற்பட்ட வேலை நிறுத்தம் எப்படி உருவானது என்று விளக்கினார். மூன்றில் ஒருபகுதி தமிழ் தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழிற்சாலையில் மூன்றில் இரண்டு பங்கு தொழிலாளர்கள் பெண்கள். கூடுதலாக போர்துக்கீச, தமிழ் பெண்தொழிலாளர்களே அதிகம்.

தமிழ் தொழிலாளி ஒருவர் நிர்வாக அதிகாரியாக உயர்த்தப்பட்டவுடன் முதலாளிகளின் கைக்கூலியாக மாறியதால் தொழிலாளர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டனர் என்பதனை விரிவாக எடுத்துக் கூறினார். ஆரம்பத்தில் வருடமுடிவில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 'போனஸ்' நிறுத்தப்பட்டது.

விடயங்களில் முன் அனுபவம் இல்லாமையால் தெரிந்த நண்பர் ஊடாக CAWயூனியன் அலுவலகம் சென்று மேலதிக விபரங்களை பெற்று தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்கி தொழிற்சங்கத்தை ஆரம்பித்தனர். தொழிற்சங்கத்தை இரகசியமாகவே ஆரம்பித்தனர். தொழிற்சங்கம் ஆரம்பிப்பதற்கான விண்ணப்பம் கொடுத்து 24 மணித்தியாலங்களுக்குள் தொழிற்சாலை நிர்வாகிகள் மறுப்பறிக்கை கொடுக்கலாம் என்னும் சட்டம் அமுலில் இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடனே செயற்பட்டனர். இருப்பினும் நிாவாகிகட்கு தகவல் கிடைத்தது. அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்குள் நேரஅவகாசம் முடிவடைந்து விட்டது. தொழிற்சங்க ஆரம்ப வேலைகள் முடிவடைந்து தலைவராக பத்மநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழிற்சங்கம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து

ஈடுபட்ட Engineering Form Product கம்பனியின் தமிழ்த் தொழிலாளர்களான ரவியும், தொழிற்சங்கத்தலைவர் பத்மநாதனும் கலந்து கொண்டு பேசினார்கள்.

கலாநிதி பார்வதி அவர்கள் பேசும்போது எமது இன்றைய புலம் பெயர்ந்த வாழ்நிலையில் நாம் எப்படி இந்த வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாட்டில் அடிமட்ட தொழிலாளர்களாக வேலை செய்கின்றோம் அப்போது நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறினார். தொடர்ந்து உரையாற்றுகையில் ஊரில் பகல்முழுவதும் அடுப்பு வெக்கையில் தாய்மார் பட்ட துன்பங்களை இப்போதாவது இந்த இளைஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும். நாமே சாப்பிட்ட கோப்பையை கழுவுவதற்கு பெண்துணை தேவைப்பட்ட சமுதாயத்தில் இருந்து வந்த இளைஞர்கள் இங்கே யாரோ சாப்பிட்ட கோப்பையை கழுவும் போதுகூட பெண்ணுரிமை பற்றி சிந்திக்க தவறுவதையும் குறிப்பிட்டுக் காட்டினார். அடுத்ததாக பேசிய வேலைநிறுத்தத்தில்

குறைந்த நேரத்தில் எவ்விதம் அதிக வேலை தெழிலாளர்களிடம் வாங்கமுடியும் என்பதனை நிரூபித்து 'போனஸ்' இனை மேற்படி நிர்வாக அதிகாரி பெற்றுக்கொண்டது.

தொழிலாளர்கள் ஓய்வின்றி உழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

நிர்வாக அதிகாரியுடன் உடன்பாடாக நடக்க மறுத்த, நீண்டகாலமாக வேலை செய்த போத்துக்கீச பெண்மணியை வேலை நீக்கம் செய்தமை.

நீண்டகாலமாக சம்பள உயர்வின்மை, தொழிலாளர் நல அடிப்படை வசதிகள் இல்லாமலிருந்தமை.

திடீர் திடீர் என தொழிலாளர்களை வேறு வேலைகட்கு இடம் மாற்றுதல்.

நிர்வாக அதிகாரியின் உறவினர்கட்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றைய தொழிலாளர்கட்கு வழங்கப்படாமை.

போன்ற காரணங்களால் தொழிற்சங்கம் அமைப்பது என்ற முடிவிற்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

தொழிற்சங்கம் அமைப்பது தொடர்பான

நிர்வாக அதிகாரியின் தேவையற்ற தலையீடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. காரணமின்றி வேலையினால் நிறுத்தப்படுதல் தவிர்க்கப்பட்டது. நிர்வாகத்துக்கும், தொழிற்சங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. சம்பள உயர்வு வருடாவருடம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, பல் மருத்துவம் தொடர்பான சரியான வசதிகள், திடீரென வேலை இடம் மாற்றுதல் போன்ற முக்கிய விடயங்களில் நிர்வாகிகள் உடன்பாட்டுக்கு வரத்தவறியமை என்பன வேலை நிறுத்தத்திற்கு கொண்டு சென்றுள்ளது என்று கூறினார்.

தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் பார்வையாளர்கள் கேள்விகளுக்கு தொழிற்சங்க தலைவர் பத்தன் பதிலளித்தார். இந்நாட்டில் இருக்கும் அடிப்படை தொழிலாளர் நல உரிமைகளை பெற்றுக் கொள்ள தொழிற்சங்கம் எவ்விதத்தில் உதவி புரிகின்றது என்றும், தொழிற்சங்கத்தை எவ்விதம் தெரிவு செய்யலாம் என்றும், அல்லது பல்வேறுபட்ட தொழிற்சங்கங்களுக்கிடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வித வேறுபாடுகள் உண்டு என்பது பற்றியும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது. நிர்வாகத்தினருடன் உடன்பாட்டுக்கு வர முடியாத சூழ்நிலையில் அடுத்து தாங்கள் எடுக்கப்போகும் ஆர்ப்பாட்ட நடவடிக்கை பற்றியும் குறிப்பிட்டார்.

கலந்துரையாடலின் போது தொழிற்சாலை நிர்வாகம் தனக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் சிலபேரை தரகர்களாக்கி அவர்களினூடே தனது காரியங்களை சாதித்துக்கொள்கிறது. இந்த வகை தந்திரோபாயத்தினால்தான் தொடர்ந்தும் முதலாளித்துவம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது. எமது போராட்டம் நிர்வாகத்துக்கும், முதலாளிக்கும் எதிராக அமையவேண்டும். இடையில் தரகராக நிற்கும் நிர்வாக அதிகாரிக்கு எதிராக மட்டும் இருப்பின் முழுமையடையாது என ஜானகி அவர்கள் கூறினார். மேலும் ஜானகி அவர்களால் தேடகத்திற்கு ஒன்ராறியோவில் தொழிலாளர் நல உரிமைகள் என்ற புத்தகமும் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து தொழிற்சங்கம் பற்றிய தகவல்களும் கலந்துரையாடப்பட்டது.

ஒரு நாளில் நேர அளவீடு இன்றி அடிமைகளாக தொழிலாளரை முழு நேரமும் உழைக்க வைத்ததை எதிர்த்துப் போராடி எட்டு மணித்தியால வேலை நேரத்தை உத்தியோகபூர்வமாக்கிய தொழிலாளரின் வெற்றியை குறிக்கும் நாள்தான் மே முதலாம் திகதி. அத்தகைய உன்னதமான மே தினத்தின் ஆரம்ப மையமான சிக்காக்கோ நகரம் அமைந்துள்ள வட அமெரிக்காவில் தொழிலாளர் தினமாக வேறொரு நாளே குறிக்கப்படுகிறது. இதன் உள்நோக்கம் உண்மையில் தொழிலாள வர்க்க உணர்வுகளை மழுங்கடிப்பதேயாகும். எப்படியிருந்தபோதிலும் முதலாளித்துவத்தால் தொழிலாளரினதும், மக்களினதும் பிரச்சனைகளை தீர்க்கமுடியாது என்பதற்கு தொழிலாளர் உரிமையிலும், மக்களின் சமூக நலன்களிலும் விழுகின்ற வெட்டுகள் நிரூபிக்கின்றன. ஆகவேதான் முதன்மையான போராட்ட சக்திகளான தொழிலாளரின் உணர்வுகள் என்றுமே மழுங்கடிக்கப்பட முடியாதவை.

விவாதம்

# 'சமர்' பத்திரிகையின் மூன்றாவது பாதைக்கான திட்டம்

**பல வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் ஒரு திட்டத்தை முன்வைக்கிறோம். இத்திட்டம் முடிந்த முடிவுகளல்ல. இத்திட்டத்தில் எம கருத்துக்கு அப்பால் வேறு சிலரால் முன்வைக்கப்பட்ட கருத்தையும் இணைத்தே முன்வைத்துள்ளோம். ஏனெனில் இவை விவாதத்துக்கு உட்படவும், ஆராய்வை தூண்டவும் உதவும் என்பதால், எனவே இத்திட்டம் தொடர்பான உங்கள் கருத்துக்களை சமர் வரவேற்கின்றது.**

**—சமர் ஆசிரியர்குழு—**

(1)

1. தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு தேசிய இனத்தவர். பிரிந்து போதல உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையுள்ளவர்கள்.

2. பௌத்த சிங்கள பேரினவாத அரசின் அடக்குமுறையும், அதன் இருப்பு, நோக்கம் என்பன தேசிய இன வளர்ச்சியை சிதைக்கிறது. இந்தத் திட்டமிட்ட இன அழிப்பிலிருந்து விடுபட தமிழ்மக்கள ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்

3. தமிழ் மக்களது தேசிய விடுதலைப போராட்டம்.
அ. தேசிய உரிமையை வென்றெடுக்க உறுதியாக விட்டுக்கொடாது போராடுதல்.
ஆ. இலங்கையரசு, பிராந்திய வல்லரசு, மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம செய்வதனூடாக சாதிக்க முடியாது.
இ. மக்களின் ஐக்கியத்தாலும், உறுதியாலும அரசியல் பலத்தாலும் உருவாக்கப்படும மக்கள் யுத்தத்தால் மட்டும் சாத்தியம்.
ஈ. தமிழ் தேசிய இனத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து, அவற்றிற்கிடையேயான முரண்பாட்டை தேசிய முரண்பாட்டின் கீழ்படுத்தி சினேகபூர்வ வழிகளில் கையாழுதல்
உ. போராட்டத்தில் ஐக்கியப்படுகிற அனைத்து புரட்சிகர வர்க்கப் பிரிவினரும் தமது சொந்த நலன்கள் அடிப்படையில் தமக்கான தனித்துவமான ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கும ஜனநாயகம் உத்தரவாதப்படுத்துவதாகவும், ஆயினும் இந்நலன்கள் ஐக்கிய முன்னணியின் குறிக்கோள்களை பாதிக்காவண்ணம் அதன் நலன்களுக்கு கீழ்ப்பட்டு அணுகப்படுவதாகவும் தனது வளர்ச்சிப் பாதை வகுத்துக் கொள்வதாக இருக்கவேண்டும்.

(2)

1. முஸ்லீம் மக்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ, அல்லது அதற்கு கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக
அ. அவர்கள் தனித்துவமான இனப்பகுப்பை சேர்ந்தவர்கள். அல்லது
ஆ. அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள். இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளுமாவார். இவர்களிற்கான அரசியல்அதிகார அமைப்பு முறைகள பூரண சுயாட்சி அதிகாரம கொண்டவையாக அமைதல் வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்து முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமையாகும்.

2. மலையக மக்கள் தமிழ் தேசிய இனத்தின ஒரு பகுதியினரோ அதற்கு கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக
அ. அவர்கள் தனித்துவமான இனப்பகுப்பை சேர்ந்தவர்கள். அல்லது
ஆ. அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள். இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளாக இருப்பர். மலையக மக்கள் வாழும பிரதேசங்கள் அவர்களது சொந்தப்பிரதேசங்களாக கணிக்கப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவதோடு அப்பிரதேசங்களில் பூரண சுயாட்சிஅதிகாரம் கொண்டதும் அவர்களது இன உருவாக்கத்தை வளர்த்தெடுப்பதுமான அரசியல் அதிகார அமைப்பொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

(3)

1. சிங்கள மக்கள் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தின் எதிரிகளோ, தமிழ் மக்களின் எதிரிகளோ அல்லர். அவர்களும் எமது பொது எதிரியால ஒடுக்கப்படுபவர்களே. ஆயினும் தேசிய ரீதியில் சிங்கள மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைப்போக்கினை களைந்தெறியாத வரை அவர்கள் நமது போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புரிந்து கொள்ளமுடியாது. எனவே அவர்களை இந்த சிந்தனையில் இருந்து விடுவிக்க நாம் எமது போராட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலமே அவர்களுக்கு உதவ முடியும். சிங்கள மக்கள் தற்போது ஒரு வகை மறைமுக சேமிப்பு சக்திகளாவர்.

2. தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தின் வளர்ச்சியில், எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் போக்குடன் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மக்களாதரவுள்ள புரட்சிகர எழுச்சி ஏற்படும் பட்சத்தில் தமிழீழம அல்லது தனிநாடு என்ற கருத்து மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதுடன ஐக்கிய இலங்கைக்கான புரட்சிக்காக போராடவேண்டும்.

(4) இந்திய வல்லாதிக்க அரசு தமிழ்த் தேசிய விடுதலையினதும் இலங்கையின சுயாதிபத்தியத்தினதும் எதிரியாக இருப்பினும் கூட அதன் ஒடுக்கப்படும இந்திய மக்களும் அவர்களின் புரட்சிகர அமைப்புகளும் எமது நட்பு சக்திகளே. அவர்களின் ஆதரவு எமது போராட்டத்தின் வெற்றிக்கு கணிசமான அளவு முக்கியமானது ஆகும்.

(5)

1. எமது எதிரிகளையும், நண்பர்களையும இவ்வாறு வகைப்படுத்தலாம்

அ. இலங்கை பௌத்த சிங்கள பேரினவாதஅரசு தமிழ்த்தேசிய இனத்தின் முதல் எதிரி.

ஆ. இந்திய வல்லரசு, எதிரியின் கூட்டாளியும் எமது பிராந்திய எதிரியுமாகும்.

இ. அமெரிக்கா தலைமையிலான இன்றைய சோவியத் உள்ளிட்ட ஏகாதிபத்தியக கூட்டினர் எமது சர்வதேச எதிரிகளாவர்.

ஈ. இலங்கை நவகாலனிய அரைநிலப்பிரபுத்துவ அமைப்பாகும்.

உ. தமிழ் தரகுமுதலாளிகளும், தமிழ் நிலப்பிரபுக்களும் எமது எதிரிகள். இவர்கள் போராடுவது போல் செயற்பட்டாலும இவர்கள் திட்டமிட்டு போராட்டத்தை அழிப்பவர்கள்.

2

அ. தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து ஒடுக்கப்படும் தமிழ தேசிய வர்க்கங்களும் எமது சக்திகளாவர்.

ஆ. முஸ்லீம், மலையக மக்கள் ஆகியோர் எமது உறுதியான நண்பர்களும், பங்காளிகளுமாவார்.

இ. சிங்கள மக்கள் நமது மறைமுக சேமிப்புச்சக்திகளாவர்.

ஈ. இந்திய மக்கள், தமிழ்நாட்டு மக்கள் எமது மறைமுக சேமிப்புச்சக்திகளாவர்.

3. அரசியல் கட்சிகள்

அ. தமிழர் விடுதலைக்கூட்டணி— தமிழ தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரிவினர்.

ஆ. தமிழீழ விடுதலைப்புலிகள் —

1. தமிழ் முதலாளித்துவ தேசியவாதப போக்கினை பிரதிநிதித துவப்படுத்துபவர்கள். அல்லது

2. தமிழ் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள்.

இ. பிற தமிழ் கட்சிகள்

1.இக்கட்சிகளின் வர்க்க அடிப்படை குட்டிப்பூர்சுவா அடிப்படையே. போராட்டத்திற்கு துரோகம் இழைத்ததுடன இவர்களுடைய தேசியவாதம் தமிழ் தரகு முதலாளித்துவ தேசியவாதத்தினைவிட முன்னேறியதல்ல. அல்லது

2. இவர்கள் தமிழ் தரகு முதலாளித்துவ பிரிவை சேர்ந்தவர்கள். இவர்கள் சிங்கள தரகு முதலாளித்துவ பிரிவினருடன சமரசத்துக்கு சென்று இன்று துரோகிகளாக மாறியுள்ளனர்.

ஈ. சிறு குழுக்கள் தமிழழத்தேசிய விடுதலையில் ஈர்க்கப்பட்ட குட்டிப்பூர்சுவா வர்க்கத்தின் புரட்சிகரப் பிரிவினை கொண்டுள்ள இக்குழுக்கள போக்கிடமற்றவையாக உள்ளன. இவர்கள புலிகளுடன் அல்லது புலி எதிர்ப்பு முகாமுடனே நட்புக்கொள்ளும் போக்குகளை இவை கொண்டுள்ளன. சரியான அமைப்பு உருவாகில் அத்துடன் கூட்டு அல்லது சக்திகளாக இணைவர்.

(6)

1. நாம் மேற்குறிப்பிட்ட விடயத்தை வென்றெடுக்க கையாளும் வழிமுறைகள்

அ. எதிரிகளை அம்பலப்படுத்துதல்.

ஆ. பாதிவழிக்கூட்டாளிகள் தவறுகளை இனம்காட்டுதல்.

இ. ஊசலாடும் நம்பகமற்ற கூட்டாளிகளை இனம்காட்டுதல்

ஈ. ஊசலாடும் துரோகநிலையெடுத்தோரின அரசியல் துரோகத்தை இனம்காட்டி அதன் அணிகளை வென்றெடுத்தல்.

உ. ஊசலாடும் புரட்சிகர அணியை வென்றெடுக்க போராடுதல்.

ஊ. தத்துவார்த்த அரசியல் விவாதங்களை நடத்துதல்.

2

அ. பாராளுமன்றப் பாதையை, சமரசத்தை, பேச்சுவார்த்தையை மூலம் பிரச்சனையை தீர்க்கப்படலாம் என்னும் போக்கை அம்பலப்படுத்தல்.

ஆ. கடந்தகால போராட்ட அனுபவங்களை கேள்விக்குள்ளாக்குதல்.

இ. போராட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்துதல், விவாதித்தல்.

ஈ. ஆயுதப் போராட்டம், சுயநிர்ணய உரிமை போன்ற எமது அடிப்படைக் கொள்கைக— ளைப் பிரச்சாரம் செய்தல்.

**சமர் ஆசிரியர் குழுவால் வெளியிடப்பட்ட இக் கட்டுரை தொடர்பான விவாதத்தை வெளிக்கொணரும் நோக்கில் இது மீள பிரசுரமாகிறது. இக் கட்டுரை தொடர்பாக விவாதிக்க விரும்புவர்கள் கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பலாம்.ஆயினும் இக் கட்டுரை தொடர்பாக நான்காவது அகிலத்தால் வெளியிடப்பட்ட விவாதத்தை இவ்விதழில் பிரசுரிக்கின்றோம்.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெப்ரவரி 1983ல் ஈழத்து பகல்நேர இரயில் ஒன்றில்.

—ஜெரில்சாந்தா பக்பெதத்த—



கடலின் அண்மையில்
வெள்ளைநிறச் சிலிண்டர்களையும்
சதுரங்களையும் பார்த்தேன்
உணர்ச்சி பாவமற்ற வானத்தில்
ஒரேஞ் நைற்றிக் புகையைக்
கக்கிக் கொண்டு
செல்வதைப் பார்த்தேன்
தலை நகரத்தையும் நாட்டுப்புறத்தையும்
இணைக்கும் பாலத்தில்
கொள்ளைச் சுமையுடன்
அலறிக்கொண்டு
ஆற்றின் மேல்
குழந்தைகளின் உடல்கள்
"குறைமாத தேசத்தின் மலர்கள்"
மிதந்தன அதன் பிறகுதான் மீன்
சாப்பிடுவதில்லை என்று
'அ' சொன்னான்
சான்ட்ஹேஸ்டில் பயின்ற
பிரிகேடியர் தளபதி சொன்னான்
நாங்கள் (அவர் யாரோ) விபட்னாமில்
பாடம் படித்தோம்
பாடசாலைக்குச் செல்லும் வழியில்
என்னைக் கறுப்பு இரயில்ப் பாதைக்கும்
பச்சை நெல் வயல்களுக்கும் இடையில்
கறை படியாத உடுப்புக்களில் பிள்ளைகள்
—கைகளில் புத்தகங்கள் இல்லை—
ரயில் கடந்து செல்லும்போது
நின்று தரித்து தலையைத் திருப்பினர்
ரயில்ப் பெட்டியிலிருந்து வீசப்பட்ட ஒரு மனிதன்
தமிழன். படைக்கப்பட்டு. நடுங்கிய படி. ரத்தம் ஒழுக நெடப்பதையும் கண்டேன்
ரயில் நின்றது
யாரோ அவனது உடமைகளை
அவன் அருகில் சிரக வைத்திருந்தனர்
பக்கத்தில் அவன் வெள்ளிக் கைக்கடிகாரம்
திமிடக்கம்பி—அவன் கண்களைப்போல—
பைத்தியமாய் சுழன்று கொண்டிருந்தது.
ஒவ்வொரு பத்துக் கணங்களும்
புதிய மலர்

செப்பு நிறத்திலிருந்த ஒரேஞ்சுக்கும்
சிவப்புக்கும். பிறவுணுக்கும் மாறும் நிலம்
மலை ஒன்று கறுப்பாக
—யானைத்தலை போல—
வானத்தை நோக்கி
உயர்ந்திருக்கும்
சிறிய வெள்ளை வண்ணத்துப்பூச்சிகளின்
பெரும் கூட்டம்
ரயிலை இருபக்கமும் சூழ்ந்து
அழைத்து வரும்
என்னை அழவைத்த பச்சைபசும் மரங்களைப் பார்த்தேன்
1991ல் சிங்கள இளைஞரைப் புதைத்த இடங்களைப் பார்த்தேன்
உயர்ந்து நீண்ட பழம் பெரும் மரங்களைப் பார்த்தேன்
தமிழ் இளைஞரை சித்திரவதை செய்யும் ஆனைஇறவைப் பார்த்தேன்
பின்னர் அமைதி
திடீரென தட்டையாக —
நீட்டிய தட்டையான கைபோல—
உப்பு வெள்ளை மணல் மேல்
நிலவு வெளிச்சத்தில் தனியாக
உயர்ந்து நின்ற பனைமரங்கள்ளிகள் போல
யார்? பழைய நண்பர்கள்
சவக்குழிகளிலிருந்து எழுந்து
உன்னை வரவேற்க
கல்லறைகளின் மேல்
கோர்த்து நிற்கிறார்கள்!

தமிழாக்கம்
மகாலிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'சமர்' பத்திரிகையின் வேலைத்திட்டம் ஒரு தேசியவாதத் தூக்குக்கயிறு

**பிரான்சின் தலைநகர் பரிசிலிருந்து வெளிவரும் 'சமர்' பத்திரிகை அதனது இதழ் 7 இலக்கமிட்ட வெளியீட்டில "மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம்" என்ற தலைப்பில் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் தொடர்பான திட்டம் ஒன்றை பிரசுரித்திருக்கின்றது.**

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் தற்போதைய தேசிய விடுதலை இயக்கங்கள என்று சொல்லப்படுபவையின் அரசியல வங்குரோத்திற்கு பதிலாக ஒரு புதிய தேசிய விடுதலை இயக்கம் ஒன்றினை உருவாக்குவதே. இது தனியே 'சமர்' பத்திரிகையின் திட்டம் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே பிரசுரிக்கப்படும் அரசியல் பத்திரிகைகளின் அடிப்படை இலக்கும் ஆகும். கடந்த பத்து வருட காலமாக தற்போது இயங்கும் இந்த இயக்கங்களின் அரசியலின் நேரடி பெறுபேறாக ஒரு முட்டுச்சந்திக்குள் தள்ளப்பட்டிருக்கும் தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் இந்தத்திட்டத்தின் அரசியல் அடித்தளத்தை விளங்கிக்கொள்வது அவசியமானது. இந்நிலமைகளில் ஒரு புதிய இயக்கம் தேவையென்பதற்கு, பழைய இயக்கங்களின வங்குரோத்திற்கு என்ன காரணங்கள் வழிதிறந்தன என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

### தேசிய விடுதலை இயக்கங்களின் வங்குரோத்து

இது தனியே தற்போதைய தமிழ இயக்கங்களுக்கே மட்டும் பிரத்தியேகமான ஒரு விசேட குணாம்சமல்ல. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு பின்னர் உருவான அனைத்து விடுதலை இயக்கங்களும சர்வதேசரீதியாக இன்று ஏகாதிபத்தியத்தின நேரடிக்கைக்கூலிகளாக மாறியிருக்கும நிகழ்வுப்போக்கின் ஒரு பகுதியாகும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர்அரபாத் புரட்டாதி மாதம் 14 திகதி "எனது வாழ்க்கையின் மகத்தான மணித்தியாலம் இதுதான்" (Die Welt 14. 10. 93) என்று வாய் புலம்பியபடி வாசிங்டன் வெள்ளை மாளிகைக்குள நுழைந்தது அவரது தனிமனித குணாம்சங்களினால் தீர்மானிக்கப்படவில்லை. பதிலாக சர்சதேசரீதியாக ஏற்பட்ட புறநிலை மாற்றங்களினால் உருவாக்கப்பட்டது. இதே புறநிலையான மாற்றங்கள்தான் தமிழ இயக்கங்களை அரசின் கைக்கூலிகளாக மாற்றியிருக்கிறது.

தமிழ்தேசிய இயக்கங்களின் தலைவர்களினது ஜனநாயக மறுப்பு, உட்கட்சி ஜனநாயகமின்மை, ஏனைய விடுதலை இயக்கங்களின் மீது "விடுதலைப்போர்" மற்றும் ஏனைய ஊழல்கள் அனைத்தும இவர்கள் பிரதிநிதுத்துவப்படுத்தும முதலாளித்துவ வேலைத்திட்டத்தின பிரிக்கமுடியாத பாகங்கள். இந்த நடவடிக்கைகளிலும், இவர்கள் சர்வதேச தேசியவாதிகளுக்கு ஒரு விதத்திலும குறைந்தவர்களல்ல. இறுதி ஆய்வுகளில இந்த குணாம்சங்கள் இந்த இயக்கங்களின அரசியலை தீர்மானிக்கவில்லை. உலக முதலாளித்துவ நெருக்கடியின் நேரடி விளைவுகள்தான் இந்த இயக்கங்களின தலைவிதியை தீர்மானிக்கிறது.

இவர்களது அரசியலின் வர்க்கத் தன்மையை தோலுரித்துக்காட்டிய இந்திய—இலங்கை ஒப்பந்தம் வெறுமனே ராஜீவ்காந்தியின தனிமனித பண்புகளிலிருந்து உருவாகவில்லை. இவர் இந்தியாவின் பொருளாதாரத்தை உலக ஏகாதிபத்தியத்திற்கு திறந்துவிடுவதற்காக எடுத்த முயற்சிகளின் தவிர்க்கமுடியாத தேவை இந்த ஏகாதிபத்தியத்திட்டத்தை முன்வைத்தது. இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் அனைத்து நிபந்தனைகளையும் மாற்றங்களின்றி ஏற்பதற்கு சிலஇயக்கங்கள் தயக்கம காட்டியதும் இந்திய முதலாளித்துவம இவர்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததையும் ஒப்பந்தத்திற்கு முந்திய சில நாட்கள் நினைவுபடுத்துகின்றன. இந்த தயக்கம பற்றியும் அதனது பின்னணி என்ன என்பதையும் நான்காவது அகிலத்தின் அனைத்துலககுழுவின் அறிக்கை பின்வருமாறு ஆய்வு செய்தது.

—இந்திய சூழ்ச்சியினதும், மோசடியினதும் விளைவாகவே தாம் புதுடில்லிக்கு விமானத்தில் செல்லவும், இலங்கை—இந்திய உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்கவும் தீர்மானம் செய்தாக பிரபாகரன் இன்று கூறுகிறார். இந்த "சாட்டு" தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பலவீனமான தன்மையை மட்டுமன்றி, குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் அரசியல் மலட்டுத்தன்மையையும் அம்பலப்படுத்துகிறது. விடுதலைப் புலிகளின் தலைவர் ராஜீவ்காந்தியினால் ஏமாற்றப்பட்டிருப்பின இதற்குக்காரணம் தமிழீழத்தின சுயநிர்ணயத்தினை அடைவதில் அதன முழுக்கொள்கையும் இந்திய முதலாளித்துவத்தின் உதவியை வேண்டுவதின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பபட்டிருந்ததினால் ஆகும். இந்த பேராபத்து மிக்க தவறான கணிப்புக்கான மூலம் முதலாளித்துவ தேசிய வாதத்தின் தவிர்க்கமுடியாத வர்க்க முன்நோக்கும், வேலைத்திட்டமுமே ஆகும். 70 வருடங்களுக்கு முன்னர் லெனின், ஒரு ஒடுக்கப்படும் தேசியஇனத்தின முதலாளிவர்க்கம் தனது சொந்த தேசிய இனத்தின் சிறப்புரிமையை அடையவும், "சுதந்திர" நாட்டினுள் தொழிலாளர், விவசாயிகளை சுரண்டுவதற்கான சிறந்த நிலமைகளை நிலைநாட்டும் நிலைபாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை கருக்கொள்கிறது என எச்சரிக்கை செய்தார். இந்த சுயநலம் கூலியுழைப்பிலிருந்து உபரிப்பெறுமானத்தை பிடுங்கிக்கொள்கின்ற, அதாவது தொழிலாள வர்க்கத்தினை அடிமைப்படுத்துகின்ற ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின தன்மையில் புறநிலையாக வேரூன்றியுள்ளது. இந்த வர்க்கப்புறநிலையானது முதலாளித்துவ தேசியவாதிகளின் சகல கன்னைகளதும், தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற பெரிதும் தீவிரமான போக்குகள் உட்பட கொள்கைகளை வழிநடத்துவதோடு அவற்றின் அரசியல் உடல் அமைப்பையும நிர்ணயம் செய்கின்றது.

(இந்திய —இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும். புள்ளி 8—19. 18. 1987)

இந்த இயக்கங்கள் அனைத்தினதும வங்குரோத்தின் மத்திய புள்ளி இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ வேலைத்திட்டம் ஆகும். இந்த நிலமைகளில் தனிமனித தவறுகளை நீக்கி சுயவிமர்சனங்களை மேற்கொண்டு இதே முதலாளித்துவ வேலைத்திட்டத்தின அடிப்படையில் உருவாகும் ஒரு புதிய "புனிதமான" இயக்கத்தின் மூலம் தமிழ மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றுவிடலாம் என நினைப்பது ஒரு பிற்போக்கு கனவு.

இந்த அடித்தளத்திலிருந்து சமரின வேலைத்திட்டத்தினை ஆய்வு செய்கையில இது 1983ல் இயக்கங்களால வைக்கப்பட்டதை விட வித்தியாசப்படுவது முஸ்லீம் மக்களினதும், தோட்டத தொழிலாளர்களினதும் "சுயநிர்ணய உரிமை" பற்றிய கேள்வியிலாகும். தோட்டத தொழிலாளர்களைப் பொறுத்தளவில் ஈரோசும், ஈ.பி.ஆர்.எல்.எவ் மலையகப் பகுதியை தங்களது தமிழீழத்தின் வரைபடத்தினுள சேர்த்திருந்தனர்.

சமர் தோட்டத்தொழிலாளர்களுக்கு 'சொந்த பிரதேசங்களை' நிர்ணயிப்பதோடு அவர்களிற்கு "பூரணசுயாட்சி அதிகாரம்" வழங்குகின்றது. அத்துடன் புதிதாக முஸ்லீம் மக்களிற்கான "அரசியல் அதிகார அமைப்புமுறைகள் பூரண சுயாட்சி அதிகாரம்கொண்டவையாக அமைதல வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்து முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமையாகும்" என்கின்றது.(பக்கம் 7)

இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவர்கள் "தமிழ் தேசியஇனத்தின் ஒரு பகுதியினரோ அல்லது அதற்குக் கீழ்ப்பட்டவர்களோ அல்லர்" என்பதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின கலப்படமற்ற சுத்தமான தனித்துவத்தை வலியுறுத்துவதுடன், இக்காரணத்தால இவர்கள் பிரிந்து போவதைத்தவிர வேறுவழியில்லை என்பதுமூலம் தீவின அனைத்து மக்களிடமும் ஒரு ஐக்கியம் உருவாவதற்கு வெடிவைக்கிறது. இதனால் இந்த வேலைத்திட்டம் சிங்கள இனவாதஅரசின் தேவைகளை முழுமையாகப் பூர்த்திசெய்கின்றது.

தோட்டத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் உடனடிப்பிரச்சனை தோட்டங்களை ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கையளிக்கும் சிறிலங்கா அரசினை தூக்கியெறிவதற்கு தீவின் தொழிலாளர்களுடன ஒன்றிணைவதாகும். இலங்கை தொழிலாள வர்க்கத்துடன் பிரிக்கமுடியாத படையணியினராகிய இந்த தோட்டத்தொழிலாளர்கள் "பூரண சுயாட்சி அதிகாரம்" என்ற படுகுழிக்குள விழுவதற்குப் பதிலாக தொண்டமானின் தொழிற்சங்க அதிகாரத்துவத்திலிருந்து உடைத்துக்கொண்டு சோசலிசப்புரட்சியை நோக்கி முன்னெறுவதை தங்கள் வரலாற்று பணியாக கொண்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்பேசும் முஸ்லீம்கள் முஸ்லீம் மதத்தினை பின்பற்றுவதைத் தவிர மொழியிலோ, கலாச்சாரத்திலோ தமிழ் தேசிய இனத்தின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியினர் ஆவார். இந்த பிரதேசங்களில் வாழும் ஏனைய மதங்களை சேர்ந்த தமிழ்மக்கள முகங்கொடுக்கும் அதே இனஒடுக்குமுறைக்கு முகங்கொடுக்கும இவர்கள் கடந்தகாலங்களில் இயக்கங்களில் போராளிகளாக இனவாத இராணுவத்திற்கு எதிராக போராடியுமிருக்கிறார்கள். 1990இன் இறுதியில் தமிழீழ விடுதலை புலிகள் முஸ்லீம் தமிழர்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றியதும் அத்துடன் தொடர்ந்து அவர்கள் மீதான படுகொலைகளும தமிழ்மக்களை மதரீதியில பிளவுபடுத்துவதையும் அதன்மூலம இனவாத அரசிற்கு கைகொடுப்பதையும் நோக்கமாக கொண்டது. இது எந்த வகையிலும் ஏனையமதங்களை சேர்ந்த தமிழ்தேசிய இனத்தின தொழிலாளர்களினாலும் ஒடுக்கப்பட்ட மக்களினாலும் தங்கள் சகோதரர்களை தங்களுக்கு "கீழ்ப்படுத்தும்" நோக்கில செய்யப்பட்டதில்லை. பதிலாக இந்து—முஸ்லீம் பிரிவினையின் மூலம முதலாளித்துவ நலன்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டது. முஸ்லீம் மக்களை தமிழீழ விடுதலைப்புலிகள வடக்கிலிருந்து வெளியேற்றுகையில இவர்களுக்கு "எதிரான" இயக்கங்கள், தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ்காங்ரஸ், என்பவை ஐந்து முதலாளித்துவ முஸ்லீம் அமைப்புக்களுடன் இணைந்து "முஸ்லீம் பிராந்திய ஆட்சி" என்ற வேலைத்திட்டத்தினை முன்வைத்தன. இது இந்து—முஸ்லீம் பிரிவினையை வளர்ப்பதன் மூலம் அன்றைய பிரேமதாச அரசாங்கத்தை பாதுகாக்கும் திட்டமாக இருந்தது.

"சமர்" பத்திரிகையின் தற்போதைய "பூரண சுயாட்சி அதிகார" திட்டத்தின் உள்ளடக்கம எல். ரி. ரி. ஈ இனது வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக நிறைவேற்றும் நோக்கத்தில் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு ஒரு பிரதேசத்தை தெரிவு செய்யும் திசையில் இருக்கின்றது. முஸ்லீம் தமிழர்களது பிரச்சனைகளை, மத அடிப்படையில் உருவாகிய முஸ்லீம் அமைப்புகளோ அல்லது "பூரண சுயாட்சி அதிகாரமோ" தீர்த்து வைக்கப்போவதில்லை. இது முதலாளித்துவ நலன்களுக்கு தமிழினத்தின் ஒரு பகுதியினராகிய இவர்களை பகடைக்காய்களாக பாவிப்பதற்கே சேவை செய்யும். இந்த வேலைத்திட்டங்களை நிராகரிப்பதுவும் தொழிலாளவர்க்க வேலைத்திட்டத்தில் ஒன்றிணைவதுமே இவர்களுக்கான ஒரே வழியாகும்.

**சுயநிர்ணய உரிமை**

தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையக இலங்கை தீவின் மக்களுக்கு பிரிவினை வேலைத்திட்டத்தினை முன்வைப்பதற்கும், சுயநிர்ணய உரிமைக்கும் ஒருவித தொடர்பும் இல்லை. சுயநிர்ணய உரிமையின் பெயரால் இன்று உலகம் முழுமையும் வெடித்துக் கிளம்பும் இன, மத, பிரதேச வேறுபாடுகளை தங்களுடைய நலன்களுக்கு சாதகமாக ஏகாதிபத்திய சக்திகள் பாவிப்பதனை காணமுடியும் அதேவேளை இதனது பெயரால் நானாவித இன, மதக்குழுக்களை சேர்ந்த வலதுசாரிப்போக்குகள் தங்களது சொந்த நாடுகள் அல்லது பிரதேசங்கள தேவையென்று குரல் கொடுக்கின்றன.

1991இன் மார்கழி மாதத்தில் முன்னாள் யூகோசிலாவியாவில் குரோசியாவையும், சுலோவேனியாவையும் சுயநிர்ணய உரிமையின் பெயரில்தான் ஜேர்மன எகாதிபத்தியம் "சுதந்திர நாடுகளாக" அங்கீகரித்தது. இது இந்த நாடுகளின் பல இன, மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கவில்லை. பதிலாக ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் "சகோதர யுத்தத்தினை" இன்னும் தீவிரமாக்கியது. இதே பாணியில்தான் முன்னாள் சோவியத யூனியனின் கலைபிற்கு பின்பு உருவாகிய நாடுகளின் இன, மத, மொழி முரண்பாடுகளில் ஏகாதிபத்தியத்தின



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரடித்தலையீடு ஆர்மேனியா, அசபச்சான், ஜோர்ஜியா, மற்றும் இன்னும் பல நாடுகளில உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்துள்ளது. காளான் முளைப்பது போல் தினசரி சர்வதேசரீதியாக பிரகடனப்படுத்தப்படும பிரிவினை இயக்கங்கள் புதிய தேசிய அரசுகளின் நிர்மாணத்தினை சுட்டிக்காட்டவில்லை. மாறாக தற்போது நீண்டகாலமாக இருந்துவந்த தேசிய அரசுகளின் உடைவினை வெளிப்படுத்துகின்றது.

பிரித்தானியருக்கெதிரான இந்திய சுதந்திரப்போர் இந்தியாவின் 500 ற்கும மேற்பட்ட சிற்றரசுகளின் மக்களை இன, மத, மொழி எல்லைகளை கடந்து இணைப்பதன மூலம் இந்திய உபகண்டத்தின ஐக்கியத்திற்காகவும், சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிக்கு பங்களிப்பதாகவிருந்தது. காங்கிரஸ கட்சியின் வேலைத்திட்டம் பாகிஸ்தானை பிரிப்பதுடன் இந்திய உபகண்டத்தினை முதலாளித்துவ தேசியவாதத்தினால கட்டியெழுப்புவதற்கு சத்தியம் செய்தது. இன்று இந்தியா முழுமையும வெடித்துக்கிளம்பும் பிரிவினை இயக்கங்கள் இந்த முதலாளித்துவ தேசியவாதத்தின் நாற்றமெடுத்த பிணத்திலிருந்துதான உருவாகியிருக்கின்றன. இது உண்மையான தேசிய ஐக்கியத்தினையும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான யுத்தத்தினையும் மேற்கொள்ளுவதற்கு முடியாத இந்தியதேசியவாதத்தின் பிற்போக்கு தன்மையை நிரூபித்துக்காட்டுகிறது.

இந்த நிலமைகளில் இன்று இந்தியாவில தோன்றியிருக்கும் பிரிவினை இந்திய தேசிய முதலாளித்துவத்தால் இன, மத, மொழி பிரிவினைக்குட்படுத்தப்பட்டிருக்கும மக்களின் உண்மையான அபிலாசைகளை நிறைவுசெய்யவோ அல்லது அவர்களை ஐக்கியப்படுத்தவோ எந்தவிதத்திலும லாயக்கற்றவையாகும். ஏகாதிபத்தியங்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இந்தப்பிரிவினை இயக்கங்களில் பல ஏற்கனவே வந்துவிட்டதென்பதுடன் இவர்களின வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்திற்கு தங்கள் "பிரதேசங்களை" திறந்து விடுவதனையே மையமாக கொண்டுள்ளது.

தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களை பொறுத்தவரையிலும் வேறுவிதமான விதிவிலக்கு இல்லை. பழைய இயக்கங்களின் வங்குரோத்து புதிதாக முற்போக்கான இயக்கங்களை தோற்றுவிப்பதற்கான காலப்பகுதியை திறந்துவிடவில்லை. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலமை தாங்கிய இயக்கங்கள் ஆரம்பத்திலிருந்தே தமிழ் தொழிலாளர்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை மையமாக கொண்டிருக்கவில்லை. இவர்களின் அடிப்படை நோக்கம் தமிழ முதலாளித்துவத்தின் நோக்கங்களை பேணுவதற்காக சிங்கள முதலாளித்துவத்திற்கு அழுத்தம கொடுப்பதாகவே இருந்தது. இந்த தேசிய விடுதலை இயக்கங்களின இடிபாடுகளிலிருந்து தோன்றும் ஒரு புதிய தேசிய இயக்கம் அதை உருவாக்க விரும்புவோரது நல்லெண்ணங்கள எதுவாயிருப்பினும் உள்ளடக்கத்தில ஏகாதிபத்தியத்தின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினை இயக்கங்களிலிருந்து ஒரு விதத்திலும் வேறுபடவில்லை.

**பிரிவினை இயக்கங்களின் தோற்றத்தின பின்னணி**

சர்வதேச மயமாக்கப்பட்ட உற்பத்திக்கும், பல்தேசிய நிறுவனங்களினால கட்டுப்படுத்தப்படும் உலகப பொருளாதாரத்திற்கும் முதலாளித்துவம வரலாற்று ரீதியாக தங்கியிருக்கும் தேசிய அரசுமுறைக்குமுள்ள சமரசம செய்யமுடியாத முரண்பாடுகளின கூர்மையடையும் தன்மை தேசிய அரசுகளின் தன்மை உடைவிற்கு கொண்டுசெல்கிறது. இதன் நேரடி விளைவுகளே இந்தப்பிரிவினை இயக்கங்களின் தோற்றமாகும். இது தனியே முன்னாள் யூகோசிலாவியாவிற்கும், சோவியத் யூனியனுக்கும், இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளிற்கும் மட்டும பிரத்தியேகமான ஒரு வளர்ச்சிப் போக்கல்ல. இத்தாலியை வடக்கு, தெற்கு என்று பிரிப்பதற்கும் இங்கிலாந்தில், 1745ல் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்ட ஸ்கொட்லாந்தைப் (Scottland) பிரிப்பதற்கும், பெல்ஜியத்தில் (Flamen) பிளமன், (Wallonen) வாலூனன் என்ற பிரிவினை கோசத்திற்கும் அடிப்படைக காரணம் உலக ரீதியாக வளர்ச்சியடைந்த பொருளாதார அழுத்தங்களின வெளிப்பாடாகும்.

இது 19ம் நூற்றாண்டின முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காலத்தில உருவாகிய தேசியஇயக்கங்கள கொண்டிருந்த முற்போக்கான இன, மத, மொழி பேதமற்ற தேசியஅரசுகளை உருவாக்கும் குணாம்சத்தை கொண்டிருக்கவில்லை. இதற்கு நேரெதிராக ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தினால் உலகரீதியாக அனைத்து மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய முறையில உலகப்பொருளாதாரத்தையும் உற்பத்தி சக்திகளையும் ஒழுங்குபடுத்த முடியாததின நேரடிவிளைவாகும்.

ஏகாதிபத்தியங்கள் பல்தேசிய நிறுவனங்களின வர்த்தகப் போட்டிக்கான மூலப்பொருள்களையும், மலிந்த கூலியுழைப்பையும் பெற்றுக்கொள்வதற்கான உலகின் மிகவும் சாதகமான "பிரதேசங்களை" தேர்ந்தெடுப்பதற்கு முயல்கின்றன. இந்தப்பிரிவினை இயக்கங்கள் இந்தத்தேவைகளை நிறைவேற்றும் கருவிகளாக தொழிற்படுகின்றன. தேசிய அரசுகளுக்கு பதிலாக பொருளாதார ரீதியில் சாதகமான பிரதேசங்களை பிரிப்பது தொடர்பாகவும் ஒவ்வொரு நாட்டின் வளமான பிரதேசங்களை தேர்ந்தெடுத்து இணைப்பதன மூலம் "பிராந்திய நாடுகளை" (Regional States) உருவாக்குவது தொடர்பாகவும "பிராந்திய நாட்டின் எழுச்சி" (The Rise Of Region State ) என்ற தலைப்பில் கெனிச்சி ஓமாய் (Kenichi Ohmae) என்ற முதலாளித்துவப் பொருளாதார நிபுணர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பிராந்திய நாடுகள்" இயற்கையான பொருளாதார பிரதேசங்கள். அவைகள குறிப்பிட்ட நாட்டின் பூகோள எல்லைகளுக்குள் இருக்கும். அல்லது இல்லாமல் இருக்கும். அவை அப்படியிருந்தால் அது வரலாற்று விபத்தாகும். சில சந்தர்ப்பங்களில் தனித்துவமான இந்த பொருளாதார அலகுகள் வடக்கு இத்தாலி, (Wales)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேல்ஸ். (Catalonia)கற்றலோனியா. (Alsacelorraine)அல்சாசலோறேயின். (Baden - Wurttemberg)பாடன்வூடன்பேர்க். போன்ற பகுதிகளாக தாய்நாடுகளிலிருந்து பிரிந்திருக்கும். வேறு சந்தர்ப்பங்களில தேசிய எல்லைகளை கடந்து இணைந்திருக்கும். (Sandiego) சந்தியாகோ.(Tiguana) ரியூயானா. போலவும். (Hong Hong)கொங் கொங். தெற்கு சீனா. போலவும் பொருளாதார வடிவங்களை எடுக்கும். அல்லாவிடில "வளர்ச்சி முக்கோணமாகிய" சிங்கப்பூரையும் அதனது அயலில் இருக்கும இந்தோனேசியத் தீவகளைப் போலவும இருக்கும். இன்றைய எல்லைகளற்ற உலகில் இவை இயற்கையான பொருளாதாரப்பிரதேசங்கள். இங்கே என்ன முக்கியமெனில் ஏதொ ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்றை இணைக்கையில் உலகபொருளாதாரத்தில் வெற்றிகரமாகப பங்கெடுப்பதற்கான முக்கியமான கலவையை இவை சொந்தமாகக் கொண்டிருக்கின்றன. (Foreign Affairs, Spring 1993 பக்கம் 79)

இந்த நிலமைகளில் தனிநாடுகளை கோரும் தேசிய முதலாளித்துவ குட்டிமுதலாளித்துவ போக்குகள் ஏகாதிபத்திய இரும்புப் பிடிக்குள இருந்து விடுபட்டு சுயாதீனமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதுபற்றி கதைப்பது தொழிலாள வர்க்கத்தையும். ஒடுக்கப்பட்ட மக்களையும ஏமாற்றுவதற்கான திட்டமிட்ட சதியாகும். இவர்கள் உருவாக்கும் நாடுகளில் ஏகாதிபத்திய சுரண்டலை பாதுகாக்கும விசேட சர்வாதிகார ஆட்சிகளையே மக்களுக்கு வழங்குவதற்கான தயாரிப்புகளை மேற்கொள்ளுகின்றனர்.

**முதலாளித்துவ வேலைத்திட்டம்**

அனைத்துப் 'பழைய' இயக்கங்களின் தலைமைகளும் தாங்கள் மேற்கொண்ட கோமாளித்தனமான இடதுசாரி வினோத உடைகளினால் ஒன்றைமட்டும் ஒருபோதும் மறைக்கவில்லை. இவர்கள் நிர்வாணமாக காட்டியது தமிழ் முதலாளித்துவத்தின நலன்களிற்கு கீழ்படிந்ததே இவர்களது வேலைத்திட்டமும். இயக்கமும் என்பதனை "பழைய கொள்கை விளக்கபுத்தகத்திலிருந்து தேடியெடுத்து 'சமர்' பின்வருமாறு எழுதுகிறது. "தமிழ் தேசியஇயக்கத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து அவற்றுக்கிடையேயான முரண்பாட்டை தேசியமுரண்பாட்டிற்குள் கீழ்ப்படுத்தி சினேகபூர்வமான வழிகளில் கையாளுதல்" (இதழ் 7 பக்கம்)

உணர்வுள்ள தமிழ் தொழிலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் இந்த வடிவத்திலோ அல்லது சிறிய மாற்றங்களோடோ இயக்கங்களின் வேலைத்திட்ட கொள்கைவிளக்கபுத்தகங்களில் ஏற்கனவே வாசித்தது ஞாபகத்துக்கு வரலாம். இந்த வகையில் மட்டுமல்ல வரலாற்றுரீதியாகவும் இந்த வேலைத்திட்டம் மிகப்பழையது. ரஷ்யப்புரட்சியில் மென்ஷிக்குகள முன்வைத்த இரண்டு கட்டபுரட்சியின் ஒரு தோற்றம்.

தொழிலாள வர்க்கத்திற்கு தேசிய முரண்பாடு கிடையாது. அது தேசங்களின் எல்லைகளை கடந்து சர்வதேசரீதியாக புறநிலையாக ஐக்கியப்பட்டிருக்கும் ஒரே ஒரு வர்க்கம். தொழிலாள வர்க்கத்திற்கும் ஏனைய வர்க்கங்களிற்கும் இடையில் இருக்கும முரண்பாடுகள் வர்க்கப்போராட்டத்தில தொழிலாள வர்க்கத்தின் தலமையை நிலைநாட்டுவதன் மூலமும் முதலாளித்துவ வர்க்கத்தின் முதலாளிவர்க்கத்தின்மீது தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தினை உருவாக்குவதன் மூலம் மட்டுமே தீர்த்து வைக்கப்படும். எந்த நிலமைகளிலும தொழிலாள வர்க்கத்தின் வேலைத்திட்டத்தின் அச்சாணி அதனது வர்க்க சுயாதீனத்தை பாதுகாப்பதாகத்தான் இருக்கமுடியும். இங்கேதான் தமிழீழ விடுதலைப்போராட்டம் ஏன் முட்டுச்சந்திக்குள் வந்தது என்ற கேள்விக்கான விடை இருக்கிறது. இந்தப்போராட்டம் தொழிலாளவர்க்கத்தின தலைமையில் இல்லாததின் நேரடி விளைவே ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான அத்தியாவசியமான ஜனநாயகக் கோரிக்கைகளுக்க பதிலாக இன்று அவர்கள் தமிழ் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத தினையும் பல்தேசியநிறுவனங்களது சுரண்டலையும் முகங்கொடுக்க வேண்டிய நிலமை உருவாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் இந்த நிலமை இந்த நூற்றாண்டின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப்புரட்சியின தலைவனாக யார் இருப்பது என்ற மிகவும தீர்க்கமான பிரச்சனையின் கசப்பான அனுபவமாகும். தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களோ. அல்லது ஆசிய. ஆபிரிக்க. லத்தீன்அமெரிக்க கண்டங்களில் வாழும லட்சக்கணக்கான மக்களோ இந்தப்பிரச்சனைக்கான தீர்வினை ரஷ்ய புரட்சியின் அனுபவங்களுக்கு வெளியிலிருந்து பெற்றுவிட முடியாது.

ரஷ்யப்புரட்சியில் மென்சிவிக்குகளது வேலைத்திட்டம் வரப்போகும் புரட்சி முதலாளித்துவத்தை ஆட்சியிலமர்த்தும ஒரு முதலாளித்துவ குடியரசை உருவாக்கும் என்றதிலிருந்து ஆரம்பித்தது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒரு நீண்டகாலப்பகுதியினூடு தொழிலாளிவர்க்கம் தனது சுயமான போராட்டங்களினால சோசலிசப்புரட்சியை நோக்கி முன்னேறும் என்ற முடிவிற்கும் வந்தது. எனவே வரப்போகும் புரட்சியில் தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தினரின பிரிவுகளுடன் ஒரு அரசியல்கூட்டுக்கு போவதுடன் அதனது தலைவனாக முதலாளித்துவத்தை ஏற்றுக கொள்ளவேண்டும் என வலியுறுத்தியது. லெனினதும். டிராட்சியினதும வேலைத்திட்டம் இதனை முழுமையாக நிராகரித்ததுடன் தொழிலாள வர்க்கத்தின அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டுவதை மையமாகக் கொண்டிருந்தது. ரஷ்ய முதலாளித்துவத்தின் பிற்போக்குத்தன்மையும தொழிலாளிவர்க்கத்தின் மீதுள்ள அதன் பகையுணர்ச்சியும். பயமும் அதனை ரஷ்யாவின் ஜனநாயகப்புரட்சியின் பணிகளாக நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களை அழித்தொழிப்பதற்கு லாயக்கற்றதா யிருக்கின்றது. ரஷ்யாவின் பெரும்பான்மை ஏழை விவசாயிகளின் அரசியல் பாத்திரம எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்தாலும் அவர்களால் இன்னொரு வர்க்கத்தின் முன்னோக்குக்குள் மட்டும்தான இயங்கமுடியும். எனவே ரஷ்யாவில ஜனநாயகப்புரட்சியின் தலமை தொழிலாள வர்க்கத்தின் தோள்களில்தான சுமத்தப்பட்டிருக்கிறது. தனது தலமையின கீழ் விவசாயிகளை அணிதிரட்டிய தொழிலாழி வர்க்கம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணிப்பதன் மூலம்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகப் புரட்சியினை நிறைவுசெய்யமுடியும். இந்த ஜனநாயகப புரட்சியை வெற்றிகரமாக்குவதற்கான முன்நிபந்தனைகள் முதலாளித்துவ சொத்துடமை முறைகளை இல்லாதொழிப்பதில் தங்கியிருக்கிறது. இதனால் இந்த ஜனநாயகப்புரட்சியானது ஒரு சோசலிச குணாம்சத்திற்கு வெளிப்படையாக மாற்றமடைகின்றது.

இந்த முன்னோக்குதான போல்சிவிக்புரட்சியினை வெற்றிக்கு இட்டுச்சென்றதுடன் உலகின மிகப்பின்தங்கிய ரஷ்யாவில் பல்வேறுபட்ட தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கும், சோசலிச சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்குமான மூலைக்கல்லாக இருந்தது.

## பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவத்தின் தன்மை

'சமர்' தற்போது முன்வைக்கும் இந்த அனைத்து வர்க்ககூட்டு போல்சிவிக்குகளின் வேலைத் திட்டத்தினை குழிதோண்டிப் புதைத்து மென்சிவிக் வேலைத்திட்டத்திற்கு உயிரூட்டிய ஸ்டாலின், புகாரின் ஆகியோரின சித்தாந்த ஆயுதக்கிடங்குகளிலிருந்து பெறப்பட்டதாகும். 1928ல் சீனப்புரட்சியின தோல்விகளின் மத்தியில் மூன்றாவது அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் ஸ்டாலின், புகாரின் ஆகியோரால் எழுதப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவேற்றியது. இந்த வேலைத்திட்டம் போல்சிவிக்குகளது உலகப்புரட்சி முன்நோக்கினை முழுமையாக நிராகரித்தது. காலனித்துவ முதலாளித்துவத்தின் முன்னால் தொழிலாளி வர்க்கத்தை நிராயுத பாணியாக்கும நோக்கில் " காலனித்துவ நாடுகளின் முதலாளித்துவத்துடன் தற்காலிகமான உடன்பாடுகள் தொழிலாள, விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு அது தடையாக இல்லாமல் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உண்மையான போராட்டத்தை அது நடாத்தும் மட்டும் ஏற்றுக கொள்ளப்படகூடியது" என இந்த வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (லெனினிற்கு பிறகு மூன்றாவது அகிலம், பக்கம் 127, ஆங்கிலப்பதிப்பு New Park Pablications, London) இது தனியே சீனப்புரட்சியினை மட்டுமல்ல அதன் பின்னர் காலனித்துவ நாடுகளில தோன்றியிருக்கக்கூடிய அனைத்துப புரட்சிகர எழுச்சிகளிலும் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனத்தினை கழுத்தறுத்ததோடு தேசியமுதலாளித துவத்திற்கு அடிபணிவதற்குமாகத தயாரிக்கப்பட்டது.

ட்ரொக்சி "ஏகாதிபத்தியத்திற்கெதிரான உண்மையான போராட்டத்தை" செய்வதற்கு காலனித்துவ நாடுகளின தேசியமுதலாளித்துவத்திற்கு சக்தி யிருக்கின்றது என்று சொல்வது மென்சிவிக்குகளது வேலைத்திட்டத்திற்கு திரும்பிப்போவது என்று வாதிட்டார். நிலப்பிரபுத்துவம், ஜார் மன்னனது அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து ஆகியவற்றிலிருந்து ரஷ்ய முதலாளித்துவத்திற்கு புரட்சிகர குணாம்சம உருவாகும் என்பதே மென்சிவிக்குகளது வாதம். இதே அடித்தளத்தில் காலனித்துவ அடக்குமுறை தேசிய முதலாளித்துவத்திற்கு புரட்சிகர குணாம்சத்தை வழங்கும் என ஸ்டாலின், புகாரினால் முன்வைக்கப்பட்டதை நிராகரித்த ட்ரொக்சி தேசியமுதலாளித துவத்தினை தீர்மானிப்பது—

**" முதலாளித்துவத்தின் கொள்கையின் தன்மை தொடர்பான கேள்விகள் புரட்சிகர போராட்டத்தினை நடத்தும் தேசத்தினது முழுமையான உள்ளார்ந்த வர்க்க உறவுகள் எந்த வரலாற்றுகட்டத்தில் இந்தப் போராட்டம் உருவாகின்றது, தேசிய முதலாளித்துவம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எந்த மட்டத்திற்கு அரசியல், பொருளாதார ரீதியில் இராணுவ ரீதியில் உலக ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கின்றது, இறுதியாகவும், மிக முக்கியமாகவும் எந்த மட்டத்திற்கு உள்நாட்டுத் தொழிலாள வர்க்கம் வர்க்கரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது, அத்துடன் அதற்கு சர்வதேச புரட்சிகர இயக்கங்களுடன் என்ன தொடர்புகள் இருக்கின்றது என்பதினாலே தீர்மானிக்கப்படுகிறது.**

**ஒரு ஜனநாயக அல்லது தேசியவிடுதலை இயக்கம் முதலாளித்துவத்திற்கு சரணடைவை தீவிரமயப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும். புரட்சிகர அபிவிருத்திகளுக்குள் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான தலையீடு முதலாளித்துவத்தின் முழுமையான சரண்டலை முடிவுக்கு கொண்டுவரும் பயமுறுத்தலை அதற்கு விளக்குகிறது. "லெனினிற்குப்பிறகு மூன்றாவது அகிலம் பக்கம் 131'**

தேசிய முதலாளித்துவம் பற்றிய 1928ல் இந்த மதிப்பீட்டின் சரியான தன்மை இன்று 65 வருடங்களிற்கு பின்னர் ஏகாதிபத்தியத்தின் மரண நெருக்கடி நிலமைகளில் உலகின மூலை முடுக்கெல்லாம உலகப்பொருளாதாரத்தின் கட்டுப்பாட்டினுள வந்துவிட்ட நிலையில் முழுமையாக நிரூபித்துக்காட்டுகிறது.

"ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம்" என்ற சொல்லை சம்பிரதாயத்திற்கு தன்னும் உச்சரிப்பதை நிராகரிக்கும தேசியமுதலாளித்துவம் ஜனநாயகப புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின குரல்வளையை நசுக்கும் சக்திகளாக உருமாறியிருக்கின்றது. பாலஸ்தீன விடுதலை இயக்கமும், ஆபிரிக்க தேசியகாங்கிரசும், சன்டினிஸ்டாக்களும், தமிழ் தேசியவிடுதலை இயக்கங்களும தவிர்க்கமுடியாதபடி ஏகாதிபத்தியத்தின தேவைகளுக்கு சுதந்திர வர்த்தக வலயத்தினை உருவாக்க தயாராகவிருப்பதன் வரலாற்று அடித்தளம இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த முதலாளித்துவத்தில்தான் இருக்கிறது.

## சோசலிசப்புரட்சி வேலைத்திட்டம்

தமிழீழ விடுதலை புலிகளின் வேலைத்திட்டத்திற்கும், அதற்கு எதிரான ஏனைய அனைத்து இயக்கங்களுக்குமிடையில் மூலோபாய ரீதியில் சீனப்பெருஞ்சுவர் இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஏனைய இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு முடிவு கட்டுவதால் முதலாளித்துவத்தை பாதுகாக்கலாம் என இனவாத அரசிற்கு சத்தியம் செய்து கொடுக்கையில் எல். ரி. ரி. ஈ தமிழ்ப்பிரதேசங்களை தனது கைகளில் ஒப்படைப்பதால் முதலாளித்துவத்தை

தொடர்ச்சி—மறுபக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பதற்கான நிபந்தனைகளை உருவாக்குவது தொடர்பாக வாக்குறுதியளிக்கின்றது. இறுதியில இவர்கள் அனைவரும் பின்பற்றுவது ஒரே பாதையாகும். இது இலங்கைதீவில் முதலாளித்துவத்தை பாதுகாப்பது என்பதே.

சமர் வைத்திருக்கும் "மூன்றாவது பாதை" அடித்தளத்தில் தற்போதைய இயக்கங்களின் ஒரே ஒரு பாதையான முதலாளித்துவ பாதுகாப்பு என்ற அடித்தளத்திலிருந்து ஒரு போதும் வேறுபடவில்லை. இந்த "மூன்றாவது பாதை" என்ற தேசியவாத இயக்கம ஒன்றை உருவாக்கும பிற்போக்கு வேலைத்திட்டத்தினை தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

தமிழ் தொழிலாளர்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னால் இருக்கும் ஒரேஒரு வழி தீவின் தொழிலாளவர்க்க ஐக்கியத்திற்காக போராடுவதாகும். இலங்கை தீவில் சோசலிசபுரட்சியின் கட்சியாக நான்காவது அகிலத்தின் அனைத்துலக குழுவை கட்டியெழுப்புவதும் "தமிழீழ சிறீலங்கா சோசலிச குடியரசை" உருவாககுவதற்கு போராடுவதுமே இன்றைய முட்டுச சந்தியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரேஒரு பாதையாகும்.

---

**மெலிந்த நாளைகள்**

நம்பினோம்
மெலிந்த நாளையாய்
வசந்தங்களை நம்பினோம்.

அது கடந்த காலம்
வந்தது போல் வந்து
காணாமல் போனது


சிறு பூச்சியாய்
கவர்க்கரையில்
புன்னகையுடன்
கடந்து சென்றோம்

அது கடந்த காலம்
வந்தது போல் வந்து
காணாமல் போனது

எழுதி வைத்து வாழ்கின்ற
இந்த வாழ்க்கையை
அலட்சியம் செய்து
வேர்வரை சென்றடையும்
நீர்ப்பாத்திகளுக்கு
வழியமைப்போம் இறுதிவரை

நாம் விரும்பியதை வாழ்ந்து
விரும்பிய போது மடிய
எம் ஒவ்வொருக்கும்
ஓர் எதிர்காலம் வேண்டும்

—பாமதி—





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நா**ட்டின் எதிர்கால விதியைப்பற்றிய தற்போதைய கவனம் இரு நிகழ்ச்சிகளை சுற்றி வளைந்து கொண்டிருக்கிறது. "கலைக்கப்பட்ட தென்மாகாண மகாணசபை தேர்தலும்". "கிழக்கிலும் வடக்கிலும் நடக்கப் போகும் பிரதேசசபைத்தேர்தலும்" ஆகும். இவை கடந்தகாலங்களில் நடந்த சில முன்னேற்றங்களுடனும், நடந்த தேர்தல்களுடனும் சம்பந்தமாகவுள்ளது. எதிர்க்கட்சியால் ஆளுகை செய்யப்பட்ட தென்மாகாணசபை கலைக்கப்பட்ட முறை தேர்தல்கள் மூலமான "மக்கள் தீர்ப்பினை எதிர்க்கும் நடைமுறை" அல்லது "குறுக்கு வழியான நடவடிக்கைகளை நியாய ப்படுத்தும் செயலென" கேள்வி எழுப்பப்படுகிறது.

காமினிதிசநாயகாவின் "மேலதிக செயலா—ளராக" தேர்தல் ஆணையாளர் 81ம் ஆண்டு மாவட்டசபை தேர்தலுக்கு யாழ்பாணம் போனது ஒரு துரதிர்ஸ்டவசமான சம்பவமாகும். அப்போது யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது மட்டுமன்றி கட்டுக்கட்டாக ஏற்கெனவே பதியப்பட்ட வாக்கு சீட்டுகள் பெட்டிகளுடன் வாக்கு சாவடிகளுக்கு எண்ண அனுப்பப்பட்டன. "தற்போது வாக்கு சீட்டுகளை எண்ண பாவிக்கப்படும் தொழில்முறைகள் மிகவும் நுட்பமானவை" .

அடுத்து வடக்கு கிழக்கு பிரச்சனையை தீர்க்க முக்கியமான அதிகாரம் பற்றிய பிரச்சனையாகும். கொழும்பில் உள்ள முக்கிய இடங்களிலிருந்து மாகாண சபைகளுக்கு அவநம்பிக்கை தெரிவிக்கும் வகையில் கிறீச்சிடும் சத்தங்கள் ஒலிக்கப்படுகின்றன. இவற்றுக்கு பத்திரிகைகளில் நிறைய இடம் கொடுக்கப்படுவது அவர்களின் பயத்தினை காட்டுகின்றது. "இவர்கள் நினைக்கிறார்கள் தாமே நாட்டின் எல்லா மூலைக்கும்,கிராமத்துக்கும் எது நன்மையானது என்பதை தீர்மானிக்கும் கடமைப்பட்டவர்கள் என்று" ( நாட்டில் தாங்களே ஏற்படுத்திய குழப்ப நிலையை பாக்காமல்)
கொள்கை ரீதியாக ஒற்றையாட்சியை நடைமுறைபடுத்த முனைபவர்கள் "முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் முயற்சிக்கப்பட்டது" என வஞ்சகமாக புகழ முனைகிறார்கள். இதற்கு அச்சம் தரும்பதில் தெற்கில் ஒலிக்கப்பட்டது.
முதலாம் பராக்கிரபாகு தனது படைத்தலைவர் 'றக்காவை' அரசி சுகலாதேவிக்கு கீழ் இருந்த 'றுகுணவை' ஆட்சிக்குட்படுத்த அனுப்பினார். நூற்றுக்கணக்கான கொலைகள்மூலம் 'றுகுணவை' அமைதிப்படுத்த முனைந்தது அதனையும் அதன் நாகரீகத்தையும் சரித்திரத்திலிருந்து மறைக்க காரணமாகியது. துரதிர்ஸ்டவசமாக எண்ணூறு வருடங்களின் பின்னால் 'றுகுண' மீண்டும் சரித்திரத்தில் தோன்றி அரசியல் கற்பனையான மத்திய அரசாட்சிக்கும், அதன்கொழும்புசார் நிலைக்காகவும் பல இளைஞர்கள் பலிகொடுக்கப்பட்டனர். இந்நிலைகளின் சார்புகள் நாட்டிற்கு பெருமளவு வெளிநாட்டு பணத்தை, பாரிய திட்டங்களை அதிக அளவான ஊழல்களையும், அதிக அளவு வறுமையையும் கொண்டு வந்து அடிமட்ட மக்களுக்கு கோபங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இவற்றின் பின்னணியில்தான் கிழக்கின் தொந்தரவு நிறைந்த பிரச்சனைகளை பார்க்க வேண்டும்.

ஏழை சிங்களவர்கான கிழக்கின் பாரிய குடியேற்றத் திட்டங்கள் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளுக்கு இரண்டு விதத்தில் உதவியது. முதலாவதாக, இப்படி ஒரு வர்க்கத்துடன் கூட்டு சேர்ந்து அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளையோ, செல்வாக்கையோ பெறுதல் ஆகும். மற்றையது அங்கு இருக்கும் சிறுபான்மையினர் மீது அச்சுறுத்தலையும், அழுத்தத்தையும் பிரயோகித்தலாகும். இப்படியான கொள்கை அங்குள்ள எல்லா சமூகங்கள் மீதும் பாரதூரமான பிரச்சனைகளை உருவாக்கியது. உதாரணமாக திருகோணமலையில் கந்தளாய், அல்லை திட்டங்களில் காணிகளுக்கு விண்ணப்பித்த பல தமிழ் முஸ்லீம்களுக்கு காணிகள் வழங்கப் படவில்லை. நீண்டகாலத்தில் தமிழ், முஸ்லீம் விவசாயிகளுக்கான நீர்ப்பாசன வசதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டது. 'வாண்ஆற்றில்' முஸ்லீம் விவசாயிகள், "பரவும்" சிங்கள மக்களின் தொகையினால் தமது சேனைப்பயிர்ச் செய்கை நிலங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இன்று அங்கு வாழும் முஸ்லீம் மக்கள் சுற்றுப்புறத்தில் உள்ள அநேகமான முஸ்லீம்,தமிழ் சமூகத்தினரைப் போல் புறக்கணிக்கப்பட்ட நிலையில் கடுமையான வறுமையில் மட்டும் வாழ்கின்றனர். அவர்களது 'ஆயிலடி' பிரதிநிதிகளின் தகவலின்படிஅரை ஏக்கர் நிலப்பரப்பிற்குள் 22 குடும்பங்கள் வாழ்கின்றனர். அப்பிரதேசத்தின் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் கூற்றுப்படி 77ம் ஆண்டு கலவரத்தின் போது 30 அல்லது அதற்கு மேற்பட்ட பழைய கந்தளாய் கிராமத்துத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அங்கு பொதுவாக நல்லுறவு வைத்திருந்த சிங்கள விவசாயிகளால் அல்ல. அங்கு குடியேற்றத்திட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட சிலராலேயே கொல்லப்பட்டனர்.

சிங்கள மாவட்டங்களான அனுராதபுரம், பொலநறுவ, மொன்றாகல, ஆகியவற்றை விட நீர்வளம் இழந்த, கூடிய சனத்தொகை கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முன்னிரண்டு பிரதேசங்களும் மகாவலித் திட்டத்தின் முக்கிய பிரதேசங்களாகும். மற்றையது பல்தேசிய விவசாய வர்த்தகத்தின் முதலீட்டிற்குள் பெரிதளவு வந்துள்ளது.

மேற்கூறிய கொள்கைகளினால் கிழக்குவாழ் தமிழரும், முஸ்லீம்களும் யாழ்ப்பாண தலைமைத்துவத்தை நோக்கி மனக்குறைகளை ஈடுசெய்யுமாறும், தமக்கு எதிரான தீங்கினை தடுக்குமாறும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் முஸ்லீம்களின் காணி சம்பந்தமான பலதடவைகள் வாதாடி வந்துள்ளனர். 83 கலவரத்தின் பின் கொண்டுவரப்பட்ட 6வது திருத்தச்சட்டம் தமிழ்த் தலைவர்களை பாராளுமன்றத்திலிருந்து அகற்றியது. இதனால் தமிழ்த் தீவிரவாதக்குழுக்களில் பெருமளவு முஸ்லீம்கள் இணைந்து கொண்டனர். இவர்களே இம்மக்களின் நலன்களுக்கு பாதுகாவலர்களாக குறிப்பான ஆட்சிப்பிரதேசத்தில் கருதப்பட்டனர். காலப்போக்கில் இயல்பான சகிப்புத்தன்மையற்ற தமிழ்த் தேசிய அரசியலும், அரசின் சூழ்ச்சித் திறனுள்ள

இருதலைவாதப் பொறிக்குள் கிழக்கு மாகாணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டமிடுதலும் தமிழருக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் பிளவையும் வன்செயலையும் கொண்டுவந்துள்ளது. 1991 ஆனி மாதப் போரைத் தொடர்ந்து இராணுவத்தினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கிழக்கு மாகாணத்தில் கொல்லப்பட்டு, பெரும்பாலான கிராமங்கள் சூறையாடி திட்டமிட்டு அழிக்கப்பட்டதும், புலிகளால் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டதும் அதன் விளைவு தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் தனிமைப்படுத்தப்பட்ட, உதவியற்ற உணர்ச்சியை உருவாக்கியது. இவற்றினால் புலிகள் கணித்தபடி அவர்களுக்கு பல புது படைவீரர்கள் பரிசளிக்கப்பட்டு அவர்கள் வலிமைமிக்க இராணுவமாக வந்தனர். இவ் அவல நிகழ்ச்சிகளினால் கிழக்கின் சமூகங்கள் தம் சொந்த விவகாரங்களை கையாளுவதற்கான அரசியலை வளர்ச்சியடையச் செய்வதினை தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இடைக்காலத்தில் 83 ம் ஆண்டு தொடக்கம் ஆயிரக்கணக்கான கிழக்கு தமிழ் இளைஞர்கள் தமது வாழ்க்கையை யாழ்ப்பாண தலைமைத்துவத்தின் கீழ் போராடி அர்ப்பணித்தனர். இதன் இலக்கு பின்வாங்கிச்செல்லும் செயலாக இருந்தது. இது பேரச்சத்தை உருவாக்கி வீணாய் ஒரு தீர்வைத் தேடி கிழக்கு மக்கள் யாழ்ப்பாணத் தலைமைத்துவத்தில் தங்கியிருக்கும் நிலையை அதிகரித்தது. வடக்கு கிழக்கு ஒன்றுபடும் நிலை உளவியல் ரீதியில் அத்தியாவசியமாய் இருந்தது. இது குறைந்த பட்சமாக மாயையாய் இருந்தாலும் அவர்கள் பாதிக்கப்பட்டதற்கு ஒரு உத்தரவாதமாய் இருக்கிறது. தமிழர்களின் இத்தேவையை முஸ்லீம்கள் பொதுவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அத்துடன் இதனுடன் ஒத்துப்போகக்கூடிய இயல்புடனும் இருந்தனர்.

## அரசாங்கத்தின் தற்போதைய முக்கிய கொள்கைகள்

ஒரு புறத்தில் அரசாங்கத்தினால் கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் சலுகைகளுடன் இருப்பதாகக் காணப்படலாம். ஆனால் பெரும் பகுதியினருக்கு தொடர்ந்து வறுமையும் அவமதிப்புமே இதன் அர்த்தமாயுள்ளது. "அரசாங்கம் தனது வளங்களை , வாடிக்கையான ஆதரவினை தொடர்ந்து செயலாற்றுவதற்காக வாரித் தந்துள்ளது" இதற்கு பல உதாரணங்கள் உண்டு. ஒருவருக்கு குடியேற்றப் பிரதேசம் ராஜஎலவிலும், அவரின் மகனுக்கு பதவியாவிலோ, வண் — எலவிலும்(ஆறு) அவரின் மகனின் மகனுக்கு மகாடிவுல் வீலவிலும். (பெரியவிலான் குளம்) கிடைத்துள்ளது. இதுகூட ஒருபோதும் அங்குள்ள ஒரு முஸ்லீமுக்கோ, தமிழருக்கோ நடைமுறையில் கிடைக்கவில்லை. பலரின் குடும்பங்களில் ஒருவருக்குக்கூட காணி ஒருமுறையும் இருந்திருக்கவில்லை. ஆனால் இது கட்டாயமாக சிங்களவருக்கு உதவி செய்வது என்றில்லை. பூர்வீகக் காணிகளை மரபு முறை சொத்துக்களாகக் கொண்டு, பாடசாலை, பொதுசேவை வசதிகளுடன் இருந்தவர்களுக்கு ஒரு வித திடநிலை இருந்தது. மற்றவர்கள் "தூரப்பிரதேசங்களுக்கோ அல்லது அத்துமீறிய காணிகளுக்கு வலுக்கட்டாயமாக இடம் பெயர்க்கப்பட்டவர்கள்". பணவசதி குறைந்தவர்களாகவும், பாடசாலைகளிலிருந்தும், பொது சேவைகளிலிருந்தும் (குடும்பக்கட்டுப்பாட்டு திட்டம் போன்ற வசதிகளிலிருந்தும்) விலத்தி வைக்கப்பட்டும், பெரும்விரக்திக்குட்பட்டும் இருந்தனர்.

போரின் தொடக்கத்தின் போது பெரும்பாலானவர்கள் தமிழ்த் தீவிரவாதிகளின் படுகொலைகளுக்கு பலியானார்கள். தொடர்ச்சியான தாக்குதலின் பயத்திற்குட்பட்டு இங்கேயும், அங்கேயுமாக காணிகளையும், புகலிடத்தையும், குடும்பங்கள் தேடி அலைய துரத்தப்பட்டனர். ஒரு வேளை புலிகள் படுகொலை செய்திலும் பார்க்க இராணுவத்தினர் ஜே. வி. பியினர் என்ற சந்தேகத்தில் கொலை செய்தது கூடிய எண்ணிக்கையாக இருந்தது. 'வெண்டரசன்புர' குடியேற்றத்திலிருந்து 50 பேர்வரை காணாமற்போயுள்ள சம்பவம் ஆதாரபூர்வமாக கூறப்படுகின்றது.

அரசு தொடர்ந்து இவர்களுக்கு ஆதரவு செய்யும் வழிவகை இல்லாமற் போனவுடன் போர் இயந்திரம் ஆளுகை செய்தது. கந்தளாயில் உள்ள ஒவ்வொரு சிங்கள குடும்பத்திலும் சராசரி ஒருவராவது அரசபடையில் உள்ளதாக கூறப்பட்டது. பிரதான வீதிகளை அடுத்து அமைக்கப்பட்ட சிறிய குடியேற்றத் திட்டங்களிற்கு இராணுவ ஆதரவு முழுமையாக வழங்கப்பட்டது. (உதாரணமாக சிங்புர, ஜயபுர, தம்பலபுர போன்ற இடங்களில் உள்ள 20 பேர்ச் காணிகளிலமைந்துள்ள குடியேற்றத் திட்டங்கள்) இங்குள்ள சில மக்கள் பிரதிநிதிகள் "இராணுவம் தமது பாதுகாப்பிற்காகவே இக்காணிகளை வழங்கியதே தவிர மக்கள் மீது கொண்ட அன்பினால் இக்காணிகள் தமக்கு வழங்கப்படவில்லை" என்று கூறினார்கள். ஆனால் இதனால்த்தான் அம்மக்கள் பங்கீட்டுப் பொருட்களையோ, வதிவிடங்களையோ பெறக்கூடியதாக இருந்தது. சீர்கேடுற்ற சூழல் என்னவென்றால் பலகுடும்பங்களில் ஒரு மகன் ஜே. வி. பி என்ற சந்தேக நபராக தலைமறைவானால் மற்றொரு மகன் இராணுவத்தில் உள்ளார். மகாவலித்திட்டத்தில் எக்காணிகளும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் இவர்கள் கூறினார்கள். உண்மை என்னவென்றால் இச்சிங்கள மக்களும் துஸ்பிரயோகம் செய்யப்பட்டு, ஆற்றலற்று, தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வல்லமையற்றுப் போயுள்ளனர்.

## கிழக்கின் எதிர்காலம்

அரசைப் பொறுத்தவரை றுகுண பிரதேசத்துக்கு தன்னாட்சி உரிமையை "சாரத்தை" வழங்க விருப்பமற்ற நிலையை வெளிக்காட்டினாலும், "இராணுவ நடவடிக்கைகளின் தோல்விகளாலும், நிதிவழங்கும் நாடுகளின் அழுத்தத்தாலும்" வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் ஒரு அரசியல் செயற்பாட்டை காட்டவேண்டிய தேவைக்கு தள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழு தனது முதலுரிமையாக கிழக்கை வடக்கிலிருந்து துண்டாடி மேலும் இப்பிரச்சனையை விளங்கிக் கொள்வதில் ஆர்வமில்லை எனக்காட்டியது. வரப்போகும் பிரதேச தேர்தல்கள் வடக்கு கிழக்கை துண்டாடும் பொது வாக்கெடுப்பின் ஒத்திகையாகப் பலராலும் பார்க்கப்படுகிறது.

இச்சூழலில் இடம் பெயர்ந்தவர்கள், அரசியல் நேர்மையீனம், பதிலில்லா கேள்விகள் என்ற பிரச்சனைகளுக்கு மேலாக அரசியல் விளைவுகள் பற்றி ஆரோக்கியமாக முன்னறியக்கூடியதாக எதுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படவில்லை. அரசாங்கம் காணாமற் போன ஆயிரக்கணக்கான கொலைகள் தலைமறைவுகள் என்பனவற்றிற்கு முகம் கொடுத்து விசாரணை செய்யாதிருக்கும் போது இத்தகைய வேலைமுறைகளை முன்னெடுத்திருப்பது தமிழர்களுக்கு மேலும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்ச்சியை உருவாக்கும். இது புலிகளின் எதிர்மறையான அரசியலையே வலுவூட்டும். மற்றைய ஆலோசனையாக "சிங்கள, முஸ்லீம் பெரும்பான்மையாக காலனிகளாக்கப்பட்ட இடங்களைத் தவிர்த்து" வடக்கு கிழக்கு இணைப்புப் பிரதேசத்தை ஆக்குதல் தற்காலிகமாக ஒரு தணிவை ஏற்படுத்தும். ஆனால் இது மிகப்பெரிய பிரச்சனைகளை உருவாக்கி மோதல்களை நோக்கிச் செல்லும். இப்படியான சிந்தனைகள் புலிகளே தமிழரின் இயல்பான பாதுகாவலர்கள் எனவும், அரசாங்கம் சிங்களவரினதும், முஸ்லீம்களினதும் இயல்பான பாதுகாவலர்கள் எனவும் உள்ளடக்கமாக ஊகம் செய்கிறது. இவ்வாறான "ஊகங்கள் உராயும் பிரிவினைவாத அரசியலின்" இருபக்கத்துக்கும் எதிராக இந்த சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன. உண்மை என்னவெனில் மூன்று சமுதாயங்களும் ஒருமித்து வாழ்ந்து செயலாற்ற வேண்டும். மூன்று சமூகத்துக்கும் வேறுபட்ட பாடசாலைகள், தபால் நிலையங்கள் என்ற விரும்பாத நிகழ்வுப் போக்கு இருந்தாலும் அவர்கள் கீழ்மட்டங்களில் ஒருமித்து வேலை செய்கின்றனர். தமிழ் விவசாயிகள், தொழிலாளிகள், கனரக தொழிலாளிகள் இன்றும் பெருமளவில் அம்பாறை மாவட்டத்துக்கும், கந்தளாய்க்கும் சென்று சிங்கள அல்லது முஸ்லீம் வீடுகளில் தங்கியிருந்து அவர்களுக்கு வேலை செய்கின்றனர். முஸ்லீம் தமிழ் பிரதேசங்களில் சில இடர்களை எதிர்நோக்கியபடி அவர்களிடையேயான சீரான வியாபாரம் ஒவ்வொருவருடைய பிரதேசத்திலும் நடக்கிறது. இது ஒரு தேவையான குணப்படுத்தலைக் கொடுக்கின்றது.

கூடுதலாக சாதாரண மக்களின் நோக்கத்திலிருந்து விலகி நிற்கும் குறுகிய நோக்கங்களைக் கொண்ட புத்திஜீவிகள், அரசியல் வாதிகளின் மனதிலேயே பிரிவு காணப்படுகின்றது. மற்றொரு பிரதான நோக்கம் பாரிய விவசாயத் திட்டங்கள் சார்ந்ததாகும். "உதாரணமாக விரும்பியோ விரும்பாமலோ கிழக்கில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியவை கந்தளாய், கல்லோயாத் திட்டங்களாகும்". இவை தொடர்பான பிரச்சனைகள் சமூகங்களிடையே பகிர்ந்து காணப்படுகின்றது.

இவை எப்படியெனின் வரண்ட காலத்தில் கீழ் வரம்பில் காணப்படும் தண்ணீர்ப் பற்றாக்குறையும், மழைகாலங்களில் தண்ணீர் அதிகமாகக் காணப்பட்டு ஈற்றில் அதிகரிக்கும் உப்பத்தன்மையுடையதாகவும் இருக்கிறது. அதிகளவு நீர்ப்பாசன வசதியைக் உள்க்கொண்டதும் காலனித்துவத்துக் குள்ளாக்கப்பட்ட சிங்களவர்கள் இருக்கும் இடமான மேல்வரம்பை பிரித்தெடுப்பது என்பது தொடர்ச்சியான மேலதிக பிரச்சனைகளை உருவாக்கும் சந்தர்ப்பங்களை நோக்கிச் செல்லும். அதிகாரப் பரவலாக்கம் உட்படுத்திய அமைப்பின் நடவடிக்கைகளை குறைத்து மீண்டும் அதிருப்திக்கு இட்டுச் செல்லும். மேலும் மாகாண அதிகாரத்தின் தலையீடு எல்லா இனங்களிடையேயான கூர்மையான சமூகப் பிரச்சனைகளுக்கு தேவையாகும். இவ்விடயத்தில் மத்திய அரசு தன்னிடமுள்ள முன்னுரிமை பெற்ற பொருளாதார பிரச்சனைகளை தீர்க்காமல் பதிலாக மேலும் கூட்டியுள்ளது.

இவ்வுண்மைகள் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கம், வடக்கு கிழக்கு இணைப்பு அல்லது தற்போதைய நிலமைபோல் இரு வேறு மாகாணங்கள் என்ற தேர்வுகளின் மத்தியிலுள்ளது. எனது கருத்தின்படி இத்தேர்வு நெருக்கடியான விடயமல்ல. இவ்விடயம் விவாதத்துக்குள்ளாக்கப்பட வேண்டும். இந்த இணைப்போ அல்லது இல்லையா என்ற விடயம் தற்போது கட்டாயப்படுத்தப்படாமல் காலப் போக்கில் வளர்ச்சியடையப்பட வேண்டும். அரசாங்கம் ஆற்றலுடையதாக இருக்க விரும்பினால் தற்போது ஒரு வடக்கு கிழக்கு இணைப்பிற்கு இணங்கி தமிழரை அவர்கள் அங்குள்ள மற்றைய சமூகங்களை சம பங்குள்ளவர்களாக நடாத்தவும். அப்போது அவர்களுடைய நாட்டங்களுக்கு மதிப்புக் கொடுப்பதும், "அப்போது வடக்கு" முழுமையின் வாழ்க்கைக்கு ஒரு உருப்படியான பங்களிப்பை கொடுக்கலாம் என்பதைக் காட்ட வேண்டும்.

புலிகள் தொடர்ந்து வடக்கை மறியல் வீடாக்கி ஆண்டால் மக்களின் மனநிலையும், வலிமையும் பூட்டப்பட்டு இது நடைமுறை சாத்தியம் அற்றுப்போகும். நீண்டகாலத்தில் முன் மதிக்கப்பட்ட தெரிவு ஒரு தனியான கிழக்கு மாகாணம் ஆயின் அரசாங்கம் இணைப்பினை அவசியமற்ற தேவையாக்க மிகக்கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், தமிழர் வடக்கில் உளவியல் ரீதியில் தங்கியிருக்கும் நிலையை முன்மொழிய வேண்டும். அரசாங்கம் தனது படைகளின் நடவடிக்கைகளுக்கு முழு விசாரணை வைத்து அடிப்படை நீதியை நிலைநாட்ட வேண்டும். அத்துடன் புனர்வாழ்வுத் தேவைகளை துரிதப்படுத்த வேண்டும். மேலும் பாரபட்சம் காட்டாமல் இனங்கள் ஒன்றாக வேலை செய்து பிரிவினைவாத அரசியலை கைவிட ஊக்குவிக்கப்பட வேண்டும்.

புலிகளும் சுதந்திரமாக, ஆற்றலுடனும், ஆரோக்கியமாகவும் செயற்பட உத்தேசித்தால் அவர்களும் கூடிய பெறுபேறுகளைப் பெறுவர். அவர்களும் ஒரு அரசியல் ஆயுதமாக வன்செயலையோ, அச்சுறுத்தலையோ மற்ற சமூகங்களுக்கு எதிராக பாவிப்பதைக் கைவிட்டால் சூழ்நிலையை சுமுகமாக்குவதோடு அதே விதமாக செயற்பட அரசின் மீதும் அழுத்தத்தை கூட்டும். பின் தமிழர் மற்றைய சமூகங்களுடன் சுதந்திரமாகப் பேசி ஒரு நடைமுறை ஒழுங்குக்கு வர ஊக்கப்படுத்த வேண்டும். இணைப்பை வெளிப்படையாக வைக்கலாம். ஆனால் அரசாங்கமோ, புலிகளோ ஆற்றல்திறனுடன் இதனை முயற்சிப்பது என்பது நடக்காது என்றே தோன்றுகிறது. சமுதாயத்திலுள்ள சாதாரண மக்களை முக்கிய விடயங்களை பற்றி ஒருவரோடு ஒருவரை பேச வைக்கலாம். குறைந்த பட்சமாக தெற்கிலுள்ள ஜனநாயக அமைப்புகள் மீது ஒரு நம்பிக்கை இருக்கக் காணப்படுகின்றது.

**by ,Rajan coole**
**Counterpoint,**
**ஆங்கிலத்திலிருந்து**
**மொழி**
**பெயர்க்கப்பட்டது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உனது தலையில் ஒரு மனிதன் குட்டுகிறான்

உனது தலையில் ஒரு மனிதன் குட்டுகிறான்
ஒவ்வொரு குட்டுக்கும் பிறகு
மன்னிப்பு கேட்கிறான்.

கையை உயர்த்துவது
(அது தவிர்க்க முடியாதது)
எத்தனை நாகரீகமானது
அப்படி அவன் பின் சொல்லுகிறான்
கைதான் இராணுவம்
வாய்தான் பத்திரிகை
உனது கை,
உனது வாய்,
உனது தலை

## ஹிட்லரின் டயரிகள்

தூரத்தே பாராதே. இங்கே பார்
ஒவ்வொரு நாளும்
'ஸ்டாரை' வாசி
'குனோப்பை' வாசி
'சண்ணையும்' தான்

வாழும் நினைவுக் குறிப்புகள்
தினசரிகள்

சண், குனோப், ஸ்டாரை
வாசிப்போர்
உலகத்தை காணவே
மாட்டினர்

—ஜெரிஸ்லாந்தா பாக்லெநத்த—
தமிழில் [illegible]

## வாழ்க்கை

—அமுதன்—




மாறுதல்கள்
அதிகம் ஏதுமின்றி
வழமைபோல
நகர்ந்து கொண்டிருக்கின்றது.
சோகங்களுடனும்
துயரங்களுடனும்.
சலிப்பும்
வெறுப்பும்
சண்டையிட்டுக் கொண்டிருந்தன.
மகிழ்ச்சி
மறைந்து நின்று
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.
விரக்தி
எட்டி எட்டிப் பார்த்துச்
சென்று கொண்டிருந்தது.
உணர்வுகள்
மட்டும்
இன்னமும் இங்கு
பசுமையை தேடிக்கொண்டிருந்தன.

நெஞ்சும்
தன் பங்குக்கு
"வாழ்கை வாழ்வதற்கே. . ."
என
இடித்துச் சொல்வதால்
மீண்டும்
உயிர்ப்பைத் தேடி
வாழ்க்கை!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முட்டாள்களால் தமிழ்மக்களின் மூளைக்கு வைக்கப்பட்ட நெருப்பு

தாயகத்தில் அரசாங்கத்தாலும், ஆயுதக்குழுக்களாலும் கருத்துச்சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டு உயிர் வாழ்தலுக்காக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த ஓர் இளம் தலைமுறை தஞ்சம் புகுந்த அந்தந்த நாடுகளில் தம் சக்திக்கேற்ப , சஞ்சிகைகள், பத்திரிகைகள், வீடியோ, கலை வெளிப்பாடுகள், போன்ற வடிவங்களாலும் தாம் சார்ந்த அமைப்புக்களாலும் இலங்கையில் நடக்கும் ஒட்டுமொத்தமான மனித உரிமை மீறல்களையும், ஜனநாயக அத்துமீறல்களையும், அராஜகங்களையும் கண்டித்தும், விமர்சித்தும் தமது எதிர்ப்பை தெரிவித்தும் வருகின்றனர்.

இந்த வகையில் கனடாவில் ரொறன்டோ நகரில், தமிழர் வகைதுறைவள நிலையம் என்னும் அமைப்பு மனிதநேயமும், கருத்துச்சுதந்திரத்தை மதிக்கும் உணர்வு கொண்டவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டது. எம் மண்ணில் மறுக்கப்பட்ட சுதந்திர உணர்வுகள் இங்கேயும் மறுக்கப்பட்ட சூழலில் தமிழர் வகைதுறைவள நிலையம் அமைப்பாக செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டது.

இதன் தொடர்சியாக தமிழர் வகைதுறைவள நிலையம் தனது செயற்பாடுகளை கனடாவில் முன்னெடுத்துச் செல்கின்றது.

(1) இலங்கை அரசின் தமிழ்மக்கள் மீதான படுகொலையை கண்டித்து பாரிய ஊர்வலம் ஒன்றை நடாத்தியது.
(2) கிழக்கிலங்கை முஸ்லீம்களின் படுகொலையை கண்டனம் செய்தது.
(3) சேரன், ஜெயபாலன் போன்ற விடுதலைப் போராட்ட கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டமை.
(4) எங்கள் மண்ணும் இந்தநாட்களும், சொல்லாத சேதிகள் போன்ற சமூகப்பிரச்னை உள்ளதும், தமிழ்பேசும் மக்களின் நியாயமான விடுதலையை தூண்டுவதுமான தரமான கலைவெளிப்பாடுகளை வெளிக்கொணர்ந்தது.
(5) முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டமையை கண்டித்து நகரின் பல்வேறு அமைப்புகளையும் இணைத்து கண்டனக்கூட்டம் நடத்தியது.
(6) மக்களின் ஜனநாயகத்திற்காக குரல்கொடுத்தமைக்காக இலங்கை அரசாலும், ஆயுதக்குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்ட ரஜனி திராணகம, றிச்சாட் டி சொய்சா போன்றோரை நினைவுகூர்ந்து இவர்களின் கொலையை கண்டித்து கண்டன கூட்டம் நடத்தியமை.
(7) ரொறன்ரோவில் தொடர்ச்சியான நிறவெறிக்கு எதிராக போராட்டங்களில் பங்கெடுத்ததும், நாஜிகளால் தாக்கப்பட்ட தமிழர்களுக்காக பல்வேறு கனடிய அமைப்புகளுடன் இணைந்து கண்டன ஊர்வலம் நடாத்தியமை.
(8) தமிழீழ விடுதலைப் போராட்ட முன்னோடியும், மனித உரிமையாளரும், கலைஇலக்கிய வாதியும், புத்தக வெளியீட்டாளருமான சபாலிங்கத்தின் படுகொலையைக் கண்டித்து கண்டன கூட்டம் நடத்தியமை.

நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு எந்தவித அரச நிதியோ, நிதிவழங்கும் ஸ்தாபனங்களின் உதவியோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றி வெறும் அங்கத்தவர்களினதும், ஆதரவாளர்களினதும் நன்கொடையை மட்டும் வைத்தே தமிழர் வகைதுறைவள நிலையம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கிறது. அத்தோடு கலைவிழாக்களை நடாத்தியும், தேடல் சஞ்சிகையை வெளியிட்டும், மற்றும் நூலக வாசகர்களிடம் இருந்து பெறப்படும் உதவிகளின் மூலமுமே தனது சேவையினை தொடருகின்றது.

வட அமெரிக்காவிலே மிகப்பெரிய நூலகம் என்னும் பெயரை பெற்ற 'தேடகம்' நூல்நிலையத்தை தமிழர் வகைதுறைவள நிலையமே நிர்வாகித்து வருகின்றது. இங்கு உலகின் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் வெளியீடுகளும், இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து வெளிவரும் வெளியீடுகளும் தவறாது வாசகர்களுக்கு தவறாது தருவிக்கப் படுகின்றன.

மாற்றுக்கருத்துக் கொண்ட சகல குழுக்களினதும் வெளியீடுகளும், துண்டுப்பிரசுரங்களும் எந்தவித பாரபட்சமுமின்றி நூல்நிலையத்தில் வாசகர்களுக்காக வைக்கப்படுகின்றது. மேலும் தமிழ் மாணவர்களின் கல்வி ஆய்வுகளுக்காக உகந்த நூல்களைக் கொண்ட நூலகமாக ரொறன்ரோ கல்விச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நூலகம் தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட முக்கிய வரலாற்று ஆவணங்களையும், பல கலைப்பட வீடியோ பிரதிகளையும் கொண்டுள்ளது. பாரிய படிப்போர் கூடத்தை கொண்டுள்ள இந்நூலகத்தினால் ஏராளமானவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்த வகையில் கனடாவாழ் தமிழ்மக்கள் மத்தியில் காத்திரமான பங்களிப்பை செய்யும் தமிழர் வகைதுறைவள நிலையத்தின் நோக்கங்கள்,காலத்துக்கு காலம், அராஜக வாதிகளாலும், தங்களின் அதிகாரத்துவத்தை நிலைநாட்ட முற்படுபவர்களாலும் உண்மை நிலைகள் திரிக்கப்பட்டு மக்களை குழப்பிவிடும் முயற்சிகள் நடைபெற்றன.

வரலாற்றை மறைக்க முற்படும் வரலாற்று குருடர்களுக்கு வரலாற்று ஆவணங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் தேடகம் எப்போதும் சவாலாகவே இருந்து வந்துள்ளது.
ஈழப்போராட்டத்தின் கடந்தகால வரலாற்றையும் அது கடந்து வந்த கறைபடிந்த அத்தியாயங்களையும் எழுத்துவடிவ ஆவணமாக்க முற்பட்ட திரு சபாலிங்கம் அவர்களை அழித்ததன் மூலம் வரலாற்று உண்மைகளை துப்பாக்கி முனையில் மறைத்தவர்களால் அதன் தொடர்ச்சியாக பல போராட்ட வரலாறுகளையும், தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தின் புதிய தோற்றுவாய்களையும் உள்ளடக்கி இருக்கும் தேடகம் நூல்நிலையம் 24. 05. 1994 நள்ளிரவு ஒரு மணியளவில் தீவைக்கப்பட்டது.

1. இந்த வரலாற்று அழிப்புகளால் யாருக்கு லாபம்?
2. தொடர் வன்முறைகள் தமிழ்மக்களின் ஆரோக்கியமான விடுதலைக்கு இட்டுச்செல்லுமா?
3. இந்த அநாகரிகமான செயல்களை தொடர்ந்தும் நாம் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறோமா?


எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் எரிந்த நூல்களையும் மண்டையோடுகளையுமா விட்டுச் செல்லப் போகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## கண்ணனும் அண்ணனும்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி கண்ணன் நேசம் 'இசைக் குழுவினரை பலரும் அறிந்திருப்பர்.வழமையாக நவராத்திரி காலங்களிலும் சிலவேளை சிவராத்திரியிலும் களைகட்டும் கோயில் திருவிழாக்களிலும் இவர்களது இசைக்குழுவை பலரும் சந்தித்திருப்பர் எப்போதும் கலைஞர்களை கூத்தாடும் கும்பல்களாக பார்த்த சமூகத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால் இவர்கள் திறமைகள் வெளிவரும் சந்தர்ப்பங்களும் மிகக்குறைவாகவே இருந்தன.எனினும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக சில பாடல்களை இவர்கள் இசையமைத்தார்கள். கண்ணனின் இசையமைப்பில் இருந்த தனித்துவம் அனைவராலும் பாராட்டப்பட்டது. குறிப்பாக திரு. சத்தியமூர்த்தி அவர்கள் பாடிய பாடல்களான ஓ...வண்டிக்காரா..(நீலாவணன் பாடல்) நிலவொன்று மண்ணில் அசைகின்றது (அக்கரைபாக்கியன் பாடல்) போன்றவற்றிற்கும் திரு கண்ணனே இசையமைத்திருந்தார். ஈழவிடுதலை போராட்ட காலமே கண்ணனின் திறமையை பலரும் அறியும் அளவிற்கு ஏதுவாய் அமைந்ததெனலாம். யாழ் பல்கலைக்கழக மாணவர்களது "எங்கள் மண்ணும் இந்த நாட்களும்" "மண் சுமந்த மேனியர்" போன்ற நிகழ்வுகளுக்கு இசையமைத்ததன் மூலம் அக்காலங்களில் பலரதும் வாய்களில் இப் பாடல்கள் முணுமுணுக்கும் அளவிற்கும் பஸ் நிலைய உணவகங்களில் இப்பாடல்கள் ஒலிக்கும்மளவிற்கும் பிரபல்யமானது. குறிப்பாக "மூன்று நூற்றாண்டுகள் சென்றன" "அதிகாலையில் யாழ்நகர் மீது" மேகம் இருண்டு" "காற்றோடு பேசு " போன்ற பாடல்கள் இன்றும் மனதருகே அதிர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எந்தவொரு தமிழக சினிமாப் பாதிப்பும் இல்லாமல் தனக்கே உரித்தான பாணியில் தொடர்ச்சியாக இசையமைத்து வருகின்றார். மக்கள் விடுதலைக் கழகத்தின் மாணவர் அமைப்பு 1985 பகுதியில் வெளியிட்ட "விடுதலைக் குரல்கள்" இசை நாடாவிற்கும் திரு. கண்ணனே இசையமைத்திருந்தார். "வெண்மேகம் முத்தமிட" "என மனத்துன்பம் தாயின் பாடலில்" அக்கரையில் நீ இருக்க" மூங்கில்கள் எரியும் கரையில்" போன்ற பாடல்கள் இவரது இசைப் புலமைக்கு இன்னும் சில எடுத்துக்காட்டு. இன்று புலிகளின் ஒலி நாடாக்கள் இசையில் மிளிர்கிறது அதற்கு காரணமும் கண்ணன் தான். "சின்னச் சின்னச் றோஜாக்கள்" போன்றவை தொடக்கம் "கடலம்மா" வரை இவரது இசையின் முத்திரை பிரதிபலிக்கிறது. என்னவோ பாடல்கள் அண்ணன் வழிபாடாய் இருப்பினும் இசை கண்ணன் முத்திரையாய் உள்ளது. இனி திரும்பத்திரும்ப தமிழக சினிமாப் பாடல்களை மீட்டிக் கொண்டிருக்கும் கனடா இசை வல்லுனர்கள் சுயமாய் புதிதாய் பாடல்கள் செய்யவேண்டும். அதுவே எம்மத்தியில் உள்ள திறமைகள் வெளிவர வழிகோலும். கனடாவில் இமேஜ் இசைக்குழுவினரால் முதலில் இசைத் தட்டு வெளியிடப்பட்டது. அதன் பின்னர் இன்னுமோர் இசைக் குழுவினரால "சங்கவி" இசைத் தட்டு வெளியிடப்பட்டுள்ளது. இம்முயற்சிகளை எம்மவர்கள் கட்டாயமாக ஆதரவளிக்க வேண்டும். ஆயினும் இசை வல்லுனர்கள் இன்னுமொன்றை கருத்திற்கொள்ளல் அவசியம். இசையென்பது வெறும் களியாட்டம் மட்டுமல்ல சமூகத்தின் பிரச்சனைகளை சமூகத்தின் தேவைகளை சொல்லும் ஊடகமும் கூடவே என்பதை.இந்த விடயத்தில் தமிழ் சிங்கள கலைஞர்களை கொண்ட **exiSLe** குழுவினர் சமூக பிரச்சனைகளில் தம்மை ஈடுபடுத்திவருவது பாராட்டத்தக்கது. அண்மையில் தென்னாசிய நாடுகளின் கலாச்சார விழாவான 'தேஸ் பிரதேஸ்' இல் இவர்களது நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

## நிதியும் நகர்வும்

போரின் விகாரத்தை விபரிக்க முடியாது. எமது அனுபவங்கள் பல இன்னும் மனதை உறுத்திக் கொண்டே இருக்கின்றன.இழப்புக்கள் ஒரு புறமும் பரிதவிப்புக்கள் மறு புறமும். ஆண் சார் சமூக அமைப்பில் ஆணின் இழப்பு முழுமையான பொருளாதார முடக்கத்தை ஒரு குடும்பத்திற்கு தந்து விடுகிறது.பெற்றோரின் இழப்பு இன்னும் கொடுமையானது. ஊனமுற்றவர்கள் அனாதைகளாக்கப்பட்ட சிறார்கள் விதைவைகளாக்கப்பட்ட பெண்கள் போன்றோர் போர் விட்டுச்செல்லும் இன்னோர் வகையான கொடுமைகள். மனோநிலைப் பாதிப்புகளுடன் அடிப்படை வசதிகளும் அழிக்கப்பட்ட நிலையில் இவர்களது வாழ்வின் புனர்வாழ்வு என்பது இன்று எம்முன்னுள்ள பாரிய பொறுப்பு ஆகும்.இது குறித்து சமூக நிறுவனங்கள் ஆச்சிரமங்கள் மடங்கள் என்பன ஏற்கனவே புனர்வாழ்வு பணிகளை செய்து கொண்டுதான் இருக்கின்றன. இவைகளை விட புலிகளின் செஞ்சோலை சிறுவர் இல்லம் என்பவற்றை எம்மில் பலரும் அறிவோம்.நிறுவனங்கள் ஆச்சிரமங்கள் மடங்கள் என்பவற்றிற்கு பல வகையான வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்றன. எம்மர் மீது அனுதாபங் கொண்ட பலர் தனிப்பட்ட வகையில் தமது உதவிகளை செய்த வண்ணமும் உள்ளனர். இவர்களில் பலரும் மனித நேயம் கருதி எந்தவொரு அரசியல் பின்னனியும் அற்று நம் மக்களுக்காக உதவிகளை செய்து வருகின்றனர். அண்மைக்காலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயங்கி வந்த அனாதை இல்லங்கள் மற்றும் புனர்வாழ்வு நிறுவனங்கள் புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.இதன் காரணமாக இத்தாபனங்களின் சுயாதீன செயற்பாடுகள் சீரழிக்கப்பட்டுள்ளன. இங்கு பணியாற்றி வந்த தொண்டர்களும் நிதியுதவியளித்து வந்த நபர்களும் அதிருப்தி அடைந்து உள்ளனர். இங்கு சேவை பெற்று வந்தவர்கள் கூட இன்று பல சங்கடங்களை எதிர் நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர். புலிகளின் இவ்வாறான செயற்பாடால் பாதிப்புற்றிருப்பது அனாதை சிறார்களும் விதைவைப் பெண்களுமே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தாபனங்களை தம்வயப்படுத்தி அரசியல் லாபம் தேட முயற்சிக்கும் இவ் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியன. இங்கிருந்தும் நிகழ்ச்சிகளுக்கூடாக நிதிகள் வேறு சேர்க்கப்பட்டு அங்குள்ள அனாதை இல்லங்களுக்கு அனுப்பப்படுவதாக அறிகிறோம். புலிகளின் தலையீடு அகற்றப்படாத வரைக்கும் இன் நிகழ்ச்சிகள் கூட இன்னுமோர் வகையான புலிகளுக்கான நிதிசேகரிப்பே. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இவ் அனாதை இல்லங்கள் இன்னுமோர் செஞ்சோலையாகவே செயற்படும். இனி அங்குள்ள குழைந்தைகள் "அண்ணாவின் நிழலைத் தேடி அடைக்கலம் வந்தோம்" என்று பாட வேண்டியதுதான். ஐ.நா சபையின் அகதிகளுக்கான நிறுவனத்தின் அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் புலிகளின் தலையீட்டால் இடை நிறுத்தப்பட்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். அகதி முகாம்களின் பங்கீட்டில் புலிகளின் பட்டியல்களும் அரச தாக்குதலில் இறந்தோருக்காக வழங்கும் சலுகைப் பட்டியலில் மாவீரர்களின் பட்டியலும் உள்ளடங்கியுள்ளதை பார்க்கும் போது நிதி வரும் நிலைகள் நோக்கிய இன்னுமோர் நகர்வே அனாதை இல்லங்களின் சுவீகாரம் என்றே தோன்றுகிறது.

## மதமும் நாமும்

இந்து மத வருகையின் முன்னர் தமிழர்கள் எவ்வகையான வழிபாட்டு சடங்கு பழக்கத்தை கொண்டிருந்தார்கள் என்பதை ஆராய்ந்து கொள்ளல் எமக்கு அவசியமானது. ஏனெனில் இன்று எம் மத்தியில் பல வெறுப்பையூட்டும பழக்க வழக்கத்திற்கு இந்து மத வழிபாட்டு முறைகளும் காரணமாக அமைந்துள்ளது. மிகவும் சாதாரணமாகவிருந்த தமிழர்களின் பழக்க வழக்கங்கள் இந்து மத வருகையின் பின்னர் பாரிய மாற்றங்களுக்கு உற்படுத்தப்பட்டது. பிராமணர்கள் பெற்ற சலுகைகள் வழிபாட்டு மொழியாக சமஸ்கிருதம் அமுல்படுத்தப்பட்டதுடன் மத வழிபாட்டு விடயங்களிலும் ஆளுமை செலுத்தப்பட்டது. அது மட்டுமல்லாது சமூக விடயங்களிலும் இந்து மதத்தின் ஆதிக்கம் அதிகமானது. குறிப்பாக பிறப்பு இறப்பு, திருமணம், மங்கைப்பருவம் எய்தல் புதுமனை புகுதல், நினைவு கூறல் போன்ற சடங்குகளில் எல்லாம் முறைமைகளை மாற்றியமைத்தனர். இதன் காரணமாக இன்று சடங்குகளில் என்ன இடம் பெறுகின்றதை அறிந்து கொள்ள முடியாத அபாக்கியம் தமிழர்களுக்கு ஏற்றபட்டுள்ளது. தமிழர்கள் மத்தியில் இருந்த பல சாத்திர நூல்கள் சமஸ்கிருதத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் தமிழ் ஏடுகள் எரிக்கப்பட்டதாக சந்தேகங்கள் உண்டு. ஏனெனில் சிந்து வெளி நாகரீகத்திற்கும் திராவிட நாகரீகத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை பல ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எம்மத்தியில் இருந்த பல விடயங்கள் இன்று காணாமல் போயுள்ளதை பார்க்கும் போது இடையில் இவை அழிக்கப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக படையெடுப்புகளின் போதும் ஆளுமை ஆதிக்கம் செலுத்த முற்படும் போதும் சமூகத்தின் நல்ல பல விடயங்கள் திருடப்படுவதும் அழிக்கப்படுவதும் வரலாறு. முன்பான ஆரிய படையெடுப்பும் பின்னரான இந்து மத வருகையும் திராவிடர்களின் பல அரிய விடயங்கள் திருடப்பட்டும் அழிக்கப்பட்டும் இருப்பதான சாத்தியங்கள் உண்டு. இன்று தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள தெய்வங்களை பார்க்கும் போதும் சடங்கு முறைகளை பார்க்கும் போதும் ஓரளவேனும் எமது பழமைகள் நோக்கிய வேர்ளை அறிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. இனி கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கு அமைய எம்மவர்கள் கோயில்களை போட்டி போட்டு கட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். பக்தி என்பதை விட சிறந்த வியாபாரம் என்று சொல்லாம். கொட்டிலில் ஆரம்பித்து கோயில் கட்டும் அளவிற்கு வருவாய் அதிகம். இவையெல்லாம் கனடாவில் தமிழ் நிலைக்கும் என்பதற்கு ஆதாரமானவை அல்ல. இன்று தமிழ் கல்வி பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழர்கள் என்று எம்மை அடையாளப்படுத்திக்கொள்வது தமிழ் மொழியால் மட்டுமே. மதத்தால் அல்ல. ஆயினும் எம்மவர்கள் தமிழை விட மதத்திற்கு அளிக்கும் முக்கியம் விசனத்தக்கது. இன்று ஐந்துக்கு மேற்பட்ட கோயில்கள் இங்கு கட்டப்பட்டுள்ளது. எமது வருங்கால சமூகத்திற்கு தேவையான தமிழ் சார் நூலகமோ தமிழ் சார் துறைகளோ வளர்க்கப் படவுமில்லை கட்டப்படவுமில்லை. எமது அடையா— ளத்தை நோக்கி செல்லும் குழைந்தைக்கு கோயில்கள் என்றும் உதவப்போவதில்லை. இதற்கு மொறிசியஸ், றி யூனியன், பிஜி மேற்கு இந்திய தீவுகளில் கூலிக்காக கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் நிலை நல்லதோர் எடுத்துக்காட்டு. இங்குள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் துறையொன்றை ஆரம்பிக்கும் முயற்சிகளும் தமிழ் நூலகம் ஒன்றை வளர்த்தெடுக்கும் தேவையும் புலம்பெயர்ந்த எமக்கு உண்டு. இதுவே வருங்கால தமிழ் சமூகத்திற்கு நாம் விட்டுச்செல்லும் பாரிய சொத்தாகவும் வழியாகவும் இருக்கும்.

**பிற் சேர்க்கை மே 24 அதிகாலை தேடகம் நூலகம் எரிக்கப்பட்டுள்ளது** 'நெருப்பு வைப்போம் நெருப்பு வைப்போம்
இனம் அழிய நெருப்பு வைப்போம்'

## கொலையும் கொலைஞனும்

கொலை என்றவுடன் மனதில் பீதியும் பயமும் உண்டாகிறது. சுமூகமான சமூகத்தில் மனிதனின் சராசரி மனவுணர்வு அப்பேற்பட்டதே. மனித வாழ்வின் அவாவை இந்த மனம் எப்போதும் கொண்டிருக்கும். பிறத்தலின் பின்னான மனிதனின் வாழ்வு அதன் தொடர்ச்சியும் பின்னான இயற்கை மரணமும் வரை மனிதனுக்கு வாழ்வின் மீதான நம்பிக்கை இருந்தவண்ணமே இருக்கும். இதுவே மனித வாழ்வின் அடிப்படையும் கூட. இந் நம்பிக்கைக்கு பங்கம் விளையும் போது பயமும் பீதியும் உண்டாகிறது. கொலைக்கான முதன்மைக் காரணம் முரண்பாடாகவே இருக்கும். ஆயினும் முரண்பாடுகளின் தோன்றுகை வித்தியாசமாக இருக்கும். முரண்பாடு என்பது மனிதனால் எவ்வாறு உணரப்படுகிறது? கொலை செய்யுமளவிற்கு மனித மனத்தை இது எவ்வாறு வன்மையடையச் செய்கிறது? இவ்விடயத்தில் தனிமனித செயற்பாடும் சமூகத்தின் தாக்கம் அல்லது சூழல் பாதிப்பும் மனிதனின் மனதை கொலைக்காக தயார்பண்ணிவிடுகிறது. இங்கு தனிப்பட்ட குரோத கொலைகளை ஒரு புறம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துவிட்டு அரசியல் படுகொலைகளை சற்று பார்ப்போம். எமது போராட்ட காலத்தில் எதிரிக்கெதிரான யுத்தத்தில் பலரை கொலை செய்யவேண்டி ஏற்படுகிறது. சமூகத்தின் மீதான அடக்குமுறை எதிரிக்கெதிரான யுத்தத்தை செய்வதற்கும் எதிரியை கொல்லவும் ஆன மனவன்மையை கொடுக்கிறது. இங்கு இக் கொலைகளை புரிபவர்களை சமூகம் கொலையாளிகளாக பார்ப்பதில்லை மாறாக போராளிகளாகவும் புரட்சி வீரர்களாகவும் மதிக்கின்றது.

நம் இயக்கங்கள் ஆயிரக்கணக்கான உட்படுகொலைகளையும் பிற படுகொலைகளையும் செய்து முடித்துள்ளன இன்னும் தொடர்ந்து கொண்டுதான இருக்கின்றது. இதற்கான பல வகையான காரணங்களை கேட்டுக்கொண்டும்தான இருக்கின்றோம். துரோகம் காட்டிக்கொடுப்பு போராட்டத்தை குழப்புபவர் இன்னும் பல பல காரணங்களை கேட்டு காது புளித்துக் கொண்டதுதான் மிச்சம். இவற்றில் பல கொலைகள் இன்னும் உரிமை கோரமுடியாமலே உள்ளன. இவற்றில் இருந்து ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ளமுடியும் அவ்வகையான கொலைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சமூகநியாயம் கொலையாளிகளிடம் இல்லை என்பதை. உண்மையில் இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் இயக்கங்களின் சீரழிவுக் போக்கை நிராகரித்தவர்களும் இவற்றை மறுத்து மாற்று அமைப்பு வடிவங்களை உருவாக்க முனைந்தவர்களும்தான். இதைவிடுத்து பொதுமக்கள் பலரும் அரசியல் காரணங்களுக்காக கொல்லப்பட்டார்கள் இவற்றில் பலவும் இன்னும் உரிமைகோரப்படவில்லை. மொத்தத்தில் இவ்வகையான கொலைகள் மக்கள் மத்தியில் பாரிய பீதியையே ஏற்படுத்திற்று இவ்வகையான கொலைகளுக்கூடாக மக்கள் மௌனமாக்கப்பட்டனர். சிலர் நியாயம்கேட்க முற்பட்டு ஆயுதங்களால் கலைக்கப்பட்ட சம்பவங்களும் நிறையவே உண்டு. மின கம்பத்தில் தொங்கிய உடல்களும் அங்கே தொங்கவிடப்பட்ட மட்டைகளில் உள்ள காரணங்களை வாசித்துவிட்டு மௌனமாக செல்லவேண்டிய நிலையிலேயே நாமிருந்தோம். இவ்வித அரசியற்கொலைகளை புரிவோருக்கு இருந்த ஒரேயொரு பின்னணி இயக்கவிசுவாசம் மட்டுமே. இந்த இயக்க விசுவாசமானது முரட்டுத்தனமான மனோ வன்மையை மனிதனுக்கு அளிப்பதோடு வேறு எந்த வகையானவகையான கருத்துக்களையும் நிராகரிக்கவும் செய்கின்றது. பொதுவாக மனிதனுக்கான சிந்திக்கும் வழிகளைகளை தடுப்பதோடு வெறுமனமே இயக்கத்துக்கான விசுவாசத்தை மட்டும் போதிக்கப்பட்டு இயக்கத்துக்காக உயிரை போக்கவும் எந்நிலையிலும் தயாராய் இருக்கவேண்டுமெனவும் போதிக்கப் படுகின்றது. இவ்வாறாக வளர்க்கப்படும் ஒரு மனிதன் கட்டளைக்காக கொலையை செய்வதற்கான சூழலில் அமிழ்த்தப்படுகிறான். எம் இனத்தின் மீது தொடரும் அரச வன்முறைகள் காரணமாக எழும் மனோநிலைப்பாதிப்புகளால் இலகுவாகவே ஒரு மனிதனை இயக்கவிசுவாசம் என்ற வலையில் விழுத்தி எதிரிக்கெதிரான ஆயுதத்தை எம்மக்கள் மீதும் பிரயோகிக்கும் வகையில் மாற்றியமைக்க முடிகிறது. ஆயினும் இந்த இயக்க விசுவாசமென்பது தொடர்ந்து நிலைக்க கூடிய தன்மையை கொண்டதல்ல அனுபவங்களுடாகவும் சில வேளை இயக்கத்தின் பொய்மைகள் அறியப்படும் சந்தர்ப்பங்களிலும் இவ்விசுவாசம் உடைக்கப்பட்டு பல உண்மைகள் வெளிக்கொணரப்பட்டதை எம்மில் பலரும் அறிவர். இந்த சந்தர்ப்பத்தில் இவ் கொலைக்கான குற்றத்தை யார் மீது சுமத்துவது? தமிழ்மக்கள் மீது வன்முறையை செலுத்தி வரும் இலங்கை அரசின் மீதா? அல்லது கட்டளையிட்ட இயக்கத்தலைமை மீதா? அல்லது கொலையை புரிந்த அந்த மனிதன் மீதா? அல்லது இந்தக் கொலைகளை ஆதரிக்கும் பொதுமக்கள்மீதா? அல்லது இந்தக் கொலைகளை கண்டிக்கத்தவறி மௌனமாகவிருந்த மக்கள்மீதா? மொத்தத்தில் மேற்கூறிய அனைத்துமே கொலை புரிவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தவையே. இன்று எம்முன் நிகழும் அனைத்து அரசியல் படுகொலைகளுக்கும் அராஜக செயற்பாடுகளுக்கும் நாமும் பங்காளிகள். இன்றைய போராட்ட சீரழிவுகளுக்கும் எமது இனத்தின் இன்றைய அல்லல்களுக்கும் நாமும் பொறுப்பாளிகள். நீயும் ஒரு கொலைஞன் என நாளைய சமூகம் உன்னையும் சுட்டும்; உன் மௌனம் உடையாதவரையில் நீயும் அதை ஏற்றேயாகவேண்டும்.

கேள்வி.— மலைவாழ் மக்களின் உடை கலை நீங்கள் மேடையில் பயன்படுத்துகிறீர்கள். ஏகாதிபத்திய ஆதிக்கக் கலாச்சாரத்திற்கு எதிரானதாக நாங்கள் அதனைக் கருதுகிறோம். இன்றைய சூழலிலே இவ்வாறு புரட்சிக்குப் பின்னே மலைவாழினக் கலாச்சாரம் என்பது நமக்கான மாற்றுக் கலாச்சாரமாக இருந்து விட முடியுமென்று கருதுகிறீர்கள்?

பதில்.— முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும். நாங்கள் பயன்படுத்துவது மலைவாழ் மக்களின் ஆடையல்ல. ஆடை புனைந்துவது மலைவாழினக் கலாச்சாரமே அல்ல. ஆடை புனைந்திருப்பவர்கள் எல்லாம் அவர்கள் வசதியானவர்கள் அல்ல. ஆடையின் சமூக நோக்கம் என்ன? வெப்பம், குளிர், மழை ஆகியவற்றிலிருந்து காப்பதுதான். அழகு படுத்திக் கொள்வது சமூக நோக்கமல்ல. தமிழகத்தின் வெப்பச் சூழலுக்கு வேட்டி கட்டுவது வசதியாக இருக்கிறது. எனவே எல்லோரும் அதைக் கட்டிக் கொள்கிறார்கள். கலை நிகழ்ச்சியின் போது பயன்படுத்தும் ஆடை என்பது நிகழ்வின் மூலம் சொல்லப்படும் செய்திக்கு வலிமை கூட்டுவதாக இருக்க வேண்டும் என்பதுதான். நாங்கள் இப்போது பயன்படுத்துகிற உடையை ஆரம்பத்தில் பயன்படுத்தவில்லை. இதற்கொரு வரலாறு இருக்கிறது. தொடக்கத்தில் வேட்டி சட்டை போட்டுக் கொண்டுதான் தோன்றினோம். நக்சல் பாரி இயக்க அனுபவம் எங்களுக்கு பாடங்கள் கற்றுக் கொடுத்தது. மக்களிடம் போகும் போது நாம் எளிமையாக இருக்க வேண்டும். எனவே எளிய மக்களின் அன்றாட ஆடை முறையை பயன்படுத்தத் தொடங்கினோம். வேட்டி கட்டிக் கொண்டு ஆடுவதற்கு வசதியாக பின் அதை மடித்து கட்டிக் கொண்டோம் ஆடு மாடு மேய்ப்பவர்களை இமிடேட் [illegible] வழக்கம். தெலுங்கானா போராட்டத்தின் போது கலை நிகழ்ச்சிகளில் அவர்களது ஆடைகளைப் பயன்படுத்தியுள்ளனர். நாங்களும் அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினோம். [illegible] கம்பளியாலான [illegible] போர்த்திக் கொண்டு ஆடும் போது அது தோளில் உராய்ந்து புண் ஏற்படுத்தியதால் அதைவிட்டு விட்டு இப்போது பயன்படுத்தும் போர்வையைப் பயன்படுத்தத் தொடங்கினோம். கொஞ்ச நாள் முண்டா[?] கட்டிக் கொண்டு ஆடுவோம். பின்னர் [illegible] கட்டிக்கொண்டு ஆடுவோம். சமீபத்தில்தான் கோவணம் [illegible] அணிந்துகொண்டு ஆடத் தொடங்கியுள்ளோம். ஆரம்பத்தில் இதற்கு கொஞ்சம் எதிர்ப்பு. இவன் மேடையில் ஆபாசமாக ஆடுகிறான் [illegible]. நாங்கள் பயன்படுத்தும் ஆடை [illegible] மக்களில் ஒருவராக [illegible].

ஆந்திர நாட்டு கலைஞர் கத்தார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒலிவர் ஸ்ரோன்

"எனக்கு அது அதிர்ச்சியான செய்தி. அது எனது விடுதிக்கு கல்லூரி தலைமையாசிரியர் மூலம தெரிவிக்கப்பட்டது" விடயத்தை கூறிய தலைமையாசிரியர் "கவலைப்படாதே அத்துடன் உலகம் முடிந்துவிடவில்லை" என ஆறுதல் கூறினார். ஆம் எனக்கு ஆறுதல் கூறினார். ஆம் எனது அப்பாவும், அம்மாவும் பிரிந்த சேதியே அது. அவர்களின் வாழ்க்கை என்னை பாதித்தது. இப்போ நான் ஓர் மூன்றாவது நபர் என்ற எண்ணத்தையே தோற்றுவிக்கிறது. எனக்கு சகோதர சகோதரிகள் கிடையாது. நான், அப்பா, அம்மா என்ற முக்கோணம் சிதைந்ததாக எண்ணிய போது எனக்கு வயது பதினாறு. சடுதியாக நான் எனக்கே சொந்தம் என்ற எண்ணம் ஏற்பட்டது"

அமெரிக்காவின் பிரபல இயக்குனர்களுள் ஒருவரான ஒலிவர் ஸ்ரோன் இவ்வாறு தனது ஆரம்பகால நினைவுகளை நினைவுகூர்ந்தார். 1946ம் ஆண்டு யூத பங்குத் தரகருக்கும், பிரஞ்சு கத்தோலிக்க பெண்மணிக்கும் பிறந்த இவர் தனது ஆரம்பகால வாழ்க்கையின் பெரும்பகுதியை பாடசாலைவிடுதிகளில் கழித்தார். 1965ம் ஆண்டு வியட்னாமில் Choln எனுமிடத்தில் அமைந்துள்ள Free Pacific Institute ல் அதிபராகக் கடமையேற்றார். 1967ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் இணைந்து இராணுவ வீரராக வியட்னாமுடன் யுத்தத்தில் போர் புரிந்தார். 'யேல்' பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பை இடைநிறுத்தி விட்டு வியட்னாமுக்கு ஆசிரியராக சென்ற இவர் 1971ம் ஆண்டு 'நியூ யோர்க்' பல்கலைக் கழகத்தில் திரைப்படத்துறை பட்டதாரியானார்.

தமது வாழ்க்கை அனுபவங்களை களமாகக் கொண்டு திரைப்பட கதைகளை அமைத்து இயக்கவும் செய்தார்.

"At The age of eighteen I went to Vietnam as a form of death. I was ready to accept death. I saw much of it in Vietnam" எனக்கூறும் இவர் இயக்கிய படங்களுள் Platoon, Born of the Fouth of July, Heavn and Earthபோன்ற படங்கள் வியட்நாம், அமெரிக்கா போர் பற்றியவையே. அமெரிக்காவின் New York நகரில அமைந்துள்ள wall street, Newyork stock Exchange என அழைக்கப்படும் New york பங்குச்சந்தை அமைந்துள்ள வீதி. Toronto நகரில் பங்குச்சந்தை அமைந்துள்ள Bay street போன்று wall street ம் பிரசித்தி பெற்ற ஒன்று. இவரது wall street என்னும் படம் இந்தப பங்குச்சந்தையை பற்றிய வடிவங்களைக் கொண்டதே. இந்த பங்கு சந்தை வியாபாரம் சுகமாக பணம் சம்பாதிக்கும் எனக்கூறுகிறார் Oliver. "Every investment I am Stopping it. I do not live it. It's all easy money. I don't treat it seriously" Wall street பற்றிய பெரும பரபரப்பை ஏற்படுத்தியது இந்தப்படம்



அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த John. f. Kennedy கொலை பற்றிய பின்னணியை ஆராயும் நோக்குடன் எடுக்கப்பட்ட படமே"J. F. K". மிகவும் அவதானத்துடன திரைக்கதை அமைக்கப்பட்ட இப்படம் பல கேள்விகளை எழுப்பியது என்பது உண்மையே. இப்படத்துக்கு ஆராய்ச்சி இணைப்பாளராக கடமையாற்றியவர். John Ruseoni என்ற பெண்மணியே. இவரும் 'Yale' பல்கலைக்கழகத்து பட்டதாரியாவார். இவர்"Cineaste"1992ம ஆண்டின் முதலாவது இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றின் போது"நான் இந்த படத்துக்காக பல புத்தகங்களையும், அறிக்கைகளையும் வாசித்துள்ளேன். சுமார் 600க்கும் மேற்பட்ட புத்தகங்கள் J. F. K கொலை பற்றி வெளிவந்துள்ளன. இதனை விட கொலை நடந்த நாட்களில் வெளிவந்த பத்திரிகைகள் என்பவற்றையும வாசித்தறிந்துள்ளேன். குறிப்பாக 'அமெரிக்க உளவுப்படையும், வெகுசனத்தொடர்பும்' என்ற கட்டுரை 'றோலிங் ஸ்ரோன்' என்ற பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இதே பத்திரிகைக்கு Oliver Stone அளித்த பேட்டியில் "அறுபதுகளின் முக்கிய மூன்று தலைவர்களான J. F. K ,Robert Kenedy, மாட்டின் லூதர் கிங் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இம்மூவரின கொலைகளும் சந்தேகத்துக்கிடமானவையே. இம்மூவரும் போருக்கு எதிரானவர்கள். "நான் நம்புகிறேன் எங்களிடம் உண்மை உண்டு. எனவே எம்மால் இயன்றவரை இவ்வுண்மைகளை வெளியிடுவதன் மூலம் இவ்வாறான விடயங்களில் ஒரு விவாதத்தை ஏற்படுத்த முடியும்" எனக்கூறுகிறார் ஒலிவர்.

வியட்னாம் போரின் பின்னர் இவரால எழுதப்பட்ட 1400 பக்கங்கள் கொண்ட நாவல் New York நகர பதிப்பகங்களால நிராகரிக்கப்பட்டது. இதனை 'தற்கொலைக் குறிப்பு' என்றும் விமர்சிக்கப்பட்டது. 'நான் மரணத்துக்கு தயார்' எனக்கூறும் ஒலிவர் தனது படங்கள் பலவற்றில் தற்கொலையை புகுத்தியுள்ளார். இறுதியாக வெளிவந்த "Heaven and Earth" (சொர்க்கமும பூமியும்) சொர்க்கம்—அமெரிக்கா, பூமி—வியட்னாம் என்ற படத்திலும் வியட்னாம் போரிலிருந்து திரும்பும் நாயகன் தான் செய்த கொலைகளை எண்ணி தற்கொலை செய்வதாக வருகிறது. இப்படம் ஓர் நாவலை தழுவியது. எனினும் தற்கொலை அழுத்தமாகக் காட்டப்பட்டுள்ளது.

"நான் மரணத்துக்கு தயார். பல தடவை கண்ணாடி முன் நின்று என்னையே நான பார்த்துள்ளேன். கையில் சவரக்கத்தியுடன தற்கொலை செய்து கொள்ள இறுதிக்கணம் வரை சென்றுள்ளேன். ஆனால் உணர்வு ரீதியாக என்னை நான் கட்டுப்படுத்திக கொண்டேன். Norman Mailer இன An American Dream என்ற புத்தகத்தை வாசித்துள்ளேன். எவ்வளவு தரமான புத்தகம் அது. புத்தகம் முழுவதும் மரணம பற்றியும், தற்கொலை பற்றியுமான விவாதங்களே. எனினும் நான் தற்கொலை செய்யாததற்கு காரணம், எனது பெற்றோருக்கு நான் மிகவும் கடினமானவன் என்பதனை நிரூபிக்கவே" என்கிறார் Oliver. Platoon படத்தில் Charlie Sheen ன பாத்திரம் பற்றி குறிப்பிடுகிறார், நான வியட்னாமுக்கு வந்ததே தவறு என,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னால் போரில் தீவிரமாக பின்பற்றுகின்றார். இது முரண்பாடுகளைத தோற்றுவிக்கவில்லையா? என விமர்சகர்கள் கேட்டபோது. "Charlie Sheen இன் பாத்திரமும் எனது பாத்திரத்தின் பங்கும் ஓரளவுக்கு ஒற்றுமையானவையே. நான் முதலில் அவ்வாறான ஒரு கருத்தில் இருந்தேன். காரணம் எனக்கும் சார்ஜண்டுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையே. அவர் எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார். "Because death night be better than a court-martial"

வியட்னாம் போரின் பின்னர் கடத்தல் குற்றம் சுமத்தப்பட்டு San Diego நகரில் இவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது. பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

இவரது ஆரம்ப காலப்படங்களில் குறிப்பிடத்தக்க படம் Salvador இதனை Oliver இன் சமூக. அரசியல் ஆய்வின் குறிப்பிடத்தக்க படமாக கூறலாம். Salvador நிக்கரகுவா Nuns ன் கற்பழிப்பு. கொலை பற்றியும். Romero கொலை பற்றியும் கேள்வி எழுப்புகின்றது.

Born of the fouth July என்னும் படத்தில் "Redie fined heroism" பற்றி அழுத்தமாக கூறப்பட்டுள்ளது. இது திட்டமிடப்பட்டு செய்யப்படுவதாக ஒலிவர் குற்றஞ்சாட்டுகிறார்.

சோசலிசத்துக்கு எதிரான அமெரிக்க ஊடுருவல்கள் பிழையானது. எனவே அமெரிக்கா பிழையான நிலையில் நின்றே போரிடுகின்றது. கருத்தளவில் சோசலிசப புரட்சி சாத்தியப்படும் என்ற கருத்தை இவரது Salvador, Platoon, Born of the foruth of Julyஆகிய படங்களில் கூறியுள்ளார்.

குறிப்பாக இவரது படங்கள் மனித உரிமை மீறல்கள், விரக்தியான போர்வீரர்கள். போன்ற விடயங்களை விவாதிக்கின்றது.

நான் ஓர் அமெரிக்கன். நான் அமெரிக்காவை நேசிக்கிறேன் எனும் Oliver Stone தனது சமூகப் பிரக்ஞை களை துணிவுடன் தெளிவாகக் கூறுகின்றார். அமெரிக்காவில தடைசெய்யப்பட்ட சோசலிசத்துக்கு ஈடாகவும், தற்போதைய அமெரிக்காவுக்கு மாறானதுமான ஓர் கருத்தையே" ஒலிவர் தேடுகின்றார். இது ஓர்வகையில் முற்போக்கு முதலாளித்துவ வடிவமே. விமர்சனத்துக்குரியதும் கூட.

புத்தர் கூறும் 'நஞ்சை எடுத்து மருந்தாக்கு என்பதனை உதாரணம் காட்டும் ஒலிவர் அமெரிக்க முதலாளித்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வது ஓர் மாயையே. இவர் Oscar ன் சிறந்த இயக்குனர் விருதை Platoon, Born of fourth July ஆகிய படங்களுக்காக பெற்றுள்ளார்.

34ம் பக்க தொடர்ச்சி......

கொன்றுவிடுகிறார். அவரது நீண்டகாலத்திய கோபம் தொழிலாளர்களின் ஒட்டுமொத்த ஆத்திர உணர்வு என்பவற்றின் குறியீடுகள் அவர் கழுத்தை நெரித்துக் கொலை செய்யும்போது முகத்தில் ஏற்படும மாற்றங்களினூடு தெரிகிறது. Emile Zolaன நாவலை மையமாகக் கொண்டு Clavde Berri Arletke Langman ஆகியோர் திரைக்கதை அமைக்க சிறந்த நடிகர்களை சிறப்பாக நடிக்கச் செய்து அழுத்தமான சிறப்புடன் இயக்கியுள்ளார் பிரஞ்சு இயக்குனரான Claude Berri. எனினும் மனத்தை அழுத்தும் சில விடயங்கள். தொழிலாளரை ஒழுங்குபடுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட வைக்கின்றார் Renaud நீண்டகால வேலைநிறுத்தத்தின பாதிப்பாலும்.பெல்ஜியம் தொழிலாளர்கள வேலைக்கு வந்துவிடுவார்களொ என்ற அச்சத்தில் சுரங்க அதிபரின் வாக்குறுதிகளை எற்றுக்கொண்டு மீண்டும் வேலைக்குப் போக விரும்புகின்றார்கள் தொழிலாளர்கள். எமது இந்த கஸ்ரத்துக்கு காரணம் Renaud தான என நினைத்து காறித்துப்புகின்றனர் அவரின் மேலே. இந்நிலையில் மீண்டும் வேலைக்குத் திரும்பும்Renoud சில அழிவுகளுக்கு பின்னர் வேறூர் செல்கிறார். மீண்டும தொழிலாளர்களுக்கு நம்பிக்கையூட்டி தொடர்ந்து செயல்படவேண்டியவர் எவ்வாறு அவர்கள் அனைவரையும் விட்டு விட்டு செல்கிறார். நாவல்.படம் இரண்டும தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் குரல் கொடுக்க வேண்டும் என்று கூறவந்தாலும் அதன்பாதிப்புகள், இழப்புகள் என்பனவற்றை யதார்த்தமாக கூறமுற்பட்டதால் கூறவந்த விடயத்தில அழுத்தம் கொடுக்கப்படவில்லை. ஒரு தொழிலாளர் போராட்டத்தால் தொழிலாளர் அடையப்போகும் நன்மைகள் என்பன காட்டப்படவில்லை. இவை யாவும் நாவலால் ஏற்பட்ட குறைபாடுகளே. என்னுடன் படம் பார்த்த நண்பன் வழமைக்கு மாறாக அமைதியாக படம் பார்த்தது ஆச்சரியமாகவே உள்ளது. பல தடவைகள் நாவலை வாசித்த நண்பன் இரண்டாவது தடவை படத்தை பார்க்க விரும்புகின்றான். விளம்பரங்களால் இப்படம் புறக்கணிக்கப்பட்டு Comberland சினிமாவில் ஒரு வாரம் காட்சியளித்தது. இது ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய ஓர் பிரஞ்சு மொழிப்படமாகும். —ரதன்—

- நிச்சயமின்மை -

நேற்று
அங்கும் இங்கும் பலர்
கொண்டு செல்லப்பட்டனர்;
உனக்கும் எனக்கும் கூட
இதுபோல் நிகழலாம்.

திரும்பி வருவோமா?
மறுபடியும் நாளை
சூரியனைக் காண்போமா?
ஒன்றும் நிச்சயமில்லை,
எமதிருப்பு
'அவர்களின்' விருப்பில்.

- அ.யோகராசா -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GERMINAL
# (கருவினுக்குரிய)



அமைதியான இருள் கவியும் வேளையினில தோளில் பையுடன்,வானத்தின் இருளையும், கதிரவனின் கதிர்கள் சோம்பல் முறிப்பதனையும் பார்த்த வண்ணம் இளைஞன் ஒருவன் அந்த சுரங்கத் தொழிற்சாலையின் முகப்பு என்று கூறப்படும் இடத்தை அடைகிறான். சுற்றுமுற்றும் கண்களை நோட்டம் விட்டவன், ஓரிடத்தில் கிழவன் ஒருவன் குதிரைக்கு உணவு போடுவதை காண்கிறான். சூரியன் வரவுக்கு முன்பே சுறுசுறுப்பாக இயங்கும் பலர் மத்தியில், அந்தக்கிழவனும் அவனைப்பார்க்கின்றான். அந்த சுரங்கத் தொழிற்சாலையின் நீண்ட காலம் வேலை செய்து ஓய்வூதியம் எடுத்து வாழும் அந்த கிழவனிடம் இளைஞன் "இந்த சுரங்கத்தின் முதலாளி யார்?" என்று வினாவினான். "யாருக்குத் தெரியும், யாரோ ஒருவன்" விரக்தியுடன் வரும் கிழவனின் பதிலுடன் இருமலும் வருகிறது. கிழவன் இருமி எச்சிலைத் துப்புகிறான். எச்சில் கரியாக வருகிறது. "என்ன இப்படி " இளைஞன் சற்று பதட்டத்துடன் கேட்கிறான். " எனது வாழ்க்கைக்கு போதுமான கறள் என்னுடைய உடலில் இருக்கிறதுஎனை பதில் கிழவனிடமிருந்து அலட்சியமாக வந்தது. இவ்வாறு ஆரம்பமாகிறது Emile Zola என்ற பிரஞ்சு எழுத்தாளரின் நாவலை மையமாக கொண்ட Germinal என்னும் படம். (இந் நாவல் தமிழில் 'சுரங்கம்' என்ற மொழிபெயர்ப்பு நூலாக வெளிவந்துள்ளது)

Maheu குடும்பம் என்னும் குடும்பம் இச்சுரங்கத்தையே நம்பியுள்ளது. தாத்தா [Jean Carmet],தந்தை [Gerad Ddepardicu] ஒரு மகன், மற்றும்மிரு மக்கள் ஆகியோர் சுரங்கத்தில் வேலைபார்க்கின்றனர். தந்தை ஓர் குழுவிற்கு பொறுப்பாளர், மொத்தம் 7 பிள்ளைகளைக் கொண்ட அக்குடும்பத்திற்கு சுரங்க வருமானம் போதாமலேயுள்ளது. சுரங்கத்திற்கு வேலை தேடி வரும் பொறியியலாளரான Etienne Lantior [Renaud] க்கு சுரங்கத்தில் தந்தையின் கீழ் வேலை கிடைக்கிறது. Renaud யை தங்களுடன் தங்கவைப்பதற்கும், மகளுக்கு மாப்பிளையாக்குவதற்கும் தாய் [Miour Mion] Maheude க்கு விருப்பம்.

மகளின் ஏழ்மையை கவனத்தில் கொண்டு அவள் ஆசையாக விரும்பும் சிவத்த ரிபனை வாங்கிக் கொடுத்து அவளைக் கட்டாயப்படுத்தி திருமணம் செய்து கொள்கிறான் அத் தொழிற் பேட்டையில் வேலைபார்க்கும் மற்றொரு இளைஞன்.

தொழிலாளர்களுக்கு புதிய சம்பள விபரம் அறிவிக்கப் படுகிறது. Renaud முயற்சியால் வேலைநிறுத்தம் செய்கின்றனர் தொழிலாளர்கள். வேலைநிறுத்தம் நீண்டகாலம் நீடிக்கிறது. பெல்ஜியத்திலிருந்து தொழிலாளர்களை அழைத்து வருகின்றார் தொழிற்சாலை அதிபர். எதிர்க்கும் தொழிலாளரை பொலிஸ தடுக்கிறது. தொழிலாளர் தலைவன் சுட்டுக் கொல்லப்படுகிறான். தொழிலாளர் தலைவ—னான தந்தை Gerad ன் இழப்பிற்குப் பின்னர் குடும்பம் தடுமாறுகிறது. தொழிலாளர் போராட்டம் பல அழிவுகளுக்குப் பின்னர் புதிய சம்பள விகித அறிவித்தலுக்கான உறுதியுடன் மீண்டும் தொடங்குகின்றது. குடும்பத்தை வீட்டிலிருந்து கவனித்த தாய Moheude சுரங்கத்துக்கு வேலைக்கு செல்கிறாள். Renaud மீண்டும் வேறூர் செல்கின்றார்.

பொதுவாக நாவல்கள் திரைப்படமாக மாறும பொழுது பல கேள்விகள் எழுவது சகஜம். அதில் ஒன்று நாவலாசிரியரின் கருவை இயக்குனர், திரைக்கதை அமைப்பாளர்கள் கூறுகிறார்களா என. பதில் Emila Zolaன நாவல் அப்படியே சிறப்பாக படமாக்கப்பட்டுள்ளது.

படம்குறிப்பாக தொழிலாளர்களின போராட்டங்களை மூன்று வகையாக பாகுபடுத்தியுள்ளது. Renaud கூறவருவதெல்லாம் யூனியன் ஒன்று அமைக்கப்பட்டு அதற்கு தொழிலாளர்கள் சிறிதளவு பணத்தை முன்பணமாக தொடர்ந்து செலுத்தவேண்டும். அந்த முற்பணம் வேலைநிறுத்தக் காலங்களில் தொழிலாளரின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் என்கிறார்.

இல்லை சர்வதேசரீதியாக தொழிலாளர் ஒன்றுபட வேண்டும்! சர்வதேசப்புரட்சிதான் தொழிலாளருக்கு விடிவைத் தேடித்தரும். என்று மற்றொருவர் கூறுகிறார்.

மூன்றாவது தொழிலாளரின் பாதை அழிவுப்பாதை. தொழிற்சாலை அழிக்கப்பட வேண்டும், அதனால் முதலாளி நட்டமடைய வேண்டும். என்றொருவர் கூறுகின்றார். முரண்பட்ட இம்மூன்று கருத்துக்களும அவர்களின் பாதையை தன்னிச்சையானதாக கொண்டிருந்தாலும், ஒருவருக்கு ஒருவரை எதிரியாக்கவில்லை.

19ம் நூற்றாண்டு தொழிற்சாலையை அப்படியே கண்முன் கொண்டு வந்துள்ளார்கள். சுரங்கமும அந்தப்பாதாளமும் அப்படியே அமைக்கப்பட்டுள்ளது. நேர்த்தியான ஒளிப்பதிவு, குறிப்பாக எடிட்டிங அற்புதமாகவுள்ளது. குழப்பமின்றி படம் தெளிவாக ந[illegible]கின்றது. பல காட்சிகள் [illegible]னதைத் தொ[illegible]கின்றன. குறிப்பாக வேலை முடிந்து வரும் குடும்பத்தினர் குளிப்பதற்கு தாய் ஒரு சிறு தொட்டியுள் சுடுநீர் ஊற்றுகின்றாள். ஒருவர் பின் ஒருவராக அதிலே குளிக்க வேண்டும். உடல முழுவதும் வேலையின் அழுக்கை நீக்க முதலில் யார் குளிப்பது என்று அவர்களுக்குள்ளே போட்டி.

சுரங்கத்தினுள் வேலை செய்யும தொழிலாளர்களின் வாழ்க்கையும், அவர்கள் படும் அவதிகளும்.

தொழிலாளர்களின் எழுச்சியும், வேகமும திறைசேரியை உடைத்துத் தள்ளும உத்வேகமும் இயல்பாகவே சிறப்பாக அமைந்துள்ளது. தாத்தா Jean Carmet ஆறுதல் கூறவரும் சுரங்க அதிபரின் மகளை கழுத்தை நெரித்துக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏழைகள்

சிறுகதை

உச்சி வெய்யில் தலையினால் உள் இறங்கி சேற்றுக்குள் நின்ற வள்ளியின் கால்வரை சுட்டது. இன்னும் ஒரே ஒரு துண்டுப்பாத்தி மட்டுமே மிகுதி. அவளது வயிறு சாப்பாட்டிற்காய் ஈனஸ்வரத்தில் கத்தினாலும் வேலையில் மும்முரமாய் நின்றாள் வள்ளி. இன்றைய உழைப்பில்தான் அம்மாவுக்கு மருந்து வாங்கவேண்டும். இந்த உழைப்புடன் கால் வயிறும் அரைவயிறுமாய் இருந்தால் எப்படி வருத்தம் வராமல் போகும். அதிலும் கஸ்ரப்படும் அளவிற்கு கூலி தருவதற்கு முதலாளிக்கு கஸ்ரம். பின் அதிலும் கொஞ்சத்தை தனதாக்கிக்கொண்டு மிகுதியை தரும் கங்காணி ஒரு புறம். வயலில் நின்றவர்கள் மதிய சாப்பாட்டிற்காய் வயலை விட்டு வெளியேறினார்கள். வள்ளியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். தனது வயிற்றிற்காய் கொண்டுவந்திருந்த நேற்றைய பாண்துண்டுகளை சாப்பிட்டு மிகுதி வயிற்றுக்கு தண்ணீரை நிரப்பிக்கொண்டாள். முன்பெல்லாம் கங்காணிமாரே உணவிற்கு ஏற்பாடு செய்வார்கள். ஆனால் வள்ளியின் துரதிஸ்டமோ என்னவோ அவையெல்லாம் இல்லாமல் போய்விட்டது. வள்ளிக்கும் இவ்வேலை புதிதுதான். இங்கு வந்த பின்தான் வயல்வேலைகளை பழகிக்கொண்டாள். ஆனாலும் லயத்தில் வேலை செய்யும் பொழுது இருந்த மகிழ்ச்சியும் ஆர்வமும் இங்கு சிறிதுகூட இல்லை.

கதிரவன் தான் பள்ளியறை போவதை வெளிக்காட்டினான். வள்ளியோ ஓட்டமும் நடையுமாக மருந்துக்கடை சென்றாள். வழக்கமாக அவள் வாங்கும் மருந்து என்பதால் கடைக்காரருக்கு இலகுவாகவே இருந்தது. பின் அங்கிருந்து வீடு போய்சேர . . . குடிசை ஒரே இருளாக இருந்தது. முன்பென்றால் முனியம்மா எழும்பி விளக்காவது ஏற்றி வைப்பாள். இப்பொழுது அவளால் அதுவும் இயலாமல் போய்விட்டது.

குடிசைக்குள் நுளைந்த வள்ளி முதலில் தாயாரை சென்று பார்த்தாள். முனியம்மா நித்திரையில்லை. விழிப்பாகவேஇருந்தாள்.ஏன் நேரமாகியுது என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள்.

"மருந்துக்கு போனே அதால நேரமாயிடுச்சு" இது வள்ளி. வள்ளி எப்பொழுதுமே குடிசைக்குள் நுழைந்தவுடன் முதலில் தாயாரை சென்று பார்த்துவிட்டுதான் மற்றைய வேலைகளைத் தொடங்குவாள்.

வள்ளி அவசர அவசரமாக விளக்கை ஏற்றினாள். அப்படியே சூடாக ஏதாவது குடித்தால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது. கையோடு அடுப்பையும் பற்றவைத்தாள். தண்ணீர் கொதிக்கும் இடைவெளிக்குள் கை கால்களை அலம்பிவர கிணற்றடிக்கு சென்றாள். சேலைத்தலைப்பாலேயே கை கால்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும்



அடுப்படியிலேயே குந்தினாள். தேயிலைக்குள் கொதிநீரை ஊத்தும் போதுதான் தேநீருக்கான சர்க்கரை நேற்றே தீர்ந்து போனது நினைவுக்கு வந்தது. எப்படியோ அடுப்படியில் இருந்த பழைய டப்பாக்களை தட்டிப்பார்த்து ஒரு சிறு துண்டு சர்க்கரையை கண்டு பிடித்தாள். அந்த சர்க்கரை துண்டுடனும் தேநீருடனும் தாயிடம் சென்று அவளை மெதுவாக உட்கார வைத்து தேனீரை கொடுத்தபின் வெறும் தேநீர் சாயத்தை தான் குடிக்கலானாள்.

காலையில் இருந்து தண்ணீரில் நின்றது காலும் சற்று குளிர்ந்து போனதுபோல் இருந்தது. நடக்கும் போது குதிக்கால்கள் எல்லாம் தாங்கமுடியாத வலியாக இருந்தது. சூடான தேநீர் உடம்பிற்கு தெம்பாக இருந்தது. அடுத்து இப்பொழுது இரவு சாப்பாட்டினை பற்றிய ஞாபகம் வள்ளியை ஆட்கொண்டது. இன்றைய உழைப்பில் மருந்திற்குபோக மிகுதி ஐந்து ரூபாயும் ஏதோ கொஞ்சம் சில்லறைகளும் அவள் கைகளில் இருந்தது. இவற்றை வைத்துக்கொண்டுதான் வள்ளி ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனே வள்ளி கடைக்கு புறப்பட்டாள்.

கடையை நோக்கி நடையை தொடங்க அவள் நினைவுகள் பின்நோக்கி ஓடத்தொடங்கியது. தேயிலைத் தோட்டங்களின் அரவணைப்பிலே லயங்களில் நிம்மதியாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த குடும்பம் கலவரத்தினால் தந்தையையும் சகோதரனையும் இழந்து உயிர்வாழ்வதன் முக்கியத்துவத்தினால் இடம்பெயர வேண்டி வந்தது. நினைவோட்டங்களிலிருந்து மீண்ட வள்ளிக்கு சில்லறை கடையை கடந்து சிறிது தூரம் வந்து விட்டது புரிந்தது. அவள் மீண்டும் கடையை நோக்கி நடக்கலானாள். கடையில் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. சுற்று வட்டத்தில் வசிப்பவர்கள் எல்லோரும் அன்றாடம் உழைத்து கூலி பெறுபவர்கள். எனவே எல்லோரும் இனிமேல்தான் வீடுகளிலும் குடிசைகளிலும் எதையாவது செய்வார்கள். வள்ளி தன்பங்கிற்கு சர்க்கரை, அரிசி, வெங்காயம், பாண் என்பவற்றுடன் புறப்பட்டாள். தாயாருக்கு சீனியுடன் பாணினை கொடுத்துவிட்டு வாங்கிய வெங்காயத்துடன் தானும் பாணை கடித்துவிட்டு குடிசையின் மூலையில் முடங்கிக்கொண்டாள். நேரம் போய்கொண்டிருந்ததே தவிர வள்ளிக்கு நித்திரை வரவில்லை. பழைய நினைவுகளே திரும்பி திரும்பி வந்தது. மலைநாட்டின் ஒற்றையடிப்பாதைகளில் தன் சகோதரனுடன் ஓடித்திரிந்த நாட்கள் தன்னை ஏழாம்வகுப்பு வரை என்றாலும்கூட படிக்கவைப்பதற்கு தன் தந்தையும் தாயும் அடைந்த வேதனைகள் லயங்களில் வேலைசெய்யும் கூலியாட்களின் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்றெண்ணு கங்காணிமார்களின் முன்னால் தான் படித்துக்காட்ட வேண்டும் என்று வள்ளி எண்ணினாலும் குடும்பநிலை

எழுந்து — குமணன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடங்கொடுக்கவில்லை.
இப்படியானவர்களுக்கு மத்தியில் வேலு அண்ணரைப்போல் உதவி செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வள்ளியும் தாயும் இடம்பெயர்ந்து வந்த காலத்திலிருந்தே வள்ளி பழைய நினைவுகளுடனே நித்திரையாவது வழக்கம்.
வழக்கம் போல் அதிகாலை எழுந்து தாய்க்கு தேனீர் கொடுத்து இடையில் குடிப்பதற்கு தண்ணீரும் எடுத்து வைத்து விட்டு ராத்திரி இருந்த பாணையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். தெருவில் மற்றைய கூலியாட்களுடன் அன்று புல்லு பிடுங்கவேண்டிய இடத்திற்கு நடக்கத்தொடங்கினாள். எல்லோருக்கும் அவரவர்களுக்கான இடங்கள் கொடுக்கப்பட்டது. வள்ளி தனது வேலையில் மும்முரமானாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

வேலையில் கவனமாயிருந்த வள்ளியின் அருகில் யாரோ நிற்பது போல் உணரவே குனிந்து நின்றிருந்த வள்ளி நிமிர்ந்து பார்த்தாள். "கும்புடறேனுங்க முதலாளி" என்றாள் வள்ளி.
"வள்ளி அம்மாவுக்கு இப்ப எப்படி" கேட்டுக்கொண்டே வள்ளியின் முதுகில் கைவைத்தார் நாயகம்.
வள்ளியின் முறைத்த பார்வையை தாங்கமுடியாது
"சரி சரி வேலையை பார்"என்று கூறிக்கொண்டு நாயகம் மெதுவாக நழுவினார்.
கொஞ்ச நாட்களாகவே முதலாளியின் போக்கும் பார்வையும் சரியில்லை என்பதை வள்ளி கவனித்தே வந்திருந்தாள். அதனால் பெரும்பாலும் வள்ளி அவர் கண்களில் படுவதை தவிர்த்தே வந்திருந்தாள். என்ன செய்வது தனது தாயை ஒரு நேரஉணவுடனேயாவது வைத்துக்காப்பாற்ற வேண்டும் என்றுதான் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு இந்த வேலைக்கு தொடர்ந்து வருகிறாள்.

அன்று மாலை வேலைமுடிய விரைவாகவே வீடு வந்து சேர்ந்தாள். முதலில் தாயை சென்று பார்த்தாள் முனியம்மா ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். நேற்று வாங்கி வந்த அரிசியில் கஞ்சி வைப்பம் என்று எண்ணியபடியே விளக்கை ஏற்றி அடுப்பை பற்றவைத்தாள். பின் முன்னரேயிருந்த தேங்காய்பாதியை எடுத்து துருவத்தொடங்கினாள்.
திடீரென தாயின் முனகல் சத்தம் வழக்கத்திற்கு மாறாக அதிகமாக கேட்டது. உடனே எழுந்து தாய்க்கருகில் சென்ற வள்ளி தண்ணி எடுத்து வைத்திருந்த பாத்திரத்தை பார்த்தாள். அதற்குள் ஒரு சொட்டு தண்ணீர்கூட இருக்கவில்லை. "தண்ணி" என்று முனியம்மா மிகவும் கஸ்ரப்பட்டு உச்சரித்தாள் உடனேயே தண்ணீர் கொண்டு வந்து தாயை எழுந்திருக்க வைத்து கொடுத்தாள். உடனேயே கோவென கதறியழ வேண்டும் போல் இருந்தது. வள்ளிக்கு அது தாயாரைத்தான் பாதிக்கும் என்பதை உணர்ந்து கொண்ட வள்ளியின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள்தான் புறப்பட்டன. இந்நிலை தான் குடிசையில் இருந்தபொழுது நடந்ததால் ஏதாவது செய்யமுடிந்தது. தான் வேலைக்கு சென்றிருக்கும் பொழுது என்றால் என்ன நடந்திருக்கும். கஞ்சி காய்ச்சும் வேலையை கைகள் செய்தாலும் மனம் அதில் ஓடவில்லை. தாயின் சுகயீனத்தை நினைக்க நினைக்க அழுகைதான் வந்தது. அன்று இரவு கஞ்சியுடனே இருவரும் படுத்துக்கொண்டனர்.
களைப்பினால் நித்திரையாகிப்போன வள்ளி திடீரென பலத்த இருமல் சத்தம் கேட்க விழித்தெழுந்தாள். முனியம்மாதான் மிகபலமாக இருமிக்கொண்டிருந்தாள். தாயை பாத்த வள்ளி திகைத்துவிட்டாள். கண்கள் இரண்டும் மேல் செருகிய நிலையில்கிடந்தாள் முனியம்மா. செய்வதறியாது திகைத்து நின்றாள் வள்ளி. சிறிது நேரத்தின்பின் சுய நினைவுவரப்பெற்றவளாய் தாயின் நெஞ்சினைத்தடவி விடுவதும், கால்களை தேய்த்து சூடாக்குவதுமாக தனக்கு தெரிந்த சிகிச்சைகளை செய்தாள் வள்ளி. பின் சிறிது சிறிதாக முனியம்மா வழமைக்கு வரத்தொடங்கினாள். வள்ளி அவசர அவசரமாக சூடாக ஒரு தேனீர் வைத்துக் கொடுத்தாள். அதன்பின் தாயின் அருகேயே இருந்துவிட்டாள் வள்ளி.

விடிந்ததும் முதல் வேலையாக வேலு அண்ணனிடம் சென்று நடந்ததைகூறினாள். அவர் கட்டாயம் இன்று வயலுக்கு போகவேண்டும் என்றும் தனது தம்பியை கூட்டி செல்லுமாறும் கூறினார். அவரும் என்னசெய்வார் அவர் வேலைக்கு செல்லாவிட்டால் அவர்கள் வீட்டில் அடுப்பு எரியமாட்டாது. வேலு அண்ணரின் தம்பியுடன் அவர்களுடைய மாட்டு வண்டியில் தாயாரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றாள்.
அங்க முனியம்மாவை பரிசோதித்த டாக்டர்கள் எல்லோரும் அவளுக்கு ஊட்டச்சத்தான உணவுகள் இல்லாததும் நோய்கு ஒரு காரணம் என்று கூறினார்கள். உடனடியாக சில மருந்துகள் கொடுக்க வேண்டும் என்று அவற்றை வெளியேதான் வாங்கவேண்டும் என்று சீட்டு எழுதிக்கொடுத்தார்கள்.

உடனேயே வள்ளி ஓட்டமும் நடையுமாக மருந்துக்கடையை அடைந்தாள் கடைக்காரனிடம் சீட்டை கொடுத்ததாள். சீட்டையே சிறிது நேரம்பார்த்து கொண்டிருந்த கடைக்காரர் நூற்றுஎழுபத்தைந்து ரூபா மருந்தின் விலை என்றார். ஏனெனில் அவருக்கு வள்ளியின் நிலமை முன்பே தெரியும். பாவம் வள்ளி
"ஐயா இதுதானுங்களா விலை. கொறைஞ்ச விலையில் இல்லையா? " என்று கேட்டாள். "நான் என்னம்மா செய்யமுடியும். குறைந்த விலையில் இல்லையே" என்றார் கடைக்காரர்.
அன்றாடம் கூலிவாங்கும் வள்ளி என்ன செய்வாள். திடீரென ஞாபகம் வந்தவளாய் முதலாளி நாயகத்தின் வீட்டிற்கு சென்றாள். நாயகம் வீட்டில்தான் நின்றார். வள்ளி நடந்தவற்றை கூறி சிறிது பண உதவி செய்யும்படி கேட்டாள். ஆனால் நாயகத்தின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் அவரின் நோக்கத்தை புரிய வைத்தது. என்ன செய்வது? ஏழையாய் பிறந்ததிற்காய் இப்படியெல்லாம் வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறதே! என எண்ணினாள் வள்ளி. அத்தோடு அவளுக்கு பசி மயக்கம். வேறு இறுதியாக நாயகத்தை பார்த்து "ஐயா நாங்க ஏழைங்க தானுங்க ஆனா மானத்தை வித்து பிழைக்கிற மனுசங்க இல்லை. நீங்கெல்லாம் ஏழைங்கண்ணா உங்க அடிமைங்கன்னு நினைக்கிறீங்கல்ல" ஆவேசமாய் கூறிவிட்டு அழுதழுது ஆஸ்பத்திரியை நோக்கி நடக்க தொடங்கினாள் வள்ளி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தேடலில் பிரசுரிக்கப்பட்ட 'நிஜதரிசனம்' என்ற சிறுகதை பற்றி எனது கருத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இக் கடிதத்தினை எழுதுகிறேன்.**

இக் கதையில்

1 அவன் அவளை முன்சீற்றில் வந்து இருக்கும்படி வற்புறுத்துகின்றான். இது முற்போக்கு என்று கருதித்தான் அவன் அப்படிப் பிடிவாதமாக வாதாடுகின்றான். அவனுடைய வாழ்க்கை வரலாற்றைப் பொறுத்த வரையில் எது முற்போக்கு என்று முடிவெடுக்க அவனுக்கு என்ன உரிமை இருக்கின்றது? இந்த ஒரு விசயத்திலேயே அவனுடைய ஆதிக்கம் வெளிவருகிறது. அவர்கள் இருவரும் சமமற்ற நிலமையில் இருக்கும் போது அவள் எது முற்போக்கு என்று அவளுக்கு எடுத்து சொல்வது அவனது ஆண்மையையும், ஆதிக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

2. இந்த குறிப்பிட்ட சம்பவத்தில் அவள் அவனின் மீது நம்பிக்கை வைத்து தானே பலமற்ற நிலையில் இருக்கும் போது கட்டாயம் அவன் கூட பொறுப்புணர்ச்சியுடன் நடந்திருக்க வேண்டும். பெண்ணிலைவாதத்துடன் உடன்பாடு இருந்தால் அல்லது அங்கீகரித்தால் ஏன் அவள் இந்த சம்பவத்தில் பலமற்று இருக்கின்றாள். அவள் ஒரு அகதியாக அந்நிய நாட்டில் வந்து இறங்குகின்றாள். அந்த நாட்டைப்பற்றியும் வேறு எவ்வளவோ விசயங்களைப் பற்றியும் அவளது அறிவின்மை அவனுக்கு கூட அதிகாரத்தை வழங்குகின்றன. அவள் காரில் முன்னால் ஏறின உடனேயே எனக்கு ஒரே எரிச்சலும், கோபமும் வந்தன. எங்களுடைய அற்புதமான நாகரீகமான தமிழ்ப் பண்பாட்டில் சொந்த உறவில்லாத ஆணும், பெண்ணும் தனியே ஐந்து நிமிடம் கதைத்தாலே அது பெண்ணுக்கு கஸ்டமாகப் போகும். இந்த நிலமையில் ஒருமணித்தியாலம் காரில் ஏறியிருப்பதும் அத்துடன் பக்கத்து பக்கத்தில் இருப்பதும் கட்டாயம் நேரடியாக இல்லாவிட்டாலும் கட்டாயம் இது ஒரு பெண்ணைத்தான் பாதிக்கும். இங்கே சொல்ல வேண்டியது இன்னொரு விடயம் பெண்ணாகப் பிறந்த துரதிர்ஸ்டசாலிகளான நாங்கள் உணர்வு வந்த நாளிலிருந்து (அதாவது விசயம் எங்களுக்குள் புகுத்தபட்டதிலிருந்து) சாகும் வரைக்கும் ஆண்களிடமிருந்து எங்களுக்கு ஏதாவது கொடூரம் நடக்குமென்று ஒவ்வொரு நிமிடமும் கவனமாக நடக்க வேண்டும். அந்த விழிப்பு எப்போதும் மூளையின் அடித்தளத்தில் இருக்கும். இந்த சூழ்நிலையில் இனிய தமிழ்க் கலாச்சாரம் சமுதாய நடைமுறையில் எங்களுக்கு கற்பு என்ற விலைமதிக்கமுடியாத பொக்கிசத்தை வழங்கியுள்ளது. இந்த அற்புதமான பொருளின் பாதுகாப்பு நாங்கள் இறக்கும் வரைக்கும் கைவிடமுடியாத மறக்க முடியாத சுமை.

3. சுருக்கமாக சொல்லுவதென்றால் இந்த கதையில் ஆணும் பெண்ணும் சமனற்ற நிலையில்தான் இருக்கின்றனர். நாங்கள் வாழும் ஆணாதிக்க சமூகத்தில் அவனுக்கு அவளைவிட எவ்வளவோ சலுகைகள் உள்ளன. கதையை வாசித்துக் கொண்டு போகும் போது அவனுக்கு எவ்வளவு சலுகைகள் உள்ளன என்பதும் இந்த உறவில் எவ்வளவு அதிகாரம் தனக்கு எடுத்துக் கொண்டான் என்பதும் தெளிவாக வருகின்றது. எல்லா முடிவும் அவன்தான் எடுக்கின்றான். தொடக்கத்திலிருந்து முடிவு வரைக்கும் அவர்களிடையே உள்ள உறவின் வடிவத்தை அவன்தான் தீர்மானிக்கின்றான். இது எவ்வளவு அநியாயம். தான் ஒரு முற்போக்கு வாதியென அவன் கருதுகின்றான். ஒரு உண்மையான முற்போக்குவாதியின் முதல் கடமை இருவருக்கும் இடையில் உள்ள உறவை ஆராய்ந்து அதில் எப்படி சமத்துவம் ஏற்படுத்தலாம் என்று யோசித்து நடைமுறைக்குள்ளாக்குவதாகும். உண்மையான சமத்துவம் ஒருக்காலும் வராவிட்டாலும் அதனை நோக்கி வேலை செய்யத்தான் வேண்டும். இந்த விசயத்தை அவன் யோசித்துப்பார்க்கவேயில்லை. அதைவிட கோபத்தை கிளறிய இன்னொரு விடயம் அவன் அவளுக்கு வயது கூடிய தோற்றம் இருந்தபடியால் அவளை ஏற்க மறுத்தான். அவள் என்ன,அவன் விரும்பிய மாதிரி உருவாக்கப்பட வேண்டிய பண்டமா? அத்துடன் அந்த மறுக்கக் கூடிய சக்தி அவனுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. (ஏன் கலியாண உறவில் பெண்கள் ஆண்களை விட இளமையாக இருக்க வேண்டும்) இதைத்தான் நான் நினைக்கிறேன் இந்த அரைகுறை உலகத்தில் கலியாணம் முடிக்காத, கலியாணம் முடித்து பிள்ளைகளைப் பெறாத தமிழப் பெண்களுக்கு ஒரு அந்தஸ்த்தும் இல்லை. பெண்கள் இந்த குருட்டு நம்பிக்கைகளை தகர்த்தெறிந்து வாழ முடியுமா? பிரமச்சாரி என்ற சொல்லே ஆண்களுக்காக உருவாக்கப்பட்ட அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சொல். ஏதோ கல்யாணம், குடும்பம், பிள்ளைகள் என்ற முகப்புகளின் மூலம் வளங்கப்படுகின்ற அரைகுறை அந்தஸ்த்து எவ்வளவு சகிக்கமுடியாத முறையில் கிடைத்தாலும் அதில் போலித் திருப்தியுடன் வாழப் பெரும்பாலான பெண்கள் தயாராக இருக்கிறார்கள். எவ்வளவு வெறுப்பூட்டும் அற்பமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையாக இருந்தாலும் இதனைக்கைவிடும் பெண்களுக்கு என்ன மிஞ்சியிருக்கின்றது? சுதந்திரத்தை கையில் எடுத்து நடமாடும் பெண்களுக்கு 'வேசி' என்ற சிறப்பு மிகுந்த பட்டம் அன்புடன் எங்கள் கலாச்சாரம் வழங்கியுள்ளது. பிரமச்சாரி என்று கோரி ஒற்றைக்காலில் நின்றாலும் அவ்வாறு கோரும் பெண்கள் சந்தேகத்துக்கு உள்ளாகுவார்கள். ஏன்? பெண்களின் பாற்தன்மை(Sexuality) கல்யாணம் அல்லது, விபச்சாரி(Prostitution) என்பதன் மூலம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளாக் கப்பட்டிருக்கின்றது. இது பெண்களுக்கு மட்டும் நடக்கும் வன்முறை. நாங்கள் ஆண்களுடன் சுதந்திரமாக கதைத்தால் பழகினால் அது எங்களைத்தான் தாக்குமே ஒழிய எங்களுடன் பழகும் ஆண்களுக்கு ஏதோ புலிப்பட்டத்தையே பெற்றுக் கொடுக்கும். தேடல் குழு இந்தக் கதையை பிரசுரித்ததின் மூலம் எதனை எதிர்பார்க்கின்றது? விவாதத்தைக் கிளப்ப இந்தக்கதை கட்டாயம் போடப்பட வேண்டும் என்று நீங்கள் கருதினால் இதன் மாற்றுக்கருத்தை எடுத்துக்கூறும் கதையையும் அதே இதழில் பிரசுரித்திருக்க வேண்டும். இது வரைக்கும் மனித குலத்தின் மற்றைய அரைவாசியான பெண்களை அடிமைத்தனத்துக்குள்ளாக்கி, அவர்கள் அரைகுறைப் பிராணிகள் என்ற மாதிரி அவர்களின் நலன்களை கணக்கில் எடுக்காமல் நடந்து வந்த ஆணாதிக்க சமுதாயத்தை கண்டிக்க எங்களுக்கு உரிமை இல்லை. தேசியப் போராட்டத்திற்கு தீர்வு கிடைத்த பின் பெண்களின் போராட்டத்தை தீர்ப்போம் என்று கூறும் கொடுமையான குருட்டு மனிதர்கள் வர்ணிக்கும் புது உலகத்தில் எங்களுக்கு எந்த ஒரு மூலையிலும் இடமில்லை.

—ஆனந்தி—

**அன்புடனும் அதிக கோபத்துடனும் தேடல் ஆசிரியர் குழுவிற்கு,**

தேடல் 13 கிடைத்தது. அட்டைகள் சேதி சொல்லின. முன்பக்க, உள்ளடக்கம் பற்றிய தொகுப்பு கச்சிதம். விடயனின் எழுதுகோல் பக்குவமான எழுத்துக்களை, கருத்துக்களை தந்திருந்தது. வழமைபோல ஏனோ தானோ என்றில்லாது ஆர்வத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தமையும் கண்ணை உறுத்தாத பத்திரிகைத் தாளும் அச்சு எழுத்துக்களும் இந்திய முற்போக்கு சஞ்சிகையை பார்ப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தியது. அப்பிரமை வீண்பிரமைதானென்பது இவ்விதழ் சிறுகதையை படித்ததும் தெளிவாகியது.

'புரிந்துணர்வு' என்கின்ற ஆழமான உன்னதமான வார்த்தையை ஆண் தனது இச்சையை தீர்க்கும் போகப் பொருளாக்கி, பெண்ணை பண்டமாக பயன்படுத்திவிட்டு வீசிவிடுவதற்காக அதன்பொருளை இவ்வளவு கேவலமாக்க வேறுயாராலும் முடியாது.

சிறுகதையை சிறிது பார்த்தால், சமுதாயத்தின் புறக்கணிப்பை கருத்திற்கொண்டு விலகிநிற்கின்ற சாதனாவிற்கு தான் முற்போக்கானவனாக காட்டிக் கொண்டு இருவருக்கும் நெருக்கம் ஏற்படுத்த ஆண்முயலுகின்றான். அவளுடன் நெருக்கம் ஏற்படும்போது அவனுள் ராகம் தோன்றி, பலம்பெற்று, இனம் தெரிகின்றது. சமுதாயத்தின் போலி, பிற்போக்கு தளைகளை நிராகரிக்கும் பெண் இம்முற்போக்கு வேடதாரியின் வெளித்தோற்றத்தில் கவரப்படுவது யதார்த்தமே. சமுதாயத்திற்கு அஞ்சியோ, ஆண்வர்க்கத்தின் நயவஞ்சகத்தை கருதியோ, விலகி நின்ற பெண்ணை வலைக்குள் வீழ்த்தும் வரை "பல சந்திப்புகளோடு பழகிப்புரிந்து கொண்டு துணைதேடும் நாகரீகத்தை போதிக்கும் வேடதாரி இயல்பான கருத்தொருமிப்பை சாதனா அடையாளம் கண்டு ( இவனது கருத்து மீனுக்கு இட்ட தூண்டில்) இயல்பான நேசிப்பு உணர்வை பெற்றபோது அவ்வேடதாரிக்கு தன்னொத்த வயதில் அக்கா மாதிரி இருந்தாளாம். சுருக்கமாக தன்னொத்த வயதில் இருப்பதை விரும்பவில்லையாம். ஆரம்பத்தில் சந்திக்கும்போது ராகம் இசைத்தது. வலையில் அகப்பட்டதும் கசக்கிறது. நியாயமான பாலுணர்வுத் தேவைகள் எமது பாழும் சமுதாயத்தில் புறக்கணிக்கப் படுவதால் அவை உக்கிரம் கொண்டு வக்கிரமடைந்ததை தீர்க்க முற்போக்காக ஒரு முகமூடி 'புரிந்துணர்வு' என்ற போர்வையில் நம் சிறுகதை நாயகனுக்கு தேவைப்பட்டது. அக்கா மாதிரி இருப்பதை முதல் பார்வையில் காணாமல் கண்ணை நமது கதாநாயகனுக்கு மறைத்தது எது?

சாதனா இவன்பால் ஈர்க்கப்பட்டு அதிகமாக நெருங்கியது பிடிக்காதுவிடின் அதை — யொட்டிய விடயங்களை பேசித்தீர்ப்பது அல்லது அவளை விட்ட விடுவது தானே முறை. அப் பெண் மனிதப்பண்புக்கேற்ப அவ் ஆணுடன் தன் வாழ்கையை பகிர முடிவெடுத்தபின் மிகுந்த நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்கிறாள். ஒன்றில் அவளது நம்பிக்கையைவிட்டு தனது தெளிவான முடிவை முன்வைத்திருக்க வேண்டும். இல்லாவிடின்தான் விலகியிருக்க வேண்டும். இல்லாவிடின் பரஸ்பரம் பாலுணர்வை பகிர்ந்து கொள்ள மட்டுமென இருவரும் உடன்பாடு செய்திருக்கவேண்டும். ஆனால் அப்பெண்ணிற்கு நம்பிக்கையை ஏற்படுத்தி அந் நம்பிக்கையில் அப்பெண் செயற்படும்போது அது புரிந்தும் நம் கதாநாயகனுக்கு பாலுணர்வு வென்றதாம். தனது தேவையை தீர்த்துக்கொள்ள அவளது நம்பிக்கையை சாதகமாக்கி பெண்ணை இச்சை தீர்க்கும் பண்டமாக்கி அவளது உணர்வுகளை கணக்கில் எடுக்காத நவீன ஆண் அடிமைத்தனத்தின் பிரதிநிதி 'புரிந்துணர்வு' என்கின்ற ஆழத்தை கொச்சைப் படுத்தி முற்போக்கு முகமூடியணிந்த நமது கதாநாயகன்.

ஆனாலும் கடந்து போன வரலாறுகளில் பெண்களை நம்பவைத்து மோசம் செய்யும் ஆண்கள் போலவே நம் கதாநாயகனும் நியாயங்களை வழங்குகின்றார். திருமணம் செய்வதாக நம்பிக்கையளித்து பெண் வயிற்றில் கரு சுமந்ததும் "என்னுடன் கட்டுப்பாடில்லாது நடந்தது போலவேயாருடன் நடந்தாளோ! குழந்தை யாருடையது என்று யாருக்கு தெரியும்"' என்று ஆண் வெறியர்களின் நியாயத்தை பெண்குலம் சந்திக்கவில்லையா என்ன? பாலியல் பலாத்காரத்தை கூட ஊசி, நூல் கதைகூறி நியாயப்படுத்தும் சமதாயத்தின் தோன்றல்கள் எதற்கும் நியாயம் வைத்திருப்பார்கள்.

அநுசரி தேடல் 12 கணவனின் கொடுமைகளிற்கெதிராக அமெரிக்கப் பெண்ணிற்கு அவனது ஆணுறுப்பை வெட்டி வீச கத்தியை வழங்கியது. தேடல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13 தமிழ் பெண் சாதனாவிற்கு கண்ணீரை வழங்கியதேன்.? பாம்பக்கு தலையும் மீனுக்கு வாலுமா? எது தேடலின் உண்மை முகம் என வாசகர்களாகிய நாம் அறிய முடியுமா?

(தேடலில் தேடிப்பார்த்தேன். இதில் வரும் ஆக்கங்கள் ஆக்கதாரருடையதே. தேடல் பொறுப்பல்ல என்று அறிவிப்பை காணவில்லை.)

அடுத்து . சாதனா கூறியதாக ஒரு மேற்கோளைக் குறிப்பிடுகிறீர்கள். சிறுகதையில் வரும் சிறுவிடையமென்றில்லாது. கருத்துக்கள் மக்களை சென்றடைகின்றன என்ற ரீதியில் இதை ஆராயலாம். என கருதுகின்றேன். இவ்விதழ் வெளிவந்தவுடனேயே ஒரு நண்பர் உரையாடும் போது இதை ஒப்புவித்தார். அவ்வகையில் கருத்துக்கள் மக்களது சிந்தனையில் பாதிப்பை ஏற்படுத்துவதை காணமுடிவதால் இதை ஆராய்வது நலம்.

"இரவோடு இரவாக படித்த முற்போக்கு விடயங்களை தனியொருத்தி விடியற்காலையில் நடைமுறைப்படுத்த வெளிக்கிடுவது முட்டாள் தனம். விகார நடவடிக்கை. ஏன் இயங்கியலுக்கே முரண். சமுதாயம் புரிந்துணர்வு உள்ளதாக மாறும்வரை யாரும் தனிமனிதன் பலிக்கடாவாகி சமுதாய மறுமலர்ச்சியை ஏற்ப்படுத்தலாம் என்புது நடைமுறையில் சாத்தியமல்ல'''

இம்மேற்கோள் விளக்குவதன்படி சமுதாயம் முற்போக்கான கருத்துக்கள், நடவடிக்கைகளை கிரகித்து நடைமுறைபடுத்தும் வரை சமுதாயத்தின் முன்னேறிய பிரிவினரின் நடவடிக்கைகளை விகாரம், இயங்கியலுக்கு முரண் என்றா கூறுகிறீர்கள்? சமுதாயம் தன்னியல்பாக இயற்கையாக புரிந்துணர்வு கொண்டதாக உருவெடுப்பதில்லை. சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் சமுதாயவளர்ச்சியின் அடுத்தகட்ட அம்சங்களை கிரகித்து சமுதாயம் உள்ள கட்டத்திற்கேற்ப நடைமுறையை வகுத்து சமுதாயத்தின் மீது தமது கருத்தாக்கங்கள் ஆளுமைபெற முன்னணியாளர்களாக செயற்படுவது விகார நடவடிக்கையல்ல. இதுதான் இயற்கை. இயங்கியல் வளர்ச்சி மனிதகுல வரலாற்றில் இப்படித்தான் நிகழ்ந்துள்ளது.

சமுதாயத்தின் பிற்போக்குத் தனங்களை அஞ்சி வாலாக இழுபடுபவர்கள் தம்மை நியாயப்படுத்தவே இந்த மேற்கோள். அது என்ன? இரவில் படித்த முற்போக்கு விடயங்களை விடியற்காலையில் நடைமுறைப்படுத்த வெளிக்கிடுவது என்று ஒரு கேலி. உணர்வுபூர்வமாக கிரகித்துக் கொண்டு நடைமுறை யதார்தங்களுக்கேற்ப செயலாற்றுவது என்றொரு பக்கமும் முற்போக்கு சக்திகளுக்கு உண்டுதானே. அப்பக்கத்தை நீங்கள் அறியவில்லையா?

சரி நடைமுறையை பார்ப்போம்! ராஜனி திராணகம புலிகளால் கொல்லப்பட்டதை எதிர்த்து நினைவுநாள் ஒழுங்கு செய்தீர்கள். இங்கு ராஜனி ஆணா, பெண்ணா, தமிழா, சிங்களமா என்று பலபேர் என்னைக் கேட்டதுண்டு. எமது சமுதாயத்துக்கு தமது உயிரை அளித்த ராஜனியை அறியாத சமுதாயம் உங்கள் நினைவு நாளுக்கு கூட்டம் என்ன அலைமோதியதா? உங்களது பார்வையில் ராஜனியினது நடவடிக்கை விகார நடவடிக்கை. அவர் தனிமனித பலிக்கடா. பலிக்கடாவையா நினைவு கூருகின்றீர்கள். விகாரப்பட்டுப் போன எமது சமுதாயத்தின் விழிப்புக்கு ராஜனி ஆன்மா. நடைப்பிணங்களான எமது மக்களுக்கு ராஜனி ஓர் எழுச்சி வடிவம்.

கிட்டுவை ஜனநாயக மறுப்பாளனாக கூறுகின்றீர்கள். (ஏன் வம்பு பேஸ்போல் மட்டை மலிந்த நாடு. நீங்கள் துணிந்தவர்கள் சொல்லாத சேதிகள் நாடகம் பார்த்தேன்.) கிட்டு இறந்த போது றொறன்ரோவில் பெரும் ஊர்வலத்துக்கு மக்கள் திரண்டார்களே. முஸ்லீம் மக்களை பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு காதுத்தோட்டையும் பிடுங்கிக் கொண்டு விரட்டி அகதிகளாக அலைமோதுகிறார்களே. தமிழ் சமுதாயமென்ன திரண்டெழுந்து அவ்வநீதியை எதிர்த்துக் குரலெழுப்பிக் கொண்டிருப்பதாக எண்ணமோ? இப்பவும் அமெரிக்கா குவைத்தில் அடித்தாலும், இந்த வெறியர் பாபர் மசூதியை இடித்தாலும் உவன். . . சோ . .க்கு வேணும் உவங்கள் தொ. . . பி. . . என்கின்ற தமிழ் சமுதாயம். அப்ப நீங்கள் மட்டுமென்ன நினைவு நாட்களை சமுதாயம் புரிந்துணர்வுக்கு மாறாத போதே நடத்துகின்றீர்கள். சில வேளை நீங்கள் செய்பவை மட்டும் பகலில் படித்த முற்போக்கு விடையங்களோ?

சிலவேளை உங்கள் கடந்த காலங்களை இம்மேற்கோள் மூலம் சுயவிமர்சனம் செய்து விளங்கிக் கொண்டு உங்கள் செயற்பாடுகளை நிறுத்துகின்ற நோக்கமிருப்பின் இது உங்கள் சொந்த விடையம். எமது சமுதாயம் இப்படி வக்கிரப்பட்டிருப்பினும் உங்களைப் போன்ற சக்திகள் மாற்றத்திற்கு அறிகுறியாக இருப்பதைக் கண்டு பெருமிதமாக இருந்தது. நீங்களும் சமுதாயத்திற்கு பின்னால் ஒளிகின்ற மேற்கோள்களை வைத்து குழப்புகின்றீர்கள். நீங்கள் செய்பவற்றை நீங்களே தவறு என்று சொல்ல ஒரு மேற்கோளா? குழப்புகின்றீர்கள்.

இதிலும் எது தேடலின் உண்மை முகம்? எது நிகழந்தாலும் வாய்மூடி மௌனிக்கும் எமது சமுதாயத்தின் மௌனம் கலைக்க செயற்படுவீர்களா?

அல்லது சமுதாயம் தானாக புரிந்துணர்வு பெற்று (ஜெகோவாக்காரர்கள் கூறுவது போல அற்புதங்கள் ஏதும் நடக்கலாம்) கப்பல் ஒழுங்கு செய்து பருத்தித்துறையில் இறங்கி பாசிசத்துக்கெதிராக பீடுநடை போடும் காலம்வரை காத்திருப்பதாக உத்தேசமா?

புரந்துணர்வு என்ற பெயரில் புருஷ உணர்வுச் சிறுகதைகளையும். இவ்வகைக் குழப்பல்களையும் தொடர்ந்து வெளியிடுவோமென அடம்பிடிப்பீர்களெனின் (தேக்கத்திலிருந்த ஆக்கங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். அச்சமாக உள்ளது.)பெண்களை சிறுமைப் படுத்துவதற்கு எதிராக, பெண்களிற்கு கண்ணீரையே வழங்கும் ஆண்வெறியர்களிற்கு (கல்லுக்கும், புல்லுக்கும் கண்ணீர் வடித்து இப்போ 'புரிந்துணர்வு' வேடதாரிக்கும் கண்ணீரா) எதிராக மானிடத்தின் மேன்மையான அம்சங்களான காதல், நேயம், புரிந்துணர்வு என்பவற்றை உண்மையான அர்த்தங்களில் காண விரும்புகின்ற வாசகர்கள் மாதம் 1 டொலர் சேமிப்பைத் தவிர வேறுவழியில்லை.

— ஜெகசோதி —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழறிஞர் ஈழத்து பூராடனார்

***மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட ஈழத்துப்பூராடனார் அவர்களை நடைபெற இருக்கும் 'உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின்' மகாநாடு பற்றிய விபரங்கள் அறியுமுகமாக நாம் சந்தித்த போது இடம்பெற்ற உரையாடல்***

**தேடல் —** இருபதாம் நூற்றாண்டின தேவைகளையொட்டி தமிழ் மொழி வளர்ச்சி அடைந்துள்ளதா?

**பதில் —** மக்களில் மூன்று வகையினர் உள்ளனர். படித்தவர்கள், படிக்காதவர்கள், படித்துத் தேறியவர்கள். என மூன்று வகுப்பினருக்கும் பொதுவான கேள்வி இதுதான். தமிழ்மொழி காலத்துக்கு ஏற்ப வளர்ச்சியடைந்துள்ளதா? என்னைப பொறுத்த அளவில் ஒரு மொழி தானாகவே வளர்ச்சியடைகின்றது. வேற்று மொழிகளின் ஆதிக்கங்களையும் மீறி தமிழ்மொழி வளர்ச்சியடைந்தே வந்துள்ளது. தமிழ் மொழி எப்போதும் வேற்றுமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளும் போது தன்வயப்படுத்தியே ஏற்றுக கொண்டிருக்கிறது. உதாரணமாக 'தண்ணித் தாங்கியடி' என்று கூறுகின்றோம். 'ராங்' என்ற சொல்லிலிருந்துதான் தாங்கி வந்திருக்க வேண்டும். ஆனால் அது சாதாரண தமிழ்ச் சொல்லாக பாவனையில் உள்ளது. இது போல் தன்வயப்படுத்தி ஏற்றுக் கொண்டமையினால் தமிழ எத்தனையோ மொழி ஆதிக்கம் வந்த போதும் நீடித்து நிலைக்க முடிந்திருக்கிறது. வடமொழியால பாதிக்கப்பட்ட கன்னடம், தெலுங்கு, துளு போன்ற மொழிகளின் பட்டியலில் தமிழ இல்லை. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இடங்களில் தமிழ் நிலைத்து வளர்ச்சியடைந்தே வந்துள்ளது. சேர, சோழ, பாண்டிய, ஈழ நாடுகளில் தமிழ வளர்கப்பட்டிருக்கிறது. இங்கு உங்களுக்கு ஓர் கேள்வி எழலாம். ஈழநாடு என்று ஒன்று நிச்சயம் இருந்திருக்கிறது. ஈழத்து உணவும் காளகத்தாக்கமும் என்று குறிப்பிடுகின்றார்கள் சங்க இலக்கியத்தில். சங்க காலத்தை வரையறுக்கப் போனால கிறிஸ்த்துவுக்கு முன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவரை அறியக்கூடியதாய் உள்ளது. சங்க காலம், சிலப்பதிகார காலம் என்று பல படிகளாய் வளர்ச்சி பெற்ற தமிழ் பிற்பட்ட காலங்களில் திட்டமிடப்படாத ஒரு வளர்ச்சியையே கொண்டுள்ளது. பொதுமைப்படுத்தப்பட்ட வளர்ச்சி என்பது அறவே இல்லை. தமிழ ஆராச்சி மன்றம்கூட அந்த வேலையைச செய்யவில்லை. தமிழ் ஆராச்சி மகாநாடுகள் நடந்தால் கட்டுரைகள் வாசிப்பதுடன பெரும்பாலும் நின்று விடும். தமிழ்வளர்க்கப்பட வேண்டும் எனில் வாசிப்பதுடன் நிற்கக்கூடாது. தமிழரின் வாழ்க்கையில் செயற்பாடுகளுடன இலக்கியம் உட்புக வேண்டும். இலக்கியம் உட்புகும் போதுதான் தமிழரின வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும். தமிழரின வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும் போதுதான் இலக்கியம் மலர்ச்சி அடையும். உங்களுக்கு தெரியும் ரஸ்சியாவில் அவ்வளவு மக்களும் கம்யூனிஸ்டுகளாக மாற்றம் பெற்ற காலத்தில இலக்கியத்தின் பங்களிப்பு எத்துணை சிறப்பிடம் பெற்றிருந்தது என்று.

*பிறமொழி இலக்கியங்கள் அவசியம் மொழி பெயர்க்கப்படல் வேண்டும். ஆனால் அவை தமிழ் ஆக்கம் பெறவேண்டுமே தவிர வரிக்கு வரி மொழிபெயர்ப்பாய் இருக்கக்கூடாது. மொழிபெயர்க்கும் கருத்தினை உள்வாங்கி தமிழ் நடையில் அதனைச் சொல்லவேண்டும். மற்ற மொழியில் சொல்லப்படும் விதத்தில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கருத்துத்தான் எங்களை வந்தடைய வேண்டும்.*

**தேடல் —** மொழி பெயர்ப்புகள் மொழியினை வளம் படுத்துகின்றனவா?

**பதில் —** நிச்சயமாக வளம்படுத்துகின்றது. கைலாசபதி ஒரு புத்தகத்தில் கம்பரையும், கோமரையும் ஒப்பிட்டு ஆராய்ந்திருந்தார். எனக்கு கம்பரின் மீதுதான் பாசம் அதிகம். அதனால் இங்கு வந்ததும் நான் கோமரின் ஒடிசியை வாசித்தது மட்டுமல்லாமல ஒடிசியை பாட்டுக்களாக மொழிபெயர்ப்பும் செய்தேன். இருந்தாலும் எனது அபிப்பிராயம் கம்பரின் கால்தூசுக்குக்கூட கோமர் இல்லை என்பதுதான். இலக்கியத்துக்கு வர்ணனைகளும், கற்பனைத்திறனும் இருக்கும் போதுதான அழகாய் இருக்கும். பிறமொழி இலக்கியங்கள் அவசியம் மொழி பெயர்க்கப்படல் வேண்டும். ஆனால் அவை தமிழ் ஆக்கம் பெறவேண்டுமே தவிர வரிக்கு வரி மொழிபெயர்ப்பாய் இருக்கக்கூடாது. மொழிபெயர்க்கும் கருத்தினை உள்வாங்கி தமிழ் நடையில் அதனைச் சொல்லவேண்டும். மற்ற மொழியில் சொல்லப்படும் விதத்தில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கருத்துத்தான எங்களை வந்தடைய வேண்டும். உதாரணமாக வடமொழியில் இருந்த வால்மீகி இராமாயணத்தின் தமிழ மொழியாக்கம் கம்பராமாயணம். இரண்டையும் ஆராய்ந்த அறிஞர்கள கூறுகின்றார்கள் மூலநூலவிட மொழிபெயர்ப்பு இலக்கியம் நிறைந்ததாய உள்ளதென்று. இதற்குக் காரணம் கம்பன மொழிபெயர்ப்பு செய்யவில்லை, தமிழாக்கம செய்தான். எனவேதான் கூறுகிறேன் பரந்து வாழும் இலக்கியங்களை மதிக்க வேண்டும். அறிய வேண்டும், அதற்காக சொல்லுக்கு சொல்லாக அறியாமல், தமிழாக்கம் பெற்று அறிதல் வேண்டும். குஜராத்தி நாவல ஒன்றின் மொழியாக்கம் ஒன்று படித்தேன். வரிக்கு வரி குஜராத்தி மண்ணின் மணம் வீசியதே தவிர கருத்து வந்தடையவில்லை. அந்நாவல் தமிழாக்கம் பெற்றால் அக்கருத்து சுலபமாக மக்களை சென்றடையும்.

**தேடல் —** பிறமொழிச் சொற்களை இரவல வாங்குதல் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**பதில் —** இரவல் என்பது ஒரு மொழி சமுதாயத்தின் பிரச்சனை என்றில்லை. பொதுவாக தமிழில் பேசும் போதும், எழுதும் போதும், கவிபாடும் போதும் எங்களது கருத்தை விளங்கப்படுத்தக்கூடிய சொற்கள் எம்மிடம் உள்ளதா? என்று அறிய வேண்டும். உதாரணமாக சூழல் பற்றிய கட்டுரை எழுதமுனையும் ஒருவர் ஆங்கிலத்தில் அறிந்த விடயங்களை தமிழில் சொல்ல முனையும்போது சொற்தட்டுப்பாடு வரலாம். இந்நிலையில் அவருக்கு தேவை அகராதி. அகராதி வளர்ச்சியும், பாவனையும் மிகவும் குறைவாகவே உள்ளது. எனக்கு தெரிந்தவரை மதுரைத் தமிழ் அகராதி சிறப்பானதொன்று. இருப்பினும் தமிழில் அகராதிகளின் பற்றாக்குறை இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்லும கிரியாவின் அகராதியை நான் பார்க்கவில்லை. அதுபோல் பல பாவனைக்கு வரவேண்டும் மரபுக்கவிதை எழுதுபவன் சொல்லுக்கான எதுகை தெரிந்தமையால் அடுத்த வரிக்கான சொல்லைத் தெரிவு செய்கிறான். புதுக்கவிதை எழுதும் கவிஞனின் கையில் அகராதி இருக்குமெனின் அவன்கூட மரபுக்கவிதை எழுதமுடியும். மொழிபெயர்ப்பாளன் தமிழ் அகராதியின துணையுடன் மொழிபெயர்க்கும் போது சிறப்பான தமிழாக்கத்தை தரமுடியும். தமிழ் — தமிழ் அகராதி பாவனையில அதிகமாக்கப்பட வேண்டும். இலங்கை கல்வித்திணைக்களத்தினால் 60க்கு மேற்பட்ட துறைகளிற்கும் அகராதித தொகுதி தயாரிக்கப்பட்டது. அது இங்கு பெறப்படுமானால் மொழிபெயர்ப்புக்கு உதவியாய் இருக்கும்.

**தேடல் —** நடைபெறப் போகும உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின மகாநாடு எவ்விதத்தில் நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை பூரணப்படுத்துகின்றது?

**பதில் —** நாங்கள் சுத்தியும், சுத்தியும் சுப்பற்ற கொல்லேக்கதான் நிக்கிறம். தமிழர் உலகமெங்கும் பரந்திருப்பது போல் வேறு இனங்கள் அதிக எண்ணிக்கையில பரந்திருப்பார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. மிகவும் வறுமைப்பட்ட நிலையிலும் இயற்கையாலும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் ஆங்கிலேயர்கள் காலத்திலேயே வெளிநாடு சென்றது அதிகமாக உள்ளது. தமிழே தெரியாமல் தமிழர்களாக அவர்கள பல இடங்களில் வாழுகன்றார்கள்.இந்திய அரசாங்கத்தின் கணிப்பின்படி உலகம முழுவதும் 8 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் எங்களது உலகத் தமிழர் ஆராய்ச்சி குழுவின் கணிப்பின்படி 10 கோடி தமிழர்களிருப்பதாக கணிப்பிட்டுள்ளோம். ஆனால் 10 கோடி தமிழர்களிருந்தும் என்ன பிரயோசனம். எங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபையில பேசுவதற்கு யார் இருக்கிறார்கள். ஒரு கோடி சனத்தொகையுள்ள இனம்கூட தனக்கென்று ஒரு பிரதிநிதியினை கொண்டுள்ளது. எமக்கென்று பிரதிநிதிகள இல்லாத காரணத்தால் தமிழினத்தை காப்பாற்ற யாரும் தலையிடப்போவதில்லை. தமிழ்ப் பண்பாடு அழிந்து கொண்டு செல்கிறது. தமிழே தெரியாமல் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்நிலையினை தமிழாராய்ச்சி மாநாட்டு நிறுவனம களையுமென்றுதான் எத்தனையோ நாட்டிலிருந்து உதவி கிடைத்தது. இருந்தும் ஒன்றுமே நடக்கவில்லை. உலக தமிழாராய்ச்சி நிறுவனம யாழ்ப்பாணத்தில் நடந்த அழிவினைப் பார்த்து மனவேதனையுற்ற குரும்பசிட்டி கனகரட்ணம், சாலை இளந்திரையன போன்றோர் இணைந்து இந்நிறுவனத்தை ஆரம்பித்தனர். ஐந்து வருட காலமாக அதிகமான செயற்பாட்டினை நாம கொண்டிருக்கவில்லை. எமது செயற்பாட்டில் முக்கியமாக மொறீசியஸ்சில் தமிழ்ப் பள்ளிக்கூடம் ஆரம்பித்ததைச சொல்லலாம். நான் இந்நிறுவனத்தின உதவித் தலைவராக இருந்து வருகின்றேன். கனடாவை பொறுத்தவரை இரண்டு உலகத்தமிழர் இயக்கம் செயற்பட முடியுமா?

> ஒருவர் ஆங்கிலத்தில் அறிந்த விடயங்களை தமிழில் சொல்ல முனையும்போது சொற்தட்டுப்பாடு வரலாம். இந்நிலையில் அவருக்கு தேவை அகராதி. அகராதி வளர்ச்சியும், பாவனையும் மிகவும் குறைவாகவே உள்ளது.மொழிபெயர்ப்பாளன் தமிழ் அகராதியின் துணையுடன் மொழிபெயர்க்கும் போது சிறப்பான தமிழாக்கத்தை தரமுடியும்.

என்ற பிரச்சனையால் நான் செயற்பாடு எதனையும் ஆரம்பத்தில முன்னெடுக்கவில்லை. ஈழத்தமிழர் உலகத்தமிழராய் இருப்பது போல் உலகத் தமிழரை ஈழத்தமிழராக மாற்றவும் நான் விரும்பவில்லை. மேலும் குஞ்சரியை (கோழியாஸ்) கிள்ளிப்போட்டால் எப்படி வேர் விடுமோ அதேபோல் ஆயிரம் கழகங்கள வளர்வதையும் நான் விரும்பவில்லை. சிட்னியில் நடந்த மகாநாட்டைத் தொடர்ந்து இங்கேயும் செய்ய வேண்டும் என்று பலரும் என்னை அனுகியதால் உலகத்தமிழா பண்பாட்டு இயக்கத்தின் கொள்கைகளை அறிமுகப்படுத்தலாம் என்பதால் உடன்பாடு கொண்டு மகாநாட்டினை ஒழுங்கு செய்துள்ளோம். அரசாங்கம் ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ள போதே தமிழ் படிக்க பிள்ளைகளை பெற்றார் அனுப்புவதில்லை. இந்நிலையில் அரச உதவிகள் நிறுத்தப் பட்டால் யு. என். ஓ மூலமாக உதவிகளைப்பெற இது போன்ற அரசியல சார்பற்ற நிறுவனம் அவசியம் என நினைக்கின்றேன். நடைபெறப் போகும மகாநாட்டில் அரசியல்வாதிகள் கலந்து கொள்வது தவிர்க்கப்படும். உலகம முழுவதும் தமிழர் வாழும் இடங்களில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். வெளிநாட்டில் தமிழ் வாலிபரின் பண்புகள் எப்படியானது? தமிழ் பேச்சு மொழியாக உயிர்வாழச்செய்வது எப்படி? தமிழை இலகுவாக கற்றுக் கொள்வது எப்படி? இவை தொடர்பாக உரைகளை வழங்கவிருக்கும் ஒருவருக்கு 1000 டொலர் பெறுமதியான பரிசினை வழங்க உள்ளோம்.

**தேடல் —** மின்கணணி யுகத்தில் வாழும எமக்கு எழுத்துக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் பாவனைக்கு வசதியாக இருக்காதா?

**பதில் —** எங்களது எழுத்துக்களில ஒவ்வொரு எழுத்துக்கும் ஒலிநயம் உண்டு. ஆங்கிலம் போன்ற மொழி எழுத்துக்கள் அப்படியல்ல. ஒரு எழுத்தையே பல ஒலிகளுக்கு பாவிக்கிறார்கள். எழுதும் கருவிகளைக் கொண்டு எழுத்து மாற்றம் பெற்று வந்துள்ளது. ஒலி எழுத்துக்களை வேறுபடுத்த வேண்டிய தேவையையும் மாற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. ஆரம்ப காலத்தில் ஏடும், எழுத்தாணியும் பாவித்த காலத்திலிருந்த எழுத்து வடிவம மாற்றம் பெற்றுள்ளதே தவிர எழுத்துக்கள சேர்க்கப்படவில்லை. சொல்லப்போனால தொல்காப்பியர் காலந்தொட்டு எழுத்துக்கள அப்படியேதான் உள்ளன. சிவஞான முனிவர் போன்றோர் வட எழுத்துக்களுக்கு உருவம அமைத்துக் கொடுத்தனர். ஆனால் ஆயிரம ஆண்டுகாலமாக எழுத்துக்களில பெரியமாற்றம் எதுவும ஏற்படுத்தப்படவில்லை. எழுத்துச சீர்திருத்தம் எனக்கு உடன்பாடானதில்லை. அது தொடர்பாக நான் புத்தகம் ஒன்றை நான் எழுதியுள்ளேன். மின்கணணி யுகத்தில் பழைய எழுத்துக்களை பாவிப்பது எவ்வளவு சிறப்பானது என எடுத்துக்காட்டியுள்ளேன். மேலும எழுத்துக்களை சேர்க்கவேண்டுமே ஒழிய இருப்பதையும் சிதைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. நான் வேகமாக மின்கணணியை உபயோகித்தபோது நிமிடத்துக்கு 60 எழுத்துக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிக்கக்கூடியதாய் இருந்தது.

**தேடல்—** அண்மையில் சுதந்திரமடைந்த எரித்தீரியா நாட்டில் பெரும்பான்மை மொழியான கிரிஞ்ஞா மொழியில மின்கணணியை பாவனைக்கு கொண்டுவர எடுத்த முயற்சி அதில் ஏற்படக்கூடிய செலவைக் கருத்தில் கொண்டு அத்திட்டத்தை கைவிட்டுள்ளனர். அதுபோல் தமிழில் மின்கணணியை இயக்குதல் சாத்தியம் என்று நினைக்கிறீர்களா?

**பதில்—** அவர்கள் ஒரே தடவையில் தமது மொழிப்பாவனையை நடைமுறைக்கு கொண்டு வருதல் சாத்தியமில்லையெனின் படிப்படியாக கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்று கூறுவேன். அதைநோக்கி முன்னேற வேண்டுமே தவிர கைவிடக்கூடாது. தொழில நுட்பவியலாளரின் சிந்தனையை மாற்றுவதன் மூலம் இதனை சாதிக்க முடியும். எதற்கும் அயராத உழைப்பு வேண்டும்.

**தேடல்—** திராவிட கால தமிழ்ச்சொற்களுக்கு மீள உயிர் கொடுத்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்—** என்னைப் பொறுத்தவரை ஒரு நன்மைதான் உண்டு. பழைய சொற்களை பாவிப்பதால் பழைய இலக்கியங்களை வாசிக்க சாதாரண மக்களால் முடியும். திராவிட மொழியென்று சொல்வதைவிட பழைய தமிழ் மொழியை பாவனைக்கு கொண்டுவந்தால் எமது முன்னோர்களின் நாகரீகத்தை அறிந்து கொள்ள முடியும்.

**தேடல்—** பழைய இலக்கியங்களை அறிந்து கொள்வதால் இளையதலைமுறைக்கு என்ன லாபம்?

**பதில்—** மனிதத்தன்மையை அதிகம எடுத்துரைக்கும் நூல்கள் அவை. ஏன் அவசியம் எனின் புறநானூற்றுத் தமிழர்களின் யுத்தமுறைக்கும் இன்றைய தமிழர்களின் யுத்தமுறைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளமுடியும். திருத்திக் கொள்ள வேண்டிய நிறைய விடயங்களை புரிந்து கொள்ளமுடியும்.

**தேடல்—** தமிழ்மொழியை வளர்த்தவர்கள் பட்டியலில் இடம்பெறும் ஆறுமுக நாவலர் பற்றிய உங்கள் கருத்தென்ன?

**பதில்—** நாவலர் தமிழை மட்டுமல்ல சைவத்தையும் வளர்த்தவர். சைவ சமயத்தை வளர்க்கும் போது புலால உண்பவர், புலால் உண்ணாதவர்கள் என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி மக்களிடையில பெரிய சாதிப்பாகுபாட்டை ஏற்படுத்தினார். பிரமச்சாரியான இவர் பல ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தினார். ஆனால சாதாரண மனிதனால் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என்றாலும உயர்சாதியாக காட்டிக்கொள்ள தொடங்கியவர்கள் இவரது ஒழுங்குகளை தாங்கள் பின்பற்றுவதாக காட்டிக கொண்டார்கள். சொல்லப்போனால் சாதி வேறுபாடுகள் இவரது காலத்தில்தான உச்சமடையத் தொடங்கியது.

> பதில்— நாவலர் தமிழை மட்டுமல்ல சைவத்தையும் வளர்த்தவர். சைவ சமயத்தை வளர்க்கும் போது புலால் உண்பவர், புலால் உண்ணாதவர்கள் என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி மக்களிடையில் பெரிய சாதிப்பாகுபாட்டை ஏற்படுத்தினார். பிரமச்சாரியான இவர் பல ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தினார். ஆனால் சாதாரண மனிதனால் அதனை நடைமுறைப்படுத்த முடியாது

**தேடல்—** கனடா வந்த தமிழர் இதுவரை 6 கோவில்களை மக்களின் பணத்தைத் திரட்டி உருவாக்கி உள்ளனர். இது வரை பாரிய அளவில் நூல்களைக் கொண்ட நூல்நிலையம் ஒன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படவில்லை. உங்கள மகாநாட்டில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படுமா?

**பதில்—** ரியூனியன் தீவில் 48 இந்துக கோவில்கள் உள்ளன. ஆனால் அங்கே உள்ளவர்களுக்கு தமிழ் தெரியாது. இந்துக கோவில்களின் மூலம் தமிழ் வளர்க்கமுடியாது. ஏனென்றால் இந்துக் கோவிலின் பூசாரி தமிழில் ஆராதனை செய்வதில்லை. சமஸ்கிருதத்தைத்தான உபயோகிக்கிறான். தெரியாத பாஷையைச சொல்லி திருமணச்சடங்கினை செய்கிறான். இதன் மூலம் தமிழ் வளர வாய்ப்பில்லை. மூன்று தலைமுறைத் தமிழர்கள் இங்கு இருக்கிறார்கள். புதிய தலைமுறையினரில் 60 வீதமானோருக்கு தமிழ் எழுதவோ, வாசிக்கவோ தெரியாது. சிறிய வீதம் பேசவும எழுதவும் கற்றுக்கொள்ளும் நிலையில உள்ளனர். இருந்தாலும் காலவோட்டத்தில் 60 வீதம் மேலும் அதிகரிக்குமே தவிர குறைய வாய்ப்பில்லை. குறைந்த பட்சம் தமிழ் மொழி வீட்டு மொழியாக இருப்பதன மூலமாவது எதிர்காலத்தில நிலைக்கமுடியும். தமிழ் இனம் ஒன்று இருக்க வேண்டுமானால் தமிழ் மொழி உயிர்வாழ வேண்டும். மொழி அழிந்தால் இனம் அழிந்து விடும். எம்மால முடிந்தவரை முயற்சிதான் செய்யமுடியும்.

**தேடல்—** இனம் என்ற அடிப்படையில் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் இரு வேறு இனங்களுக்கான தனித்துவத்தை வெளிப்படுத்துகிறார்கள். மொழி அடிப்படையில் ஒன்றிணைகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில்—** ஒரு இனம் இன்னொரு இனத்தின மொழியை பேசுதல் அதிகமாகக் குறைவு. 'நான் கருதுகிறேன்' முஸ்லீம் மக்கள் தமிழ இனம்தான் காலப்போக்கில் மதத்தினைத் தழுவி தனித்துவமான வளர்ச்சியடைந்துள்ளார்கள். அல்லது அவர்கள் முஸ்லீம் இனமாக இருப்பின் தமிழ் மொழியை சுவீகாரம் செய்திருக்க வேண்டும். கலப்பு திருமணங்கள் மூலம் இது பெருமளவு நிறைவேறியிருக்க வாய்ப்பிருக்கிறது. ஒரு மொழியைப் பேசும ஒருவன் எந்த மதத்தவனாயினும் சரி பாகுபடுத்த முடியாது. இன்று தென்இலங்கையில் தமிழ் வளர்ப்பவர்கள் முஸ்லீம்கள். அவர்கள் மீது பாகுபாடு காட்டுதலை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**தேடல்—** பேச்சுவழக்கில் மொழி உயிரோட்டம் இல்லாத போது எங்களது உணர்வுகளை பிரதிபலிக்க முடியுமா? இந்தியத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ் என்று பேச்சுமொழி வேறுபடுகின்றதே. இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

**பதில்—** ஜீவனுள்ள மொழியினால உணர்வினைப் பிரதிபலிக்க முடியும். தமிழ் நிச்சயம் ஜீவனுள்ள மொழி என்பதில வேறுபட்ட கருத்து கிடையாது. யாழ்ப்பாணத் தமிழர் பேசும் மொழியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிரோட்டம் குறைவு என்பதைவிட இலக்கண ஓட்டம் அதிகமாய் உள்ளதைக காணலாம் அங்கே பாவனையில் உள்ளது ஏட்டுத் தமிழ். ஆனால் இதை மன்னாரிலோ மட்டக்களப்பிலோ காணமுடியாது. அங்குள்ளவர்களின் பேச்சுத்தமிழ் உயிரோட்டம் அதிகமாக உள்ளதைக் காணலாம். உதாரணமாக மட்டக்களப்பில் உள்ள ஒருவன் மாமனை ஏசும் போது "என்னை என்ன செய்யப்போகிறாய் அட மாமா" என்று ஏசுவான். இதில் ஓர் அன்னியோன்யம் உண்டு. ஒப்பிடும்போது யாழ்ப்பாணத் தமிழில் இந்த அந்நியோன்யம் குறைவாகவே காணப்படுகிறது.

**தேடல்—** பொருளாதார காரணங்களைத தவிர்த்து யாழ்ப்பாண மொழியில் குறைந்து காணப்படும் உயிரோட்டமற்ற தன்மை யாழ்ப்பாண குடும்பங்களில அந்நியோன்னியத்தை சிதைப்பதில், சமூகங்களிடையில் ஒற்றுமையைக் குழப்பி இரத்தக்களரிக்கு காரணமாக அமைந்திருக்கமுடியும் என்று கருதுகிறீர்களா?

**பதில்—** 'நீங்க எடுத்திற்று வாங்க' என்பதற்கும் 'நீ எடுத்திற்று வா' என்பதற்கும் வேறுபாடு அந்நியோன்யம்தான். இனப்பிரச்சனைக்கு வித்திட்டதில் சிங்களவர், முஸ்லீம்களைவிட யாழ்ப்பாணத்தமிழருக்கு முக்கிய பங்குண்டு. இலங்கையின் இன்றைய சூழ்நிலை வருவதற்கு முக்கிய காரணங்களில் யாழ்ப்பாணத்தில் நிலவும் சமூகப்பிரச்சனை, சீதனக் கொடுமை, சாதிப்பிரச்சனை, என்பனவாகும். யாழ்ப்பாண இளைஞன் சீதனம் கொடுப்பதற்காகவே படிக்க நிர்ப்பந்திக்கப்பட்டான். சீதனக் கொடுமை எங்கள் பண்புகளை அழிப்பதில் முதலிடம வகித்தே வந்துள்ளது. எது எப்படியிருப்பினும் இலங்கையில் தமிழர்களது நிலை மிகவும மோசமடைந்துள்ளது. இது மீள எடுக்கப்பட இன்னும் ஒரு நூற்றாண்டு செல்லலாம். ஈழம் கிடைத்தால் கூட அயலவர்களான சிங்கள, முஸ்லீம்களுடன் வேலி போட்டு நாம வாழமுடியாது. அவர்களுடனான உறவுகள மீண்டும் புதுப்பிக்கபட நூற்றாண்டுகள் செல்லலாம். அதாவது இந்த பாதிப்புகளை மறந்து இரண்டாவது தலைமுறையினரால்தான் அதனைச் செய்ய இயலும் என்று நினைக்கிறேன். இழந்த பண்புகளை பெற நீண்டகாலம் எடுக்கலாம். என்ன செய்ய முடியும் என்னால்?

**செய்திகள்**

## ருவண்டா கொலை வயல்

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் ஒற்றுமையாக இருந்த இரு இனங்கள 'ரட்ஸி', 'குட்சு' இனத்தவர்கள தமக்கிடையில் கலாச்சாரப் பாலம ஒன்றையும் அமைத்திருந்தனர். பெரும்பாலான ரட்ஸி இனத்தவர்கள கால்நடை வளர்ப்போர்கள். குட்சு இனத்தவர்கள் விவசாயிகள். பெல்ஜியத்தினரின் ஆக்கிரமிப்பின் பின்னர் இரு இனத்தவருக்கும் இடையில் இன வேற்றுமை உருவாக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தவரான ரட்ஸி இனத்தவர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். ருவண்டாவின மொத்த தேசிய உற்பத்தியில் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 500 அமெரிக்க டாலர்களே. 8.5 மில்லியன் சனத்தொகையில் சராசரி வாழ்வுக்காலம் 53 வருடங்களே. ருவண்டா மக்கள் சிலரின் கருத்துப்படி "எமது முரண்பாடு அடிப்படையில் இன முரண்பாடு இல்லை. மற்றும் சமத்துவம், முதலாளித்துவம் என்ற வேறுபாட்டில அல்ல. வறுமையை பங்கிடுவதற்கான போட்டியே" எனக் கூறுகின்றனர். இன வேறுபாட்டின் உச்சக்கட்டமாக ருவண்டா ஜனாதிபதி விமானக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இதனைத தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் 2.00,000 மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். எண்ணுக்கணக்கற்றோர் காயமுற்றனர். இலட்சக்கணக்கானோர் அகதி முகாம்களிலும் அன்னிய நாடுகளிலும தஞ்சம் புகுந்துள்ளனர். குட்சு தீவிரவாதிகள் முக்கிய பங்கு வகிக்கும் இப்போர் ஐ.நா படைகளின் தலையீட்டின பின்னரும் தொடர்ந்தது. அதே நேரம மிகக்குறைந்த எண்ணிக்கையான ஐ. நா படையினர் ருவண்டாவிலிருந்து எடுக்கப்பட்டு அதிக ஐ. நா படையினரின் எண்ணிக்கையுள்ள பொஸ்னியாவுக்கு மேலும் படையினர் சமாதானத்துக்காக அனுப்பப்பட்டனர். இடைக்கால குட்சு இனத்தவரது அரசாங்கமும், ஐ. நா படையினர் ஆகியோர் இப்போரை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானம் ஏற்படுத்துவார்களா என்பது கேள்வியே!

## தென்னாபிரிக்கா 224 ஆண்டுகளின் பின்னர். . . .

ஆபிரிக்கக் கண்டத்தின் வளம் கொழிக்கும நாடான தென்னாபிரிக்காவில் 224 ஆண்டுகளின் பின்னர் ஒளி பரவியுள்ளது. 1652ம் ஆண்டுடில் Jan Van Riebeeck Cap தீபகற்பத்தில் கிழக்கத்திய டச்சுக் கம்பனிக்காக ஒல்லாந்தர்கள் 1770—1870 காலப்பகுதியில் காலடி வைத்தனர். தொடர்ந்து பிரித்தானியரால் தென்னாபிரிக்கா ஆக்கிரமிக்கப்பட்டது.

இன்று தென்னாபிரிக்காவில் 75 வீதமானோர் கறுப்பினத்தவர்கள், 15 வீதமானோர் வெள்ளையினத்தவர்கள். 8 வீதமானோர் கறுப்பு வெள்ளை கலப்பினத்தவர்கள். 2 வீதமானோர் இந்தியர்கள் ஆவர். மொத்த சனத்தொகையினர் 40 மில்லியன் ஆகும்.

### தென்னாபிரிக்காவின் ஜனநாயகத்துக்கான போராட்டப் பாதையில். . .

1899— Boer பகுதியல பிரித்தானியர்களுக்கும், ஆபிரிக்கர்களுக்கும் இடையிலான போர்.

1912— A. N. C [The African National Congress]உருவாக்கப்பட்டது.

1960—பங்குனி Sharperille படுகொலை, பாதுகாவலர்களால் [police] 69 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்க அரசாங்கம் A. N. C மற்றும் விடுதலை அமைப்புகளை கொன்று குவித்தது.

1962—நெல்சன் மண்டேலா சிறையிலிடப்பட்டார். ஆனால் 1964 இல்தான் அவர் மீதான தீர்ப்பு வழங்கப்பட்டது.

1986 சித்திரை P. O. Botha வின அமைச்சரான Hendrik Coctsec சிறையிலுள்ள நெல்சன் மண்டேலாவைச சந்தித்தார்.

1990 மாசி F. W. De Klerk தேர்தலில வெற்றி. இதே ஆண்டில் நெல்சன மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

1991-A. N. C மற்றும் 17 அரசியல் கட்சிகளும் புதிய அரசியல் அமைப்பு சட்டத்துக்கான பேச்சுவார்த்தையில ஈடுபட்டன.

1994 சித்திரை—தென்னாபிரிக்காவின் முதல சகல இனத்தவருக்குமான தேர்தல் நடை—பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1994 மே — நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் முதல் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

**பழைய பாராளுமன்றம்**

வெள்ளையர்கள் — 178 ஆசனங்கள்.
கலப்பினத்தவர்கள் — 85 ஆசனங்கள்
இந்தியர்கள் — 45 ஆசனங்கள்
கறுப்பினத்தவர்கள் — 0

**புதிய பாராளுமன்றம்**

தேசிய சபை — 400 ஆசனங்கள்
ஒவ்வொரு தொகுதியிலும வெற்றிபெறுவோர் ஆசனங்களைப் பெறுவர்.
செனட்சபை — 90 ஆசனங்கள்

27 ஆண்டுகள் சிறையிலிருந்து வெளிவந்துள்ள நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக பதவியேற்றபின்னர் சந்திக்கவுள்ள பிரச்சனைகள் பல.

1. நிலப்பங்கீடு
2. 40 வீதமான வேலையற்றோரின பிரச்சனைகள்.
3. 50 வீதமான படிப்பறிவற்றோரிற்கான தீர்வு
4. Zulu-Inkatha Freedom Party போன்றவற்றுடனான முரண்பாடுகள்.
5. வலது சாரி வெள்ளையர்கள் கோரும தனித்தாயகம் பற்றியது. என்பன பிரதான பிரச்சனைகளாகும்.

தேர்தலின் பின்னர் முன்னாள் ஜனாதிபதியும புதிய பாராளுமன்றத்துக்கு வழிவகுத்தவருமான F. W. De Klerk பேசுகையில் "இன்று எம்மிடம் புதிய பாராளுமன்றம் உள்ளது. நிற வேறுபாடு மறைந்து விட்டது. சட்டத்தின் முன் நாம எல்லோரும் சமம். சிறுபான்மையோரின உரிமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. முதன் முதலாக கடந்த வாரம் அனைத்துத தென்னாபிரிக்கர்களும் பங்கு பற்றிய தேர்தல் நடைபெற்றது" எனத் தெரிவித்தார். A. N. C யின் நீண்ட பாதையில் ஒலிவர் காம்ப், ஹனி போன்றோரின் இழப்புகளின் பின்னர் முன்னிடத்தைப் பெற்றுள்ளது. கடந்தகால பாதையின் முட்கள் மீண்டும் தென்னாபிரிக்க மக்கள் மீது குத்தாமல் புதிய ஒளியை பரவவிடுவார்கள் என்ற நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும். தென்னாபிரிக்காவின் நிற ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் பிரதான மைல்கல்லைத் தாண்டிய மக்களின் போராட்டம் எதிர்காலத்தில் அம் மக்களின் வர்க்க வேறுபாட்டை ஒழிப்பதிலே முழுமை பெறமுடியும்.

## இப்பொழுதே இறந்துவிடு...!

மரணங்களால்
மகிழ்வுறும் மனிதன்
எங்கேனும் இருப்பின்
கணக்கிலிட்டுக் கொள்....

இங்கு
எத்தனை சடலங்களின்
நடனங்கள்
புதைகுழியின் பெயரால்
பூமியின் மேல் என்று!

காதுகளைச் சற்று
கூர்மையாக்கிக் கொள்
அந்தக் கட்டிடத்தின்
பின்பும் —
அந்த அலைகளின்
பின்பும் —
அந்த மலைகளின்
பின்பும் —
அந்த மரங்களின்
பின்பும் —
பெரிதாய் எழுகின்ற
மரண அவலமும்
ஒப்பாரி ஓலமும்
உனக்குக் கேட்கட்டும்

யாரிடம் இருந்து
யாருக்கு...?
இது
யாது பூமி?
யாது மண்?
உன்னது?
என்னது?

ஒரு கலிங்கமும்
குருஷேத்திரமும் போதாதா
மரணங்களால்
மகிழ்வுறும்
மனிதா உனக்கு?
சாவுகளைக் கூட
வீரம் என்றும்
கோழை என்றும்
தரம் பிரித்தவனே
உன்னால்
புதைகுழியின் தலையில்
துளிர்கின்ற
புற்களுக்கும்
உவமானம் உவமேயம்
உரைப்பாயா?
நீ உரைப்பாய்...!

வாசமே இல்லாத
வாகைபனி பூவிற்கு
வெற்றிக்கு நிகராய்
இலக்கியத்தில்
இடம் கொடுத்தவனல்லவா நீ!
சமாதிகளை கோவில்களாவும்
சன்னதிகளை சமாதிகளாகவும்
மாற்றிவிடும்
சக்தி கொண்ட
பரணிபாடும்
பாட்டுக்காரர்களே...

உங்கள்
எழுதுகோலைத் தூக்கி
அடுப்பில் போட்டுவிட்டு
நீங்கள்
பரணில் ஏறி படுத்துவிடுங்கள்.....

உங்களால்தான்
மனிதமிங்கு
மாகபடிந்து
பொலிவிழந்து போனது....
காவு கொடுத்துவிட்டு
" சாவுகளை
சரித்திரம் சொல்லும்"
என்னும் நீங்கள்
ஒருநாளைக்கேனும்
உங்கள் இதயத்தை
அறுவைச் சிகிச்சைக்கு
உள்ளாக்குங்கள்
உணர்வுகளை மயங்கடிக்காமல்.
அதற்கு அப்புறம்
ஓய்வான ஒரு நாளில்
அறுத்த ஆயுதங்களுக்கு
பூஜை பண்ணுங்கள்......
மனிதனை விட
மண்ணே உனக்கு பெரிதென்றால்
இப்போதே நீ
மரணித்துப் போய்விடு!
மண்ணுக்கு உரமாகிவிடு!

உன் இறப்பால்
இரக்கமுள்ள எந்த
மனிதனும் அழக்கூடும்
ஆயினும்
நான் சிரிப்பேன்.......

பெரிதாய்......
மிகமிகப் பெரிதாய்
அண்டமுழுதும்
ஒலிக்கின்றமாதிரி
நான் சிரிப்பேன்.....!

சக்கரவர்த்தியின்
தொகுதியிலிருந்து




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை.

# இருண்ட வெளிச்சங்கள்



மழை மேகங்களோடு கூடிய ஆவணி
மாத வெயில் வெள்ளித்தகடுகள் போல்
மின்னிக்கொண்டிருந்தது.
ஊரெங்கும் ஒரே அமைதி
கடல்மேலே பீரங்கிக்கப்பல் மாத்திரம் ஓடும்
சத்தம் கேட்கிறது.
சில நிமிடங்கள், சத்தம் நின்று விட்டது.
தரையை நோக்கி பீரங்கிக்குண்டுகள்
பாய்கின்றன. மக்களிடையே
பயத்தோடுகூடிய அழுகுரல்கள்.
பீரங்கிச்சத்தம் நின்றுவிட்டது.
இயந்திரப்படகு ஒன்று கரையை நோக்கி
ஓடிவருவது தெரிகிறது. கரைக்கு மிக
அண்மையில் வந்துவிட்டது.
யாரும் எதிர் பார்க்கவில்லை.
தரைப்பக்கத்திலிருந்து துப்பாக்கி வெடிகள்.
"சட் சட்"
"பட் பட்"
கடற்கரை தென்னை மரத்தடியின் கீழ்
படுத்திருந்தவர்களிடமிருந்து ஒரு சத்தம்
"டேய் கரைக்கு வந்துவிட்டாங்கள்"
"வையுங்கோ வெடி"
வந்தவர்களில் ஆறு பேர் பொத்தென்று
கடலுக்குள் விழுந்து விட்டார்கள்.
இரண்டு பேர்மாத்திரம் படகில்
தப்பிவிட்டார்கள்.
கடல்ப் பீரங்கிகள் மீண்டும் கரையை
நோக்கி பாய்கின்றன.
மக்கள் கையில் அகப்பட்டதோடு
ஓடுகின்றார்கள்.
பிரதான வீதியில் நின்றவன் கத்தினான்
"பருத்தித்துறை பக்கத்தால 'ட்றக்'
வண்டிகள் வாற சத்தம் கேட்குது
ஒருத்தரும் இங்க நில்லாதேங்கோ,
வதிரிப்பக்கம் ஓடிப்போங்கோ"
ராணுவ 'ட்றக்' வண்டிகள் மிக
அண்மையில் வந்து விட்டன.
கடல் பீரங்கிகள் ஓய்ந்து விட்டன.
சில நிமிடங்கள். . . .
வீதியெங்கும் ஒரே துப்பாக்கி வெடிகள்
வானத்தை பிளக்கிறது. ஒரே வெடிச்சத்தம்.
சில நிமிடங்கள். . . .
கடற்கரைப் பகுதிகள் எங்கும் ஒரே
தீச்சுவாலைகள் வானத்தை
நோக்கிப்பறக்கின்றன.
துப்பாக்கி வெடிகள் ஓய்ந்து விட்டன.
—வானம் புகைமண்டலமாகிவிட்டது.
ஓடிவந்தவர்களில் பலர் அந்த
பனங்கூடல்களைத் தாண்டிவிட்டார்கள்.
வந்தவர்களில் பலர் அந்த
பனைமரநிழல்களில் நின்றுவிட்டார்கள்.
எல்லோர் கண்களும் கடற்கரையை
நோக்கியவண்ணம். . .
ஒரே புகையுடன் கலந்த தீச்சுவாலைகள்.
இவர்களில் சற்று வயது போன ஒருத்தி
புகைமண்டலத்தை பார்க்க முடியாமல்
தன்னோடு நின்ற ஒருத்தியை காட்டி
ஒப்பாரி வைக்கத்தொடங்கிவிட்டாள்.
"இந்த சிங்கள ஆமிக்கு நாங்கள் என்ன
செய்தனாங்கள். என்ர பேரப்பிள்ளைக்கு
முந்தநாள்தான் கலியாணம் முடிஞ்சது.
எல்லாத்தையும் அந்த இடத்தில விட்டிட்டு
வந்திட்டம். எல்லாம் எரிச்சு
சாம்பலாக்கிறாங்கள்"
"எங்களை எல்லாம் நிம்மதியாக
இருக்கவிடுறாங்களில்லை"
"நாங்கள் அப்பிடியும், இப்பிடியும்
தண்ணியிலே உழைச்சது நெருப்போடு
போகுதுஎப்பிசி"
"ஐயோ. . . ஐயோ. . ."
"என்ரை கந்தவனத்தானே. . உனக்கும்
கண்ணில்லையோ . . ."
பாம்பட்ட கடவுள் பார்த்துக்கொண்டு
நிற்கிறான். நிலத்தில் புரண்டு ஒப்பாரி
வைக்கிறாள். அவளோடு சேர்ந்து கூடவே
பல பெண்கள் கவலை தாங்காது
அழத்தொடங்கிவிட்டனர்.
பலரின் நெஞ்சங்களில் ஏக்கம், பரிதவிப்பு
. . . அமைதி
இன்னும் குழந்தைகளின் அழுகுரல்கள்
கேட்கின்றன. சனங்கள் பனங்கூடலை
நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

இரண்டு இளைஞர்கள் இவர்களை நோக்கி
சைக்கிளில் மிக வேகமாக வந்து
இறங்குகிறார்கள். சைக்கிளில் இருந்தவாறே
"அண்ண, கடலில் இருந்து 'ஷெல்'
அடிச்சு எங்களின்ர இடத்தில இரண்டு பேர்
சரி. இங்க ஒருத்தரும் நில்லாமல் வைரவர்
கோயிலடிக்கு போங்கோ. அங்க
எல்லாத்துக்கும் வசதி. ஆமியள் வந்தாலும்
வேற இடத்துக்கு ஓடித்தப்பலாம். தயவு
செய்து இங்க நிற்கவேண்டாம். அவர்கள்
சற்று உரக்க சொல்லி முடிப்பதற்குள் பலர்
ஓடத்தொடங்கிவிட்டனர். சிலர் இழுபறி,
போவதற்கு தயக்கம். வந்தவர்களில் காந்தன்
மாஸ்ரரும் ஒருவர். வெளியிடத்திலிருந்து
வந்து அந்த ஊர் சம்மாட்டியாரின் மகளை
சீதனத்திற்காக திருமணம் செய்து
கொண்ட ஓர் பட்டதாரி ஆசிரியர்.
யாழ்ப்பாணத்து பழக்கவழக்கங்களை நன்கு
கரைத்து குடித்ததோடு அதில் நன்கு
இறுக்கப்பட்டவரும்கூட. அங்கே வந்த
இளைஞர்கள் கூறியது அவருக்கு சற்று
பிடிக்கவில்லை போலும்.
"இஞ்ச பாருங்கோ நாங்கள் அவங்களின்ர
கோயிலடிப்பக்கம் போறது அவ்வளவு
நல்லாயில்ல, போனால் சாப்பிட வேணும்.
தண்ணிகுடிக்க வேணும். ரெண்டு, ஒரு
நாள் கஸ்டத்துக்காக வாய்வைக்கப்போனால்
நாளைக்கு நாங்கள் பெண்டில்
பிள்ளையளோடை போகேலாது. நாளைக்கு
இவங்கள் எங்களை மதிக்கமாட்டான்கள்.
நாங்கள் எதுக்கும் உடையார் வளவுக்கு
போனால்தான் பலதுக்கும் நல்லது.
எங்களின்ர இஷ்ரப்படி செய்யலாம்" என்ற
ஒரு சொற்பொழிவை நிகழ்த்தி முடித்தான்.
அவரை ஆதரிப்பது போல சிலர்
அவருடன் புறப்பட தயாரானார்கள். வந்த
அகதிகள் இரண்டு அணிகளாக கிழக்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குமாக புறப்பட்டு செல்கிறார்கள். வந்த இரண்டு இளைஞர்களும் இமை வெட்டாது இவர்களை பார்த்து கொண்டு நிற்கிறார்கள்.

தூரத்தே ஒரு பெண் தள்ளாடியபடி கைக்குழந்தையுடன் வருவது. வந்தவனின் ஒருவனான சிவனுக்கு தெரிந்து விட்டது. சைக்கிளில் மிக வேகமாக அவளை நோக்கி சென்றுவிட்டான். அவளை கைத்தாங்கலாக பிடித்தான். அவள் எதிர்பாராத வகையில் அவனின்மேல் மயக்கமுற்று விழ்ந்து விட்டாள்.ஒரு கையில் குழந்தையும் மறு கையில் அவளுமாக இருந்ததால் மற்றவனை உதவிக்கு அழைத்தான்.
மச்சான் பெட்டை இரண்டு மூன்று நாள்தான் பிள்ளை பெத்திருக்குது. ஓடி வந்திருக்கு அதுதான் ஒரே இரத்தம்"
கால்களால் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.
"எனக்கெண்டால் ஒன்றும் தெரியேல கோயிலடிக்குகொண்டு போறதுதான் நல்லது"
அவளை ஆரெண்டு எண்ணி பார்க்க இவங்களுக்கு நேரம் போதவில்லை. அவளை தூக்கி கோயிலடிக்கு கொண்டு வந்து விட்டான்கள்.
"இந்த பெட்டையை ஆரெண்டும் தெரியாது. யாரும் சொந்தகாரர் இருந்தால் சொல்லுங்கோ? பாவம் மயங்கி விழ்ந்து போச்சுதுஎஎ
சூழ்ந்து நின்ற ஒருத்தி
"இவள் பெட்டை ரீ.வி கார தருமன்ர பெண்டில். நேற்றுத்தான் பிள்ளை பிறந்து ஆசுப்பத்திரியால வந்தது பாவம். பச்சைப்புண். அதுதான் எங்கோயோ இரத்தம் வருகுது பாவம். சாப்பிட்டதோ தெரியாது பாவம். பிள்ளை பெத்தவள் கொஞ்சம் கோப்பி குடுங்கோ சுகம் வரும்"
அனுபவத்தோடு சொல்லி முடித்தாள்.

தூரத்தே யாரோ ஒருவன் ஒரு பெட்டியை துக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வருவது தெரிந்தது. கிட்ட வந்தவனை எல்லோரும் வியப்போடு பார்க்கிறார்கள். அது வேறுயாருமல்ல ரீ.வி கார தறுமன்தான். அவன் கொண்டு வந்ததும் ரீ.வி யும் டெக்கும் தான். பார்த்தவர்கள் பலருக்கும் இவனை கடுமையாக பேச வேணும் போலிருந்தது. ஆனால் சஞ்சலத்தோடு இருந்ததால் ஒருவரும் கதைக்க முனையவில்லை.
இருந்தவர்களில் ஒரு வயோதிபருக்கு இவனின் செய்கை பிடிக்கவில்லை போலும்.
"இவனுக்கு ஆர் செத்தாலும் சரி. ஊர் அழிஞ்சாலும் சரி படம் ஓடினால் போதும். சனங்கள் உயிரை கையில பிடிச்சுக்கொண்டு உயிர் தப்பினது போதும் எண்டு ஓடி ஒழிஞ்சு திரியுதுகள். இவன் பாவி பிள்ளை பெத்தவளுக்கு மாறிகட்ட ஒரு துணியும் கொண்டு வராமல் என்ன கொண்டு வந்தான் பாத்தியளே இவனை என்ன செய்யறது சொல்லுங்கோ"
ஆத்திரத்தோடு கூறி முடித்தான்.
வந்தவன் களை தாங்காது கொண்டு வந்த பெட்டியின் மேல் இருந்து விட்டான். எப்படியும் இன்றைய இரவுக்கு ஒரு படம் பார்க்க வேண்டும் என்ற நினைவுதான் அவனின் நெஞ்சத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

காந்தன் மாஸ்ரருடன் ஊரில் உள்ள சிலரும் உடையார் வளவு வீட்டிற்குள் வந்து விட்டார்கள். பழைய நாற்சதுர வீடு. தென்னையும் கமுக மரங்களும், பழைய மல்லிகை மரங்களும் அவரின் பழமைக்கு சான்றாக காட்சி கொடுத்துக் கொண்டிருந்தன. உடையாரின் மருமகன் சோமசுந்தர முதலியார் சாய்மனை கட்டிலில் படுத்திருந்தவாறே வெளியே உற்றுப்பாத்துக் கொண்டிருந்தார். வந்தவர்களையெல்லாம் நோட்டம் விட்டார்.
"எட தம்பிமார் ஏன் ஓடி ஒழிஞ்சு நிக்கிறியள். என்ன நடந்தது. எனக்கும் விளங்கசொல்லுங்கோ" என்று அனுதாபத்தோடு கேட்டார்.
"ஒன்றுமில்லை பாருங்கோ கடலாலை நேவிக்காரன் இறங்கி வந்தவங்கள். வந்தவங்களை பொடியங்கள் சுட்டுப்போட்டான்கள். அதுதான் பருத்தித்துறை காம்பில ஆமிக்காரன் வந்து எங்கடை வீடு வாசலை எல்லாம் எரிக்கிறாங்கள். நாங்கள் எல்லாம் வெறுங்கையோட ஓடி வந்திட்டம். முழுக்க சாம்பலாயிருக்கும்"
அழாக்குறையாக கடற்கரைப் பக்கம் பார்த்து காந்தன் மாஸ்ரர் சொல்லிமுடித்தார்.
"உயிர்சேதம் இல்லையோ" மீண்டும் சோமசுந்தரத்தாரின் கேள்வி
"சரியாகத்தெரியாது. துவக்கு வெடியள் கேட்டவுடன் நாங்கள் ஓடி வந்திட்டம். அவங்கள் போனால்தான் ஆர் ஆர்



செத்ததெண்டு தெரியும்.
"எக்கச்சக்கமாக முடித்திருப்பாங்கள் எண்டுதான் நம்பவேணும். இப்ப அந்தப்பக்கம் போகமுடியாது போலகிடக்கு"
அவரைப்பார்த்து இன்னொருவன் கவலை தாங்காது சொல்லிமுடித்தான்.
"இனிமேல் என்ன செய்யிறது. அவங்களோட சேட்டைவிட்டால் இதைத்தான் செய்வாங்கள். அவங்கள் ஐம்பத்திஆறில செய்தது எனக்கு இப்ப எண்டமாதிரி கிடக்கு. எல்லாம் எங்கடை தலைவிதி. நடக்கிறதை கண்டுகொள்ள வேண்டியதுதான்"
"சரி சரி நீங்கள் எல்லோரும் ஓடிவந்து களைச்சுப்போனியள். தேத்தண்ணி வரும் எல்லாரும் குடிச்சுப்போட்டு, பிறகு சாப்பிட்டு இரவுக்கு இந்த திண்ணையிலும் கோடிப்பக்கத்திலும் படுக்கலாம். ஆமிக்காறன் இந்த ஒழுங்கைப்பக்கத்தால வரமாட்டான்கள்" என்று ஆறுதல் கூறினார்.

வெய்யில் இன்னும் தணியவில்லை. வந்தவர்களின் பதட்டமும் நடுக்கமும் மாறவில்லை. பசியும் தாகமும் அவர்களை வாட்டியது. சிலருடைய கண்கள் உடையாரின் குசினிப்பக்கமே அலசிக்கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடையாரின் பேத்தி உள்ளேயிருந்து கொஞ்ச சோடாப்போத்தல்களுடன் வருவது தெரிந்தது. வந்தவள் நின்றவர்களின் கைகளில் போத்தல்களை கொடுக்கின்றாள். வாங்கியவர்கள் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். போத்தல் அரைவாசிக்கு தேனீர். வாங்கியவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து கண்களால் கேள்வி எழுப்புகின்றனர். மீண்டும் தேனீர்ப்போத்தல்கள் வருகின்றன. இம்முறை காந்தன் மாஸ்ரரின் கைகளுக்கு வந்துவிட்டது. பெரிய மனப்பாரத்தோடு வாங்கிவைத்துக்கொண்டு கூட்டத்தவர்களை நோட்டமிட்டார். அவர்களில் ஒருவன் கோபம் தாங்காது மாஸ்ரரை நோக்கி பேசத்தொடங்கிவிட்டான்.

"நாங்களெல்லாம் படிச்சவன் எண்டு எண்ணி உன்ர சொல்லை கேட்டு கோயிலடிக்கு போகாமல் இஞ்சவந்தனாங்கள். நீ பெரிய மனிஷன் வீடெண்டு சொல்லி கூட்டி வந்து தேத்தண்ணி தெரியாதெண்டு ங்களுக்கும் தாறாங்கள். இது நாளைக்கு வெளியிலே தெரிஞ்சா காறிதுப்பப்போறாங்கள். தமிழனுக்கு தமிழன் இப்படிசெய்ய சிங்களவன் செய்யிறது என்ன பிழையோ? இதைவிட ஆமிக்காறங்களிட்டை சூடு வாங்கி செத்திருக்கலாம். உனக்குப் பின்னால வந்தது எங்கடைபிழை. இனிமேல் இஞ்சை இருந்தால் நாயைவிட மோசமாய்த்தான் இருக்கும்.

வாறனியள் வாங்கோ! . .
"நாங்கள் வைரவர் கோயிலடிக்கு போனால்த்தான் எங்கட சனங்களோட இரவுக்காவது சாப்பிட்டு நிம்மதியாக படுக்கலாம்"
அவன் ஆவேசத்தோடு சொல்லிமுடித்தான். தேனீர் போத்தல்கள் உடையும் சத்தம் கேட்கின்றது. அவர்கள் கோயிலடி நோக்கி புறப்பட்டுவிட்டார்கள்.
காந்தன் மாஸ்ரர் மௌனமாக அவர்களையே பார்த்துக்கொண்டு நிற்கின்றார்.
சில தேனீர் போத்தில்கள் மண்ணில் படுத்தவாறே அவரைப்பார்த்து சிரிக்கின்றன. ஏன்? . . . .

இது ஏனென்று மாஸ்ரருக்கு தெரியவில்லை

கே.பி.லிங்கம்

## 1993 ஆரம்பத்திலிருந்து இலங்கையின் மனிதஉரிமை மீறல்களை அவதானித்த சகல நாடுகளின் மன்னிப்புச்சபையின் அறிக்கை. (Amnesty International)

1. இக்காலகட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தேவையற்ற காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் வழக்கு தாக்கலின்றி இரண்டு வருடங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் பணயக் கைதிகளும், அரசியல் கைதிகளும் அடங்குவர். காவலில் துன்புறுத்துதலும், சித்திரவதைகளும் தொடர்ந்தன. காணாமல் போன 25 வயதுக்கு மேற்பட்டோர் பற்றியும் இன்னும் புலனாகவில்லை. நீதியற்ற கொலைகள் வடகிழக்கு, தெற்கு ஆகிய இரு இடங்களிலும் நடைபெற்றுள்ளன. ஆனால் இவை முன்னைய வருடங்களை விடகுறைவே. தெற்கிலுள்ள எழுத்தாளர்களுக்கும் கொலை எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் தொடர்வதாக அறிக்கைகள் கூறுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளும் தங்கள் வசமிருந்த பல கைதிகளின் நிலைபற்றி அறிவிக்கவில்லை. இவர்களில் சிலர் கொல்லப்பட்டதாக அறிகிறோம்.

அரசாங்கம் நாட்டில் மனித உரிமைமீறல்களை குறைப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் இம்மீறல்களை நீண்டகால எல்லைக்குள் அடக்குவதற்கு பெரும்தடங்கல்கள் இருந்தன. கடந்த வருடங்களில் மனித உரிமை மீறல்களை மீறிய படையினர் மீது குற்றம் சுமத்துவதில் சில முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டது. மனித உரிமை பாதுகாப்பு சமபந்தமாக பிற நாடுகளுக்கு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை.

**2. பின்னணி**

93 வைகாசி மாதம் கொழும்பு தலைநகரில் ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாச ஓர் தற்கொலை குண்டால் கொலையுண்டார். இது புலி உறுப்பினரால் நடாத்தப்பட்டதாக இருக்கும் என சில அதிகாரிகள் கூறினர். இதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் 'சுதந்திர ஐக்கிய முன்னணி தலைவர் லலித் அத்துலத் முதலி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கொல்லப்பட்டார். ஜனாதிபதியின் மறைவின் பின்னர் டிங்கிரிபண்டா விஜயதுங்கா பதில் ஜனாதிபதியாவிருந்து ஒரு கிழமைக்குப் பின் அப்பதவியில் ஜனாதிபதியாக உறுதிப்படுத்தப்பட்டார். வடகிழக்கு பகுதிகளைவிட ஏனைய மாகாணங்களில் வைகாசி மாதம் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்றன. நடைபெற்ற ஏழு சபைகளில் நான்கில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றியீட்டியது. மக்கள் முன்னணி மேல்மாகாணத்தில் அமோக வெற்றியீட்டியது. ஏனைய இரு மாகாணங்களிலும் எதிர்கட்சிகளான மக்கள் முன்னணியும், சுதந்திர ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து மேலதிக ஆசனங்களை கைப்பற்றின. 1993இன் வருட இறுதியில் தெற்கு மாகாணசபை கலைக்கப்பட்டு புதியவாக்கெடுப்பு நடக்கவிருக்கிறது.

அரசபடையினருக்கும் புலிகளுக்குமிடையே வடக்கு கிழக்கில் ஆயுதப்போர் தொடர்கின்றது. 93ம் ஆண்டின் பின்னைய அரைவருடக்காலப் பகுதியில் ஆயுதப்போர் வேகமடைந்தது. இருதரப்பினருக்கும் அத்தோடு பொதுமக்களுக்கும் பலத்த உயிர்ச்சேதம் விளைவிக்கப் பட்டது. வடக்கின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலும், கிழக்கின் கட்டுப்பாடு நிச்சயமற்றுமிருந்தது. சிங்கள, முஸ்லீம், தமிழ்மக்கள் வாழும் கிழக்கில் தற்போதைய வருடங்களைவிட அதிக இனக்கலவரங்கள் எப்போதுமே மக்களை தாக்கவில்லை.

3. படையினரின் மனித உரிமை மீறல்கள்
1—காரணமின்றி கைதுகளும், தடுப்புக்காவல்களும் பற்றிய அறிக்கை.
கொழும்பில் தமிழ்மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுமறியாத அப்பாவிகள் உட்பட காரணமின்றி தமிழ்இனத்தவர் என்றதனாலேயே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சீருடை அணியாத அதிகாரிகளால் நடுநிசியில் கண்மூடிக்கட்டப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டு வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். பலர் வழக்கத்துக்குமாறாக பலநாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேளைகளில் கைலஞ்சங்களும் வாங்கப்பட்டன. சிலர் நீதிபதிகள் முன்னர் நிறுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அல்லது தடுத்து வைக்கப்பட்டனர். ஆனால் இவர்கள்மீது ஒரு குற்றமும் காவல்துறையால் சுமத்தப்படவில்லை. 93 ஆனியில் அரசாங்கம் அரசியல் கைதிகளுக்கு கைதுசெய்தபின்னர் பாதுகாப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்தது. இப்பாதுகாப்புகளின் கீழ்கைது செய்யப்படுபவர்களின் உறவினர்களுக்கு கைது பற்றி அறிவிப்புது என்பதும் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இது நிறைவேற்றப்படவில்லை.

பிராந்திய தேர்தல்களின் பின் முடுக்கிவிடப்பட்ட கைதுகள் வருடக்கடைசிவரை நீடித்தது. லலித், பிரேமதாச கொலை விசாரணையினாலும் புலிகளின் தற்கொலைப்பிரிவினர் நகரத்தினுள் ஊடுருவியதாலும் வேகமடைந்த கைதுகளில் காவல்துறையினர், பாதுகாப்பு படையினர், அரசுடன் இணைந்த ஆயுதம் ஏந்திய தமிழ்குழுக்கள்(புளட் உட்பட) இணைந்ததாக அறியப்படுகிறது.

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட சில கைதிகள் கிழக்கில் மட்டக்களப்பு காவல்துறையினரது கண்காணிப்பில் காணப்பட்டனர். உதாரணமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரது மெய்பாதுகாப்பாளராக கடமையாற்றிய சின்னத்தம்பி மேகானந்தன் 10. 11. 93 அன்று கொழும்பு மத்திய பேரூந்து நிலையத்திலிருந்து சீருடையற்ற காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு ஜீப் வண்டியில் கொண்டு செல்லப்பட்டார். இவர் ஒரு கிழமைக்கு முன்னர் கைது செய்யப்பட்டு ஒரு குற்றத்தாக்கலுமின்றி விடுவிக்கப்பட்டார். தடுப்பு காவலிலிருந்த போது தாக்கப்பட்டிருந்ததினால் அவர் உடம்பெங்கும் காயங்களும், பாதங்களில் எரிகாயங்களும் காணப்பட்டன. அவர் தனக்கு கைப்பெருவிரல்களில் மின்சாரத்தாக்கம் செய்யப்பட்டதாக கூறினார். அவரை விடுவிக்கும்போது தடுப்புக்காவலில் எதுவித தீங்கும் விளைவிக்கப்படவில்லை என கைசாத்திடும்படி நிர்ப்பந்தித்ததாக கூறினார்.

பாதுகாப்பு படையினரோடு இணைந்து (ஈ. பி. டி. பி) தமிழ் ஆயுதக்குழுவான ஈழ மக்கள் சுதந்திரக்கட்சி இவ்வருட முற்பகுதியில் பலரை நியாயமற்ற முறையில் தடுப்புக்காவலில் வைத்திருந்ததாக அறியப்பட்டுள்ளது. இக்குழுவின் முன்னைய ஆதரவாளரான தருமலிங்கம் செல்வகுமார் தைமாதம் கொழும்பில் ஓர் விளையாட்டு கழகத்திலிருந்து கடத்தப்பட்டு ஈ. பி. டி. பி கொழும்பு தலைமையகத்தில் ஐந்து நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டார். அங்கு பல சிங்களவர்களும், தமிழர்களும் தடுத்துவைத்து தாக்கப்பட்டதாகவும் கூறினார். அவர் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு 12 நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். காவல்துறையினரும், ஈ. பி. டி. பி யினரும் தமது அடிப்படை உரிமைகளை மீறியதாக உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்ததற்காக அடிக்கடி அவர் உயிருக்கு பகிரங்கமான மிரட்டல்கள் கிடைத்ததாக கூறினார். கிழக்கில் எக்காரணமுமின்றி பாதுகாப்பு படையினராலும் அவர்களோடு இணைந்த தமிழ் ஆயுதக்குழுக்களினாலும் கைது செய்யும் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. ஆனால் இவை முன்னைய வருடங்களைவிடகுறைவே.

நூற்றுக்கணக்கான மக்களை அடிக்கடி பாதுகாப்பு படையினர் முகமூடி அணிந்த ஆள்காட்டிகள் முன்நிலையில் வரிசையாக நிறுத்தி குற்றம் புரிந்தோரை அடையாளம் காட்டும்வண்ணம் செய்தனர். இதன் விளைவாக பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். அனேகமானோர் ஒரு கிழமைக்குள் விடுதலை செய்யப்பட்டனர். மிகுதியினர் புலிகளுக்கு உதவினர் என்ற காரணம் காட்டி தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் சிலர் அவசியமற்ற வகையிலும், பலர் நீண்டகாலத்திற்கும் தடுத்து வைக்கப்பட்டனர்.

பல எதிர்கட்சிகளின் ஆதரவாளர்களும் முக்கியமாக DUNF ஆதரவாளர்களும் தெற்கு பிராந்திய தேர்தலின் முன்னர் காரணமற்ற கைதிகளாக குறிப்பிட்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்பட்டனர். 28 DUNF ஆதரவாளர்கள் சித்திரைமாதம் சுவரொட்டிகள் ஒட்டியதற்கும் பிரசுரங்களை விநியோகித்ததற்கும் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டனர். மறுநாள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கண்டியிலும் மாத்தறையிலும் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் சுவரொட்டி ஒட்டியதற்கும், பள்ளி அபிவிருத்திசபை கூட்டத்திற்கு எதிராகவும் சமாதான ஆர்ப்பாட்டம் செய்ததற்கும் குறிப்பிட்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்பட்டனர். 1987—90 களில் நடைபெற்ற ஜே. வி. பி கிளர்ச்சியில் பங்காற்றிய சிங்கள மக்கள் கைதாகி தொடர்ந்து தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவற்றின் சரியான எண்ணிக்கை இன்னமும் அறியப்படவில்லை.

2348 பேர் அவசரகாலசட்டத்தின் அல்லது கிளர்ச்சி சட்டத்தின்கீழ் ஆவணி 93 வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆதாரம் உண்டு. இவற்றில் 338 பேர் தடுப்பு காவல்களிலும், 518 பேர் புனருத்தாரண நிலையங்களிலும், 1092 பேர் மறியற்சாலைகளிலும், 400 பேர் காவல் துறைநிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். காவல்துறை தடுப்பு நிலையங்களில் இருப்பவர்களில் அனேகமானவர்கள் தமிழர்களும், புனருத்தாரண நிலையங்களில் அனேகமானவர்கள் சிங்களவர்களும் இருக்கின்றனர். மறியற்சாலையில் 889 தமிழர்களும், 203 சிங்களவர்களும் இருந்தனர். பாதுகாப்பு படையினரின் தடுப்பிலுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கணிப்பு தெரியவில்லை.

காவல்துறை சிறைச்சாலையில் மாத்திரம் 464 தமிழர்கள் வழக்கு தாக்கலின்றி 32 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மறியற்சாலைகளிலம், தடுப்பு முகாம்களிலும் பல சிங்களவர்கள் 2 வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எம். ஜி. பாலித என்னும் சிங்கள நபர் 87 கார்த்திகை பொலநறுவையில் கைதாகி 35 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை காரணமின்றி தடுத்து வைத்ததற்காக வைகாசி மாதம் மேல்நீதிமன்றம் 17,500 ரூபா நட்டஈடாக வழங்கியது. மீள்விசாரணை நீதிமன்றம் சில ஆட்கொணர்வு வழக்குகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்ட கைதிகளை விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. உதாரணம் 'பலில் அந்தோனி' பங்குனி நீதிமன்றத்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுவிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவர் மீண்டும் 90 மார்கழியில் மட்டக்களப்பில் கைதானார். வடகிழக்கு பிரச்சனை காரணமாக தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் முதன்முறையாக புனருத்தாரணத்திற்காக விடுவிக்கப்பட்டனர். குறைந்த பட்சம் 40 பேர் அளவில் ஆவணியில் அப்பணிக்காக விடுவிக்கப்பட்டனர்.

**2— சித்திரவதை, துன்புறுத்தல், காணாமல் போதல், அதிகாரமற்ற கொலை.**

வடகிழக்கில் அரசியல், மற்றும் கொலைக்கைதிகளுக்கு சித்திரவதை, துன்புறுத்துதல், தீவிர தாக்குதல், என்பன தொடர்ந்தும் அதிகரிக்கின்றன. வடகிழக்கில் 25க்கு மேற்பட்ட திடீர்மறைவுகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. 93 மாசியில் மட்டக்களப்பு "வானாறு" பகுதியில் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்ட 16 பேர் காணாமல்போனார்கள். இந்த காணாமல் போனவர்கள் பற்றி படையினர் உள்விசாரணை நடத்துவதாக கூறியும் இவ்வருடக்கடைசிவரை எந்தவித அறிவுறுத்தல்களும் இல்லை. இதற்காக ஐப்பசியில் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்காக பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு நடாத்தப்பட்டது. இதன் முடிவும் கிடைக்கப்பெறவில்லை. காவல்துறையினர் மன்னாரில் பேருந்திலிருந்து இறக்கிக் கூட்டிச்சென்ற 3 ஆண்களைப்பற்றி எதுவுமே தெரியாது.

ஆவணி மாதம் கொழும்பில் மோதரையில் ஒரு பிரேதம் டயரின்மேல் எரிந்த நிலையில் காணப்பட்டது. இதனால் இப்பாணியில் திரும்பவும் கொலைகள் நடைபெறுமோ என்ற பீதி ஏற்பட்டுள்ளது. அவ்விடத்தில் காணப்பட்ட பிரசுரத்தின்படி அச்சடலம் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சித்த புலி உறுப்பினரது என காவல்துறையினரால் உரிமை கோரப்பட்டுள்ளது. ஆவணியில் மேலும் இரு பிரேதங்கள் கண்கள் கட்டப்பட்டு, தாக்குதல் காயங்களுடனும், தலையில் சூட்டுக்காயங்களுடனும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றின் விசாரணையின் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

வடக்கே பல மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கிளாலிப்பாதையில் பயணிக்கும்போது கொல்லப்பட்டுள்ளனர். 92 ஐப்பசி மாதம் அவசரகால சட்டத்தின் கீழ் தடைவலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட இக்கிளாலிப்பாதையே பிரயாணத்திற்குரிய ஒரே வழி. இவ்வேரியை கடக்கும் படகுகள் இலகுவில் தாக்குதலுக்குள்ளாகின்றன. கடற்படையினரும் சில தடவைகள் படகுகளில் ஏறி அப்பாவி பொதுமக்களை கொன்றிருக்கிறார்கள்.

மற்றும் மறு எதிர்ப்பு குண்டு வீச்சுகளின் போதும் பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கார்த்திகை 13 இல் இரண்டு ஆகாயப்படையினரின் விமானங்கள் யாழ்நகரத்திலிருக்கும் புனித தேவாலயத்தின் மேல் குண்டுமாரி பொழிந்ததால் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 30 பேரக்கு மேல் காயமுற்றனர். குண்டு, ஷெல் தாக்குதல்களின் போது மக்கள் சரண்புகும் இடம் எனத்தெரிந்திருந்தும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் கூறுகின்றனர். இதற்கு இரண்டு நாட்களின்முன் பூனகரி படைத்தளத்தில் புலிகள் 450 படையினரை கொன்றதற்காகவே இப்பிரதிபலிப்பு என்று நம்பப்படுகின்றது.

புலி அங்கத்தினர் சிலரை கைப்பற்றிய பின் அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்காவிடினும் அவர்களை கைது செய்யாமல் படையினர் கொன்று இருக்கிறார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. உதாரணமாக களுவான்கேணி கிராமத்தில் அரசபடையினரோடு இணைந்து செயற்படும் ரெலோ ஆயுதக்குழுவினரால் கண்காணித்த பின்னர் படையினரால் இரு கிராமவாசிகள் சுட்டக்கொல்லப்பட்டனர். இவ்விருவரும் புலிகளுக்கு வரிவசூலித்தனர் என்று கருதப்படுகின்றது.

மகரை சிறையில் ஜே. வி. பி என்று கருதப்பட்டு தடுப்புகாவலில் இருந்த ஐவர் சிறைக்காவலர்களால் கொல்லப்பட்டனர். அவர்களின் கொலையில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் தப்பியோட முயற்சித்த போது சுடப்பட்டனர் என்று அதிகாரிகளால் கூறப்பட்ட போதும் ஏனைய அறிக்கைகளில் அவர்களின் பிரேதபரிசோதனையின்படி இவர்களின் கால்கள்கட்டப்பட்ட நிலையில் மழுங்கிய ஆயுதங்களால் தாக்கப்பட்டள்ளனர் என்றும் புலனாயிற்று. இரத்தினபுரி மாவட்டத்தில் சூரியகந்தை மலைச்சரிவில் மூன்று பெரிய குழிகளில் 300 வரை பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. கிடைத்த தகவல்களின் பிரகாரம் எதிர்க்கட்சியான சுதந்திர கட்சியினரும், எழுத்தாளர்களும் அவ்விடத்திற்கு சென்று பல எலும்புக்கூடுகளை நிலத்தின் வெளியே எடுத்தனர். இச்சடலங்கள் ஜே. வி. பி யினருக்கு எதிராக அரசாங்கம் நடத்திய எதிர்ப்பயங்கரவாத கிளர்ச்சியில் தடுப்புக்காவலில் வைத்து கொல்லப்பட்ட மக்களே என்று கூறப்பட்டது. நீதி விசாரணைகள் நடந்தவண்ணம் உள்ளன. காணாமற் போனோரின் 600க்கும் அதிகமான உறவினர்கள் எம்பிலிப்பிட்டியா நீதிமன்றத்தில் தை 10ம் திகதி உறவினர்களின் உறுப்புகளை அடையாளம் காண்பதற்காக கூடியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளுக்கமைய பிரேத அகழ்வுகளையும் அதன் பரிசோதனைகளையும் சர்வதேச மன்னிப்புசபை வலியுறுத்தியுள்ளது. ஆனால் அரசாங்கமோ தகுதிவாய்ந்த பார்வையாளர்கள் முன்நிலையில் மேலும் அகழ்வுகளுக்கு சிரத்தை காட்டவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கையான கட்டாயமான மறைவுகள் சம்பந்தமான வேண்டுகோளை 92 மாசியில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி காணாமல்போனோரின் சடலங்கள் மீட்கப்படாமல் சம்பந்தப்பட்டவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின், வெளிநாடுகளின் தகுதிவாய்ந்த குழுக்களின் ஆதரவை பெறமுடியும்.

**3.3 கொலை மிரட்டல்கள்.**

தெற்கிலுள்ள எழுத்தாளர்கள் தொடர்ந்தும் கொலைமிரட்டல்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகி வருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஐப்பசி மாதத்தில் வடக்கே நடக்கும் ஆயுதப்போராட்டத்தை கண்டித்த இக்பால் என்பவர் பல கொலைமிரட்டல்களை பெற்றார். இவருடைய மனைவிக்கு ஆயுதப்போராட்டத்தில் பங்கேற்ற ஒரு குழுவினர் மலர்வளையம் ஒன்றினை அனுப்பியிருந்தனர். வேறு இரு எழுத்தாளர்களும் இவ்விடையம் பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதியதற்காக மிரட்டப்பட்டனர். சூரியகந்த புதைகுழி அகழ்வில் எதிர்க்கட்சி அரசியல் வாதிகளுக்காக பங்குபற்றிய வழக்கறிஞருக்கும், அவரது கார்ச்சாரதிக்கும் சூரியகந்தையிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில்வைத்து இனம்தெரியாதோரால் துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. எவருக்கும் காயங்கள் ஏற்படாதபோதும் வாகனம் சேதமுற்றது. சூரியகந்தையிலிருந்து கொழும்பு செல்லும் பாதையில் "வகாலத்தை" நகரின் மத்தியிலுள்ள தபால் நிலையத்தின் அருகே மண்டையோடும், எலும்புகளும் போடப்பட்டிருந்தன. இவை அகழ்வுகளை தொடரும் எதிர்க்கட்சியினருக்கும், எழுத்தாளர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாகவே கருதப்படுகிறது.

### பாதிப்பிலிருந்து விடுவிப்பு

காணாமல் போனவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டதாகவும், பல மனிதஉரிமை மீறல்களுக்கும், அநீதியான கொலைகளுக்கும் எதிராக சில வழக்குகள் தொடரப்பட்டதாகவும் கூறப்பட்டது. இதனால் எதுவித முன்னேற்றமும் இவ்வருட முடிவில் ஏற்படவில்லை. இவை மனிதஉரிமைகளுக்கான நீண்டகால அபிவிருத்திக்கும். சம்பந்தப்பட்டவர்களை பாதிப்பிலிருந்து மீட்பதற்கும் முக்கிய தடைகளாகவிருந்தது.

காணாமல் போனவர்களுக்காகவும், மனிதஉரிமை மீறல்களுக்காகவும் படையினருக்கு எதிராக பல சாட்சியங்கள் இருந்தும் ஒரு வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உதாரணமாக அதிக முக்கியத்துவம் மிக்க எம்பிலிப்பிட்டியா விசாரணையில் 89இறுதி—90 ஆரம்பம் காலப்பகுதியில் காணாமல் போன 32 மாணவர்கள் பற்றி இன்று வரை எவருமே தண்டிக்கப்படவில்லை. மனித உரிமையை நிலைநாட்டும் அணியின் தலைவரான இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதியின் விசாரணையின் பிரகாரம் காணாமல் போனோருக்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறப்பட்டது.

வேறு இது சம்பந்தமான வழக்குகள் காலவரையறையின்றி ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. இவற்றுள் வெல்லவாயாவில் கொல்லப்பட்ட மூன்று இளைஞர்கள். 89இல் இரத்தினபுரியில் லவுஸ்கெல உத்தியொகபூர்வமற்றமுறையில் கொலை செய்யப்பட்ட12 கிராமத்தினர்( 89—90 அறிக்கை). 90 மாசியில் கம்பஹா மாவட்ட கொலை ( வெளிநாட்டு சமாதானகுழு அறிக்கை 91—92) மற்றும் எப்பாவல அநுராதபுரத்தில் 90இல் நடந்த சந்திராவதியின் கற்பழிப்பு கொலை வழக்கு என்பன அடங்கும்.

முன்னர் நீண்டகாலம் சேவையிலிருந்த ஒரு காவல்துறை அதிகாரி வெளிநாட்டிலிருந்து 93 ஆனியில் நாடு திரும்பினார். இவர் 88இல் விஜயதாச வியனாராச்சி என்ற வழக்கறிஞரை சித்திரவதை செய்து கொலை செய்தமைக்காக நீதிமன்ற விசாரணைக்காக தேடப்பட்டவர். ஆனால் இவர் நாடு திரும்பியதும் நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. மாறாக அரச சேவையில் முக்கிய ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மயிலந்தனை பகுதியில் 39 தமிழ் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் 92 ஆவணி மாதம் கொலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கின் ஆரம்ப விசாரணைகள் மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. இதற்கருஅரசாங்கம் எதுவித காரணங்களும் அறிவிக்கவில்லை. இவ்வழக்கில் 23 படையினருக்கு எதிராக 83 குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன. வழக்கு இடமாற்றத்தால் சாட்சிகளுக்கு சிரமம் ஏற்பட்டது. நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய காரணத்தால் 10 சாட்சிகளுக்கும் பிடிவிறாந்து விடப்பட்டது. இவ்வழக்கின் பின்னர்கூட சிறிதளவு முன்னேற்றமே காணப்பட்டது.

### அரசாங்கத்தின் நடவடிக்கை.

மனிதாபிமானமற்ற, மனித நேயமற்ற செயல்களுக்கும், தண்டனைகள், துன்புறுத்தல்கள், மற்றும் தேவையற்ற, அதிகாரமற்ற கொலைகள் போன்றவற்றுக்காக கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்காக இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அதற்கான அழைப்பினை ஐ. நா சிறப்பு பிரதிநிதிக்கு விடுப்பதற்கு இன்னமும் தாமதிக்கிறது.

மனிதஉரிமை மீறல்களை தடுப்பதற்கு அரசினால் முன்னர் எடுக்கப்பட்ட பல திட்டங்கள் இன்னமும் அமுல்ப் படுத்தப்படவில்லை. அரச சட்ட அமைப்பில் அடிப்படை உரிமைகளை மாற்றுவதற்கு ஏற்ற திருத்தப் பிரேரணைகளை அரசாங்கம் 90 மார்கழியில் பிரசுரித்தது. அதனை மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆணைக்குழுவிடம் 91இல் வெளிப்படுத்தியது. ஆனால் அவை இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. தவிர 91இல் அரசு மனித உரிமைக்கான சபையை அமைப்பதாக அறிவித்தாலும் அதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனி மாதம் அவசரகால சட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. இதனால் இரகசிய தடுப்பு காவல்தடை விதிக்கும் நிலையங்களை வெளிப்படையாக பிரசுரிக்கப்படல் வேண்டும் என்று முதன்முறையாக நிர்ப்பந்தித்தது. தடுப்புக்காவல் ஒழுங்குகளில் மாற்றம் பூரண பாதுகாப்புகளை தடுப்புக்காவலில் இருப்போருக்கு வழங்கவில்லை. உதாரணமாக இவை இன்னும் வடக்கு கிழக்கில் காவல்துறையினரும், படையினரும் கைது செய்வோரை காலவரையின்றியும், நீண்டகாலத்திற்கும் தடுப்பு காவலில் வைத்திருக்கமுடிகிறது. மற்றும் கைது செய்தவுடன் கைது செய்தலுக்கு பொறுப்பானவர் மூலம் பத்திரம் ஒன்று வழங்குவதற்கும், தடுப்பு காவல் பற்றி உடனடியாக மனிதஉரிமை நடவடிக்கை அணியினருக்கு அறிவிப்பதும் அனேகமாக செயற்படுத்தப்படவில்லை. பொதுமக்களின் பாதுகாப்புக்கு தடையாகவிருந்த அவசரகால சட்டங்களை நீக்குவதற்கு பிரகடனப்படுத்தியும், 93 மார்கழியில் அரசு சார்பற்ற தாபனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அவற்றின் வரவு செலவுகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் புதிய விதிகளை கொணர்ந்துள்ளது. தை 11ம் திகதிக்கு பின்காணாமற் போனவர்களை பற்றி விசாரிக்கும் ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் சாரங்கள் மறுசேரமைக்கப்பட்டு இன்னும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அதன் மாற்றங்கள் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவது தொடர்பானவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

91 தையில் ஆரம்பிக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்பான விசாரணைகள் 21 புரட்டாதி 93இல் முடிவடைந்தன. இவ்வழக்கு முடிவுகளுக்கு அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவுமில்லை. அதன் அறிக்கைகளும் வருட முடிவுவரை பிரசரிக்கப்படவுமில்லை. மறு பரிசீலிக்கப்பட்ட சாரங்களின்படி தனிப்பட்ட மக்களின் குற்றச்சாட்டுகளின் தரத்தை ஆணைக்குழு பரிசீலித்து பின்பு பாதுகாப்பு படையினரை மேலதிக விசாரணைக்குட்படுத்துவதே. ஏனெனில் குற்றத்தாக்கலுக்கு முன்னர்அவற்றின் உண்மையை உறுதிப்படுத்துவதேயாகும்.

உறுதிப்படுத்தும் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றி வழங்கும் பத்திரங்களை பரிசீலிக்க அரசாங்கம் ஓர் உயர் காவல்துறை அதிகாரியின் கீழ் ஓர் அணியை நிறுவியது. 81 தை இற்கும் 91க்கும் இடையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளையே இந்த அணி முதல் கவனத்துக்கு எடுக்கும். இவர்கள் எடுக்கும் நடவடிக்கை காணாமல் போனவர்களின் பெயர்களை, தடுத்து வைத்திருக்கும் அல்லது கைது செய்யப்பட்டவரின் பெயர்ப்பட்டியலோடு ஒப்பிடுதல். பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்ட அல்லது அவர்களின் பாதுகாப்பில் இறந்தவர்களின் விசாரணை அவசரகாலசட்டத்தின் பிரகாரம் நடை— பெற்றிருப்பின் மற்றைய பட்டியல் கடவுச்சீட்டு பெற்று நாட்டைவிட்டு வெளியேறியவர்கள். இந்த விசாரணை காணாமற்போனவர்களுக்கு தகுந்த விசாரணையாக கருதாவிடினும் இது வெளிநாட்டு மக்களை சமாதானப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கையாகும். மேலும் கைது தடுப்பு பற்றிய விபரங்கள் பிழையானவையே. அவசரகால சட்டத்தின் கீழ் காவல்படையினரால் நீண்டகாலமாக சடலங்கள் விசாரணையின்றி களவாக அகற்றப்பட்டுள்ளன. கொலைகளுக்கு விசாரணைகள் நடைபெறின் அவசரகால சட்டத்தின் கீழ் காவல்படையின் வாக்குமூலமே போதுமானது. இது பல அதிகாரமற்ற கொலைகளையே வெளிக்கொணர்ந்தது.

**5. புலிகளின் மனிதஉரிமை மீறல்கள்.**

புலிகளின் உத்தரவாதமற்ற தடையின் கீழ் இன்னமும் பல அரசியல்கைதிகள் உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை. அவர்களின் பாதுகாப்பு பற்றியும் அச்சம் கொள்ளப்பட்டுள்ளது. புலிகளால் பணத்துக்காக பல ஆட்கடத்தல்கள் நடைபெற்றதாக அறிக்கைகள் கூறுகின்றன. இவர்களுள் களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபரும் ஒருவர். இவர் பின்பு விடுவிக்கப்பட்டார். பணம் அபகரிப்பதற்கு பல மிரட்டல்களும் இடம்பெற்றன. அவர்களுக்கு எதிரான மிரட்டல்களும் இடம் பெற்றன. கைது செய்யப்பட்டவர்களுள் புலிகளுக்கு எதிரானவர்களும், பாரிய குற்றங்களை புரிந்தவர்கள் என கருதப்பட்டவர்களும் கொலை செய்யப்பட்டனர். புலிகளின் பேச்சாளர் ஒருவர் காட்டிக்கொடுப்போருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என்பதை ஒப்புக் கொண்டார். ஆனால் தங்கள் இயக்கம் பல ஆயிரக்கணக்கான கைதிகளை தம்வசம் வைத்திருப்பதை மறுக்கிறார். அவர்கள் பாதுகாப்பிலுள்ள ஏனைய தமிழ் குழு அங்கத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளின் பழைய பிரதித்தலைவர் மாத்தையாவும் சகாக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆவணியில் அறிக்கைகள் கிடைத்தன. மாத்தையாவின் ஒரு சகா கார்த்திகையில் கொலை செய்யப்பட்டார். மாத்தையாவின் நிலமையும், சகாக்களின் நிலமையும் இன்னமும் தெரியவில்லை.

சர்வதேசிய செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் சில கைதிகளை விடுவித்த புலிகள் ஜானகபுராவில் அரசபடையினரின் தலத்தை ஆவணியில் தாக்கியபோது கைப்பற்றிய 7பொதுமக்களையும் 1990 இல் கைப்பற்றிய 6 காவல்துறையினரையும்

புலிகளின் பேச்சாளர் ஒருவரின் கூற்றுபடி கார்த்திகை 93இல் தியாகராசா செல்வநிதி, மனோகரன் உட்பட முப்பது தொடக்கம் நற்பது வரையான தமக்கு எதிர் அரசியல் கருத்துடையவர்களும் தடுப்புகாவலில் இருப்பதாக ஒப்புக்கொண்டார். இதுவே புலிகள் சகல நாட்டு சமாதானகுழுவுக்கு பகிரங்கமாக ஒப்புகொண்டவை. ஆனால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட இடங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் அவர்கள் உறவினர்களையும் சந்திக்கமுடியவில்லை. பொதுமக்கள் மீது பாரியதாக்குதல்கள் புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் கடந்த வருடங்களில் பலநூற்றுக்கணக்கானவர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேசிய சமாதானகுழுவினரின் நடவடிக்கைகள்.

மனித உரிமை பாதுகாப்புகளை செயற்படுத்துமாறு அரசாங்கத்துக்கு சிபார்சு செய்தனர். அரசாங்கம் எந்த அளவுக்கு அவற்றை செயற்படுத்தினர் என்பதை கணிப்பிட்டு பிரசுரித்தனர். ஆனால் முக்கியமான பாதுகாப்பு, விசாரணை முறைகள் ஆகியவற்றின் குறைபாடுகளை அரசாங்கம் இன்னமும் அமுல்ப் படுத்தவில்லை. 91க்கு முன்னர் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகள் தீவிரமாக்குவதற்கும், அரசியற் கைதிகளின் தீவிரவிசாரணைகளை அமுல்ப் படுத்துமாறும் மற்றும் தேவையற்ற கைதுகளை சர்வதேச சமாதான குழு நிர்ப்பந்தித்துள்ளது. மேலும் மனித உரிமையை மீறும் வகையில் விசாரணைகளை நடாத்தும் நபர்களைப் பற்றியும், தண்டனைகள் பற்றியும் விபரங்களைக் கோரினர்.

**சூரிய கந்தையில் பாரிய புதைகுழி அகழ்வில் ஈடுபடும் புத்திஜீவிகளின் பாதுகாப்பையும் அவர்களின் விசாரணையில் இடையூறு விளைவிக்கவேண்டாமென்றும், வேறு அகழ்வுகளை சட்ட மேதைகள் பார்வையிடுவதை தடைசெய்ய வேண்டாம் என்றும் கோரினர். இலங்கையின் மனிதஉரிமை மீறல்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதை குழுவில் ஆர்வம் காட்டியதையிட்டு சர்வதேசிய சமாதானக்குழு மகிழ்ச்சியடைகிறது. இதற்காக குழுவினர் ஜனாதிபதிக்கு பாராட்டுக் கடிதம் எழுதி அரசாங்கத்தின் சட்டமன்றம், அதிகாரம், நீதித்துறையூடாக சித்திரவதைத் தடுப்பை உறுதிப்படுத்தி நாடெங்கும் பரப்புவதாகவும் அறிவித்தது.**

**இலங்கை அரசாங்கத்தை அவர்கள் மேலும் வேண்டியவை—**

**அதிகார சபையில் 21, 22 இல் மேலதிக மாற்றங்களை செய்து அதில் சித்திரவதைக்கு எதிரான சபையை அங்கீகரிக்க வேண்டியும், அரசாங்கத்தை சேர்ந்தவர்களிடமிருந்தோ, தனிப்பட்ட நபர்களிடமிருந்தோ, வேறு நிர்வாகத்தவர்களிடமிருந்தோ வரும் இச்சபையின் மனித உரிமைகளைப் பற்றிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதனால் சபையின் செயற்பாடுகள் பாதுகாக்கப்படுகின்றது. புலிகளை அவர்கள் வேண்டுவது உலக மனிதாபிமான சட்டங்களை அவதானிக்கும்படியும், தனிப்பட்ட கைதிகளின் நிலமைகளை அறிவிக்கும்படியும், வேறு கொலைகளை நிறுத்துவதுமே.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எரிந்து கொண்டிருக்கும் நேரம்

— சேரன் — சித்திரை 86

இன்று வாய் திறவாதே
மௌனம் கொள்
இன்று மட்டும்

நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கின்ற
காலம் என்று வருமோ?

அல்ல எனில்
ஏன் இந்த அவலம்

முச்சந்தி மாமரத்தின் கீழ்
எரிந்த உடல்கள்
எழுந்த சுவாலைகளில்
கருகின குருத்துக்கள்

புகை
அச்சம்
கொடுமை
துயரம்
பீதி
அனைத்துமே கறுப்பு
அசுர நிறம்
துர்க்குறிகள் விரவி
இருளின் நிழல்கள் கவிய
உடல்களும் மனமும் எரிந்து
கொண்டிருக்கும் இந் நேரம்

குரல் ஒடுங்கிப்
பாடல் இழந்தன குயில்கள்
மிரட்சி தெறித்த விழிகள் நிமிர்த்தி
அலற மறந்தனர் சிறுவர்

சாம்பலைக் காற்றுக்
கொண்டு போயிற்று
எலும்புகளை நாய் கொண்டு
போயிற்று

மனிதத்தை துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில் வைத்துச்
சுட்டுப்
புறங்கையால்
மண்ணைத் தள்ளி மூடிவிட்டு வந்து
தெருவோரம் சுவரில்
குருதியுறைந்து
நியாயம் சொல்கிறார்கள்
நியாயம்!

யார் கேட்டார்
உம்பிடத்தில் நியாயத்தை?

எச்சிறு புல்லும்
எச்சிறு தளிரும்
எச்சிறு புள்ளும்
நம்பிக்கைகளின் உயிர்
மூச்சடனேயே

வளரும்
முதிரும்
மடியும் என நான் அறிவேன்
எனினும்
சாவங்கள் சூழ்ந்த
தாய்நாடு எமதென
துயரில் புலம்பும் முதியோர்
சிலருக்கு
இக்கணம் —
உயிர்களும் மனமும் எரிந்து
கொண்டிருக்கும்
இக்கணம்
நம்பிக்கையை எப்படி உரைப்பேன்?


புதைகுழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த உடைகளுக்கிடையில்
புத்திர சோகத்தில் நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த்
துளிகளுக்கிடையில்

'துர்ப்பாக்கியம் தற்காலிகமானது'
என்று குரலெழுப்ப
மெலிந்த உடலும்
வளர்ந்த தாடியும்
உடைந்த மனமும்
குழம்பிய தலையுமாய்
வார்த்தைகளுக்கு அலைகிறேன்
நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



தெருவோரம் படம் சிவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நம்பிக்கை

பேசுவதற்கும்
வாழ்வதற்கும் மட்டுமான உரிமையல்ல
நாம் வேண்டுவது!
எம் கால நண்பர்களுடன்
சேர்ந்து வாழ்வதற்கான உரிமையும்தான்.

எம் எழுத்தாளர் நண்பனைக் கொன்று
எம்மைத் தனிமைப் படுத்திய போது
எமது வாழ்வுரிமையை பறித்தீர்
எழுதும் எம்முரிமையை மறுத்தீர்.

எழுது கோலைவிட துப்பாக்கிக் குண்டுகள்
கூரானவையென நீவிர் எமக்குப்
போதிப்பதாக இருந்தால். . . . . ?
அதை விளங்குவதும்
நடைமுறைப்படுத்துவதும்
சிரமமில்லை சகோதரர்களே!

மனிதநேயம் மிக்கவரை
கொன்று குவிப்பதைக் கண்டும்
காணாதவர்போல் இருக்கும்
மக்கள் கொடியவரா ? அல்லது. . . .
என்ற மனப்போரில் எமது
எழுது கோல்கள் மழுங்கிப் போனது
பிழைத்தீர் தந்திரக் கொலைஞர்களே!

இருந்தும் இன்னும் நம்பிக்கை.
இந்த சர்வதேச சமூகத்தின் மீதும்
எழுத மறுக்கும் எம்பேனா மீதும்

நீங்கள் தண்டிக்கப் படுவீர்கள்!

—விதுரன்—

## மரண ஏற்பாடு

இந்த வானம் இனியும் இருப்பதென்பது
இரவுகளை அச்சுறுத்தும்
சாமம் கனத்தது
உலகின் எல்லா மூலைகளிலும்
கரையான்கள் தயாராகிக் கொண்டன

புவியின் எல்லைக்குள்
இரவு தொடர்வதை உறுதிப்படுத்த
ஒளிக் கதிர்களை அண்டத்தில் உண்டு தீர்க்க
அவை புறப்பட்டன.

இருட்டு இருட்டு இனி எங்கிலும் இருட்டு
குஞ்சுக்கரையான்கள் கோசித்துக்கொண்டன.
பெரு முகடுகள் நோக்கி படையணிகள் நகர்ந்தன
உச்சங்களில்
வானம் நோக்கிய சவால்கள் விடப்பட்டன.

கதிர்களை விடுத்து
சூரியர்களை அழி சூரியர்களை அழி
ஒரு பருத்த கரையான் கட்டளையிட்டது.
அண்டத்தில் அனைத்து சூரியர்களையும்
அரித்து அழித்து விடுவதற்காய்
வானம் நோக்கி புற்றுகள் உயர்ந்தன
இனி இரவுகளில்
நல்லவைகள் தீர்மானிக்கப்படும்
சாம்பர் பூசிய கரையான்கள்
மௌனத்தை வலியுறுத்திக்கொள்ளும்

ஒளியின் மூலங்களை
எவருமே அறிதலாகாது
ஒளிபற்றிய கனவுகளை
எல்லோரும் தவிர்த்தேயாக வேண்டும்
வானம் என்பது
பொய்யானதும் துரோகம் நிறைந்ததும்
இது கரையான்களின் கட்டளை.

பா.அ.ஜயகரன்
01—06—1994.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்